# வீறுகவியரசர்
# முடியரசன் கவிதைகள்
## பொருண்மை வகைத் தொகுப்பு (சான்றோர்)

தொகுப்பாசிரியர்
## பாரி முடியரசன்

**உள்ளுறை** **பக்கம்**


பதிப்புரை
முன்னுரை
சான்றோர்
1. கவிமணி
2. திரு.வி.க.
3. மணிவிழா வாழ்த்து
4. பாரதிதாசன்
5. தமிழர் தந்தை
6. வாழ்த்துகிறார்
7. வாயுறை வாழ்த்து
8. கா அப்பா
9. இள ஞாயிறு
10. மறைந்தாரோ?
11. எங்கே சென்றீரோ?
12. ஆறாத்துயரம்
13. நெஞ்சம்கலந்த தாய்
14. திரு. வி. க
15. அழகப்பர்
16. எனக்கும் ஓர் அதியன்
17. அறிஞர் வாழ்க!
18. புகழ்க் கம்பன்
19. பிறவிக் கவிஞன்
20. பாரதிதாசன் என் அரசன்
21. வெண்தாடி வேந்தர்
22. தொண்டுக்கிலக்கணங்கண்டவர்
23. பல்லாண்டு பல்லாண்டு
24. காஞ்சிக் கதிரவன்
25. தமிழ்நாட்டுப் பேரரண்
26. தலைவா வருக
27. காக்குங் கைகள்
28. ஆழம் அறியா அன்புள்ளம்
29. அண்ணா வருக
30. யாழ் உடைந்தது
31. அடக்கத்தை அடக்கம் செய்தோம்
32. நெஞ்சம் நெக்குருகும்
33. பண்பு மலர்
34. நன்றி காட்டுக
35. கண்ணீரை யார் துடைப்பார்
36. உளங்கவர் புலவர்
37. இளங்கோவடிகள்

38. ஞாயிறு போற்றுதும்
39. மீண்டது பொற்காலம்
40. என்றும் வாழ்வர்
41. தமிழ்த் தொண்டு
42. அப்பரடிகள்
43. எழுத்து மலை
44. வாழிய தமிழ் முனிவர்
45. வாழிய மனிதநேயம்
46. பழமை வேண்டான்.
47. தொடர்வோம் தொண்டு
48. புதுக்கோட்டைக் காந்தி
49. மணிவிழா வாழ்த்து
50. வாழும் அண்ணாமலை
51. தமிழ்க்கடல்
52. மாணிக்கப் புலவன்
53. குழந்தைக் கவிஞர்
54. பதிப்புச் செம்மல்
55. உடன் பிறவாத் தமக்கை
56. நட்பிற் பெரியன்
57. பொற்கி பெற்றவன்
58. வணிக நோக்கறியான்
59. கலைத்திறன் காட்டும் கணபதி
60. பழனி தந்த பாட்டு
61. பாளை நகர்ப்பண்பாளன்
62. உயர்ந்தவன்
63. அன்பு தரும் அழகன்
64. தோள் தந்தான்
65. அழகின் சிரிப்பில் கலைஞர்
66. முறுவலிக்கும் இளையவனே
67. தூற்றலுக்குத் துவளாதான்
68. என்றும் உயர்க எழில் முல்லை
69. வாழிய கவிதை
70. உலகத் தமிழ்க்கழக வாழ்த்து

**வீறுகவியரசர் முடியரசனார் புகழ் மாலை**
**வீறுகவியரசர் முடியரசனார் வாழ்க்கைக் குறிப்பு**
**பாரி முடியரசன் பற்றி**

# சான்றோர்

**[வீறுகவியரசர் முடியரசனார் ‘சான்றோர்’ பற்றிப் பாடிய கவிதைகள் இப்பொருண்மையில் தொகுக்கப்பட்டுள்ளன]**

**(இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைககளின் தலைப்புகளுக்குக் கீழ், அக்கவிதைகள் இடம்பெற்ற நூல்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப் பெற்றுள்ளன)**

## 1. கவிமணி
**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

நேரிசை வெண்பா

செந்தமிழ்க்கு வாழ்வளித்தோன்
சேர்ந்தோர்க்கு நண்பளித்தோன்
சிந்தையினைச் செம்மைக்கே
தந்துவந்தோன்—உந்திஎழும்
செய்யுளுக்கு வாயளித்தோன்
**தேசிகவி நாயகனை**
உய்யவரு வள்ளலென
ஒது. 1

ஒன்றிரண்டு கற்றவுடன்
ஒப்புண்டோ இங்கெமக்
கென்றலைவோர் மிக்குவரும்
இந்நாளில் – துன்றியநல்
நூலுணர்வும் நுண்மாண்
நுழைபுலமும் வாய்த்தும்எப்
பாலும் பணிவதவர்
பண்பு. 2

ஆத்தங் குடியூரில்
அண்ணா மலையரசர்
போர்த்திப் புகழ்செய்தார்
பொன்னாடை – ஏத்தெல்லாம்
எற்கன்று தாய்த்தமிழுக்
கென்ற கவிமணியார்
நிற்கின்றார் என்னுள்
நிறைந்து. 3

---

**பாடற் குறிப்பு:—**செட்டிநாட்டரசர், கவிமணி அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துப் போற்றிச் சிறப்பித்த காட்சியைக் கண்டு களித்துப் பாடிய பாடல்.

## 2. திரு.வி.க.
**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

சமயங்கள் எத்துணையோ அனைத்தும் கற்றுச்
சமத்துவமே கண்டுணர்ந்தார்; சைவர் புத்தர்
சமணரென்றும் கிறித்துமுக மதிய ரென்றும்
சச்சரவேன்? இறைஒன்றை உணர்க என்றார்;
தமரென்றும் பிறரென்றும் காணார்; நல்ல
தமிழ்நாடும் திராவிடமும் இந்தி யாவும்
நமதென்பார்; உலகம்நம தென்றும் சொல்வார்;
நாகாக்கும் நாகரிகம் அமையப் பெற்றார் 1

காந்தியத்து நெறிநிற்பார், கடவுட் கொள்கை
கனிந்திருப்பார், பொதுவுடைமைக் கொள்கை ஒன்றே
சாந்தியினை அமைதியினை நல்கும் என்று
சமரசமே வேண்டிடுவார்; எந்த நாளும்
தாந்தீமை கருதலிலார் எவரை யேனும்
தாழ்ச்சியுரை செப்பறியார், இனிய சொல்லே
ஈந்திடுவார்; வேறுபடு கருத்துக் கொண்ட
எவரையுமே பகைத்தறியார், நண்பே காண்பார் 2

சமயமென்றும் தொழிலாளர் இயக்க மென்றும்
சார்ந்தோருள் எவரைவிரும் பிடுவீர் என்றால்,
சமயமுறின் பின்னவர்க்கே என்வி ருப்பைத்

தருவேன்என் றறுதியிட்டுச் சொன்ன சொல்லில்
இமயமலை பெயர்ந்தாலும் பெயரா வுள்ளம்
எதிர்ப்புக்கும் கொடுஞ்சிறைக்கும் அஞ்சா வூக்கம்,
அமையவரு பெற்றியினர்; **மார்க்சு** சொன்ன
அறவுரையைத் தெளிவாக உணர்ந்த சான்றோர் 3

பெண்ணினமும் ஆணினமும் சமுதா யத்தின்
பெருமைமிகும் இருகண்கள்; பெண்மை என்னும்
கண்ணொளியைக் கெடுத்தனரே உலகோர் அந்தோ!
கருணைஒளிர் தாயினத்தைத் தாழ்த்தல் நன்றோ?
எண்ணிவிடின் நோகின்ற தென்றன் நெஞ்சம்
ஏனிந்த ஒரவஞ்சம்? நேர்மை வேண்டும்;
பெண்மைஇன்றி ஆணில்லை அதனால் பெண்மை
பேணிடுக சமுதாயம் தழைக்க என்றார் 4

'பெற்றெடுத்த தமிழ்த்தாயின் பாலை உண்டோன்
பெறுமின்பம் உயரின்பம்; வீடு பேற்றை
எற்றுக்காம் எனக்கருதச் செய்யும் அந்த
இன்பமது; மற்றும்தாய் மொழியை நன்கு
கற்றபிற கயல்மொழியைக் கற்றல் வேண்டும்
கனித்தமிழை உயிர்த்தாயைத் தவிக்க விட்டு
நிற்றல்பெரும் பிழை?'என்றார்! தாய்த விக்க
நினைப்பாரோ எவரேனும் அறமே செய்ய? 5

அன்புமிக்கார் ஆனாலும் அடிமை ஆகார்
அறிவுமிக்கார் ஆயினுமே செருக்குக் கொள்ளார்,
பின்புமவர் பணிவுமிக்கார் இருந்தும் அன்னார்
பெருமிதத்திற் கடுகளவும் குன்றார், எங்கும்
இன்புமொழி பேசினுமே கருத்து வேறு
காணுங்கால் இடித்துரைக்கத் தவறார், நெஞ்சில்
வன்பில்லார் எனினும்நல்ல உறுதி கொண்டார்,
வரும்ஆசை அற்றார்தாம் துறவி அல்லர் 6

தொண்டுள்ளம், பழமைஒளிர் புதுமை, உண்மை,
தூய்மை, அன்பு, தமிழ்நெஞ்சம், பொதுமை, பெண்மை,
கண்டன்ன இனியமொழி, எளிமை, நண்பு,
கருத்தீர்க்கும் சொல்வன்மை, அறிவு, கல்வி,
விண்டுரைக்க இயலாத அமைதி, வீரம்,
வினைஇன்னா செய்யாமை, ஆன்ற விந்து
கண்டடங்கு கொள்கைஎன அறங்க ளாகக்
காணுகின்ற அத்தனையும் அமைந்த சான்றோர் 7

## 3. மணிவிழா வாழ்த்து
**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

தமிழுருவே! தமிழ்காக்கும் போர்க்க ளத்தே
தலை நிமிர்ந்து முன்னிற்கும் இளைஞ ரேறே!
தமருடனே மலர்முகத்துத் தமக்கை சேர்த்துப்
பொதுப்பணியே தம்பணிஎன் றாற்றும் செம்மால்!
இமையளவும் ஓய்வின்றி உடல்பே ணாமல்
இரவுபகல் உழைக்கின்ற தாத்தா! இந்நாள்
உமையணுகும் நலமிக்க அறுபான் ஆண்டு
நிறைவினைக்கண் டுளம்நிறைய உவப்புக் கொண்டேன் 1

போர்வாளும் விடுதலையும் விகடன் கல்கி
பொதிந்துள்ள பையொன்று கையில் உண்டு
சேர்வாரும் சேராரும் வேறு கொள்கை
செல்வாரும் நும்சொல்லில் அடங்கி நின்று
நேர்வருவார் எனுமுண்மை காட்டும் அப்பை;
நெடுஞ்சூழ்ச்சி நம்மொழிமேல் போர்தொ டுத்தால்

நேர்நிற்க உரமுண்டென் றெடுத்துக் காட்ட
  நிலத்தூன்றாத் தடியுண்டு மற்றோர் கையில் 2

இந்நாட்டுத் தமிழ்ப்புலவர் உரிமை யின்றி
  இழிநிலையில் உள்ளநிலை கண்டு வெம்பி
என்னாட்டுத் தமிழ்ப்புலவர் ஒன்று சேர
  ஏற்றமுற உரிமைபெறக் கழகம் கண்டீர்!
தென்னாட்டு மொழியறியா நிலையில் இங்கே
  திணித்துவிட்ட முதலிந்திப் போரில் இந்தி
வெந்காட்டச் செய்தசெயல் எண்ணிப் பார்ப்பின்
  விசையொடிந்த உள்ளத்தே வீரம் தோன்றும் 3

சிறியர்க்கும் தமைமதித்தால் பணிவு காட்டிச்
  செல்வத்தால் மற்றவற்றால் பெரிய ரேனும்
சிறிதளவு தருக்குற்றால் மதித்தி டாமல்
  செம்மாந்து செல்சங்கப் புலவர் தம்பால்
நிறைந்திருந்த தன்மதிப்பு நும்பால் கண்டேன்
  நேராரும் வயமாகும் இன்சொல் கொண்டீர்!
நெறிபிறழாத் தகவுடையீர்! அறுபான் ஆண்டு
  நிறைவுபெறும் நன்னாளில் வாழ்த்து கின்றேன் 4

எனதுதிரு மணம்நடத்தித் தந்த தன்மை,
  என்கவிதை சிறுகதையை நோக்கி உண்மை
மனமுடனே பாராட்டும் பெருமை தன்னை
  மாணவர்க்குத் தமிழ்சொல்லி அயர்ந்து வந்தால்
கனிவுடனே "முடியரசன்" என்று தோள்மேல்
  கையிட்டுச் சிற்றுண்டிக் கடைக்குச் செல்லும்
நனியன்பை நான்துணைவி பிரிவால் வாடி
  நலிந்திருக்க அக்குறிப்பை முகத்தால் நோக்கி 5

பொருள்தந்து போய்வாவென் றென்னைப் போக்கிப்
  பூரித்த தகவைச்"சிங் கார வேலன்
பொரிநெருப்பு முடியரசன் குளிர்நீர்" என்ற
  பொன்னுரையை, எம்மிடத்துக் குறைகள் காணின்
கருவிழியும் செவ்விழியாய்ச் சினந்தும் அந்தக்
  கணப்பொழுதே அருள்பொழிந்தும் பொதுப்ப ணிக்கே
இரவுபல விழித்தெம்மை ஏவும் நெஞ்சை
  இத்தனையும் தாத்தா!நான் மறத்தல் ஆமோ? 6

உழைப்பவர்க்கே உரித்தாய பொங்கல் நாளில்
  உயர்தமிழைத் தமிழினத்தை ஓங்கச் செய்ய
உழைப்பதற்கே உரம்பெற்று வாழ்க! என்றென்
  றுமையின்று முழுமனத்தால் வாழ்த்து கின்றேன்
குழைத்தெடுத்த தேன்பொங்கல் உண்ணும் போழ்து
  கூறுகிறேன் வாழ்த்துரையை **மயிலை முத்தே!**
மழைத்துளியால் வளர்பயிர்போல் நும்மு ழைப்பால்
  வாழ்கதமிழ் ஆட்சிபெற்று வாழ்க! வாழ்க! 7

---

**பாடற் குறிப்பு:–** மாணவர் மன்ற நிறுவனர், தலைவர், பேராசிரியர் மயிலை.சிவமுத்து அவர்களின் மணிவிழாவுக்காகப் பாடப் பெற்ற பாடல்.

## 4. பாரதிதாசன்

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

பாண்டியனை நினைப்பூட்டும் பார்வையினன்
  பாழான பழமை வேண்டான்
மாண்டநல்ல சங்கத்தார் தமைப்போல்வான்
  மனத்தில்எழும் புதுக்க ருத்தை

வேண்டியமட் டுங்கொடுப்பான் வீரத்தை
ஊட்டிடுவான் ஊழிக் காலம்
தாண்டியநல் தமிழ்மொழிமேல் மீசையின்மேல்
தணியாத காதல் கொண்டான் 1

இனிஅஞ்சார் தமிழ்மக்கள் தமிழுக்கோர்
இடுக்கண்இனி வருதல் இல்லை
கனிமொழியில் காதலைத்தான் பகுத்தறிவுக்
கதிரைத்தான் காட்டி விட்டான்
நனிமகிழ்ந்து தமிழரெல்லாம் போற்றுகிறார்
நம்மினத்தார் விளங்கப் பாண்டி
இனிதளித்த பரிசிலவன் எதிர்ப்பஞ்சா
இயற்கவிஞன் ஏறு போல்வான் 2

கடவுளரைப் பாடிமகிழ்ந் ததன்பிறகு
காலத்தை எதிர்த்து நின்று
மடமையினை மாய்த்திட்டான் பாரதியின்
தாசனென மதிப்பும் பெற்றான்
திடமுடனே அவன்கருத்தைச் செப்புகிறான்
தீந்தமிழின் உரிமை காக்க
உடல்கொடுப்பேன் என்கின்றான் அவனளிக்கும்
ஓவியங்கள் வாழ்க நன்றே! 3

எண்சீர் விருத்தம்

கலைப்பெயரால் கதைகட்டிப் பாழ்ப டுத்தும்
கருத்தொதுக்கிப் புதுநெறியிற் சென்ற போதும்
இலக்கணத்தைப் புறக்கணியான் தமிழி யக்கம்
எனச்சொல்லி மொழிவளர வழிகள் தந்தான்
மலைப்பெய்தா எளியநடைக் கவிகள் தந்தான்
மனம்கவரக் 'குயில்' இதழால் இசைத்த பாடல்
கலைக்கடலாம் அவன்தந்த நாட்டு வாழ்த்து
கருத்துக்கு நல்விருந்தாம் இசைப்பெ ருக்காம் 4

இனத்திற்குள் பகைகொண்டு சாதிச் சேற்றில்
இணைந்திருந்த நானதனை மறக்க, ஊக்கம்
எனக்கூட்டிக் கரைசேரச் செய்த தந்த
இயற்கவிஞன் பாடலொன்றே! மணந்த பின்னர்
மனக்கவலை ஒழித்துவளர் இன்பம் பொங்க
வாழ்வதற்குக் குடும்பவிளக் களித்தான் அன்னான்;
வனப்புடைய கவியுலகைக் காண எற்கு
வழிகாட்டித் திருப்புமுனை ஆகி நின்றான் 5

## 5. தமிழர் தந்தை
(நூல்:—முடியரசன் கவிதைகள்)

எண்சீர் விருத்தம்

தீமைதரும் தமிழ்ப்பகைவர் தம்மைச் சார்ந்து
திருநாட்டின் பெருமையினை, தமிழ்ப்பண் பாட்டை
ஏமமுறும் இலக்கியமாம் செல்வந் தன்னை
இத்தனையும் அழித்தொழித்தோம்; அந்த நாளில்
ஊமைஎன இருந்தானா? இல்லை இல்லை;
உயர்தந்தை கடமைகளை உணர்ந்த மேலோன்
தீமைஎன இடித்துரைத்தான் பகைவர் தம்மைச்
சேராதீர் எனப்புகன்றான் எங்கள் தந்தை 1

இனிமைமிகு தமிழ்மொழியைப் படித்தல் இன்றி
இங்குவந்த சழக்கரையே கூடி நின்று
கனிவுதரும் அவர்வஞ்சப் பேச்சில் சிக்கிக்
கண்கலங்கி நின்றிருந்தோம், அந்த நாளில்
நனியன்பு மிக்கநல்லான் "மக்காள்! அந்தப்

புல்லுருவி நாடாதீர்! உறிஞ்சித் தீர்ப்பர்
இனிஉங்கள் தமிழ்பயில்வீர்" என்றே எம்மை
இடித்துரைத்துத் திருத்தினன்காண் எங்கள் தந்தை 2

புதுமைமிகும் இலக்கியமாம் செல்வந் தந்தான்,
புரட்சிசெய வீரரென ஆக்கி விட்டான்,
பதுமைஎன வாழாமல் தமிழ மக்கள்
பகுத்தறிவால் அவைமுன்பில் இருக்கச் செய்தான்,
எதுகையுடன் மோனைபெறும் கவிதை யாக்கும்
இளங்கவிஞர் பரம்பரையைத் தோற்று வித்தான்,
அதுவன்றித் தமிழ்நலமே நாடு கின்றான்
அக்கவிபா **ரதிதாசன்** தந்தை யன்றோ? 3

---

**பாடற் குறிப்பு:–** கவியரசர் பாரதிதாசனார் மணி விழா மலருக்காகப் 'பொன்னி' இதழார் தந்த தலைப்பில் பாடப் பெற்ற பாடல்.

## 6. வாழ்த்துகிறார்
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

பின்னணியில் நின்றஒரு சமுதா யத்தைப்
பிறரோடு சமமாகக் கொணர்வான் வேண்டி
முன்னணியில் நின்றமையால் வெற்றி பெற்றான்,
முற்போக்குக் கொள்கைகளை முரசங் கொட்டிச்
சொன்னபடி வாழ்க்கையிலும் செய்து காட்டிச்
சுயநலத்தார் வகுத்தமைத்த சாதிச் சூழ்ச்சி
பின்னடையச் செய்தானென் றிளைஞர் எல்லாம்
பெருமகிழ்வால் வாழ்த்துகிறார் வாழ்க என்றே 1

பெண்ணினத்தை அச்சுறுத்தி விதவை என்ற
பெருங்கொடுமை வழக்கத்தைப் பழக்க மாக்கிக்
கண்விழித்துப் பாராமல் தாழ்த்தி வந்தோம்;
கண்சிவக்க மனம்பதறத் துடித்தெ ழுந்தான்,
எண்ணியிவண் மறுமணத்துக் கழகம் கண்டான்,
எத்தனையோ மகளிர்க்கு வாழ்வு தந்து
கண்ணிறங்கும் நீர்த்துடைத்தான் ஆத லாலக்
காரிகையார் வாழ்த்துகிறார் வாழ்க என்றே 2

நகைமுகத்தன், இன்சொல்லன், குறைகள் காணின்
நாகரிக வன்சொல்லன், தமிழிற் பாடாப்
பகையுளத்தார் நாணும்வகை பேசும் ஆற்றல்
படைத்தவன்நம் தமிழிசையே தமிழர் நாட்டில்
மிகப்பெருகப் பணிபுரிந்தான், சமயப் பேரால்
மிகைசெய்தோர் மறைந்தொதுங்கச் செய்தான், நல்ல
தகையுளத்தன், சீர்திருத்த நோக்கங் கொண்டான்
ஆதலினால் தமிழரெலாம் வாழ்த்து கின்றார் 3

நேரிசை வெண்பா

ஆண்டறுப தானாலும்
அன்றேபோல் இன்றளவும்
காண்டகுநல் தோற்றத்தன்
காசினியில் – மீண்டும்பல்
ஆண்டாண்டு வாழ்ந்திடுக
அன்பன் முருகப்பன்
ஈண்டும் புகழோ
டிருந்து 4

கம்பன் புகன்றதெனக்
கட்டுரைத்த பாக்கடலுள்

நம்பிக் குளித்து
நலங்கண்டான் – அம்புவிக்கு
முத்தெடுத்துக் கோத்து
முழுநூலில் தந்திட்டான்
நத்துதமிழ்ப் பாவை
நயந்து 5

முத்தெடுக்க மூழ்கி
முருகப்பா பட்டதுயர்
தித்திக்கும் செந்தமிழே
தேர்ந்துணரும் – வைத்திருந்த
தஞ்சைமன்னன் ஏடுரைக்கும்
தக்கபுல வோர்குழுவின்
நெஞ்சுரைக்கும் இவ்வுலகில்
நின்று.

---

**பாடற் குறிப்பு:–** அமராவதி புதூர் மகளிர் இல்லங் கண்ட திரு.சொ.முருகப்பனார் மணி விழாவுக்காகப் பாடப் பெற்ற பாடல்.

## 7. வாயுறை வாழ்த்து

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

திருத்தக்கன் தருசிந்தா மணியில் இன்பத்
தேனுண்டு சங்கத்து நூல்தி ளைத்துச்
சிரித்துவரும் தமிழண்ணல்! நாச்சி யப்பத்
திருவாளர் தருசிந்தா மணியை இல்லின்
பொறுப்பேற்கும் காதலியாப் பெறுதல் கண்டு
பூரிப்புக் கொள்கின்றேன்; உங்கள் வாழ்வு
கருத்துவளர் காவியமும் புலவ னும்மாம்,
கவிநயமாம் பெறுமக்கள் என்ன வாழ்க 1

தான்சமைத்த சுவையுணவை இனிதென் றுண்ணும்
தலைவனைக்கண் டுளமகிழ்ந்தாள் தலைவி என்று
நான்சுவைத்த குறுந்தொகைப்பாட் டுரைக்கும் அந்த
நலமேபோல் சுவைவாழ்வு வாழ்க தோழி!
தேன்பழுத்த தமிழ்மொழிக்கே ஆக்கந் தேடும்
தெளிவுரைகள் ஆய்வுரைகள் எழுத வல்லான்
மேன்மக்கள் குழுவில்இவன் அறிஞன் என்ன
மிளிர்வதுநின் கையில்தான் உணர்தல் வேண்டும் 2

அனிச்சத்தின் மலர்மோப்பக் குழையும் என்பர்;
அன்பன்முகம், உளம்திரிந்து நினைத்தால் வாடும்;
மனத்திருக்கும் உண்மையினை நின்பால் சொன்னேன்
மாதரசே! அடைக்கம்மை நல்லாய்! என்றன்
இனித்திருக்கும் நண்பன்முகம் சுருங்கா வண்ணம்
இல்லறத்தைப் பேணிடுக, இனிய பேசி
மனக்கினிய செய்திடுக, குறிப்ப றிந்து
மனைவிளக்காய் அவன்மகிழ வாழ்க வாழ்க 3

ஒருவர்பிழை பொறுத்திடுதல் இருவர் நட்பாம்;
உயர்நூல்கள் பயின்றாலும் வாழ்க்கை ஏட்டில்
ஒருவருளம் பிறர்பயில வேண்டும்; வேண்டின்
உண்மைநிலை இன்பநிலை காணல் வாய்க்கும்;
பெருகிடுநல் வாழ்வுக்கு மனைவி மக்கள்
பேரணியாம் மங்கலமாம் என்பர் ஆன்றோர்;
அருகிருந்து திறந்துள்ளம் அளவளாவும்
அன்புளத்தன் உயிர்நண்பன் ஒளிவி ளக்காம் 4

உளமொத்த இரட்டையராய் உடன்பி றப்பாய்
உணர்வொன்றாய்ப் பழகிவரும் நண்பன் தன்னை

உளமொத்த துணையாகக் கொள்க என்றே
உன்கையில் அடைக்கலமாத் தந்தேன்; எங்கள்
உளமொத்த வாழ்வேபோல் வாழ்க அன்பை
உயிரென்று போற்றிடுக; இன்பம் பொங்க
வளமிக்க தமிழ்பாடும் என்றன் நாவால்
வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன் வாழ்த்து கின்றேன் 5

---

**பாடற் குறிப்பு:–** கெழுதகை நண்பர் திரு.தமிழண்ணலுக்கும் அடைக்கம்மை என்ற சிந்தாமணிக்கும் நடைபெற்ற திருமணத்தில் பாடப்பெற்ற பாடல்.

## 8. கா அப்பா

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

செந்தமிழைப் பயின்றமையால் தலைமை பெற்ற
சிலரிங்குத் தமிழுக்கே ஊறு தேடி
வந்ததுண்டு; தமிழ்வாழ முயல்வா ராயின்
வாழ்வுகெடும் புகழில்லை பொருளும் இல்லை
இந்தநிலை இருந்தமையால் அஞ்சி யஞ்சி
இருந்தார்கள்; ஆனால்நீ தமிழைக் காக்க
எந்தநிலை நிகழ்ந்தாலும் தயங்க வில்லை
எவருக்கும் அஞ்சவில்லை துணிந்து நின்றாய் 1

பன்மொழிகள் பயின்றவர்கள் நமது நாட்டில்
பலர்பலராய் இருக்கின்றார்; தமிழைக் காக்க
நன்முயற்சி அவரெல்லாம் செய்த துண்டா?
நாமுண்டு சோறுண்டென் றிருந்து விட்டார்;
முன்வந்து முயல்பவரைக் குறையும் சொல்வார்
முத்தமிழைச் செந்தமிழைப் பழித்துக் கூறும்
புன்மொழியும் புகன்றிடுவார் இவர்கள் எல்லாம்
புலவரெனத் தமிழகத்தில் திரியக் கண்டோம் 2

நுண்ணறிவுத் திறமுடையாய்! நீயும் இங்கு
நுனித்துணர்ந்தாய் பலமொழியும்; ஆயி னும்நம்
பண்ணுயர்ந்த தமிழ்மொழிக்கே நின்றன் நெஞ்சைப்
பரிந்தளித்தாய்! தமிழ்ப்பற்றே மிக்கு நின்றாய்!
அண்ணலுன்போல் பன்மொழியிற் புலவர் என்போர்
ஆருள்ளார் தமிழ்காக்க? அதனா லன்றோ
கண்ணியத்தால் உயர்தமிழ்த்தாய், தீங்கு வந்தால்
**காஅப்பா து**ரைமகனே என்று சொன்னாள் 3

அன்றொருநாள் தலைநகரில் ஒன்றுகூடி
அறப்போரைத் தொடுத்தார்கள் தமிழ வீரர்;
நின்றனைநீ முன்னணியில் நாட்டுப் பற்றால்
நிலைமறந்து துணிந்தங்கு நிற்கும் போழ்து
நன்றுடையாய்! பன்மொழியில் புலமை மிக்காய்!
நடமாடும் நூல்நிலையம் போன்றாய்! பண்புக்
குன்றனையாய்! தரமறியா அரசு செய்த
கொடுமைகளை நினைத்துவிடின் கொதிக்கும் நெஞ்சம் 4

பெற்றெடுத்த தாய்நாட்டைக் காத லித்தாய்,
பேசுகின்ற செந்தமிழைக் காத லித்தாய்,
பற்றெதற்குக் கொண்டனைநீ பாழும் நாட்டில்?
பன்மொழிகள் கற்றனையே யாது கண்டாய்?
பெற்றிருக்கும் திறமெல்லாம் புலமை எல்லாம்
பிழைப்புக்கு வழியாக்க முயன்றா யல்லை;
கற்றவனே! ஒருசிறிது தமிழைத் தாழ்த்திக்
கழறுவையேல் வளமெல்லாம் உனக்கே யன்றோ? 5

நின்வாழ்வு கருதுகிலை தமிழின் வாழ்வே

நிலையாக்கக் கருதுகின்றாய் மொழியும் நாடும்
பொன்வாழ்வு பெறுவதற்கே முயல்வோய்! நின்னைப்
போற்றுகின்றேன்; வாழ்த்துகின்றேன்; மானங் கெட்ட
புன்வாழ்வு வாழ்பவர்கள் வாழட்டும்; நீ
புதுவாழ்வு தமிழ்வாழ்வு வாழ்க! நாளை
தென்னாடு வாழ்த்துவது நின்போல் வாழ்ந்த
தெள்ளியரை நல்லவரை யன்றோ? ஆம்ஆம் 6

உலகத்தில் முதன்மைபெறும் ருசிய நாட்டுக்
குனையழைத்தல் கண்டுவகை கொண்டோம்; முன்பு
பலகணவர்க் கொருமனைவி யாகி நின்ற
பாஞ்சாலி கதையுடனே இராம காதை
குலவியங்குக் குடிபோகக் கண்டோம்; நம்மோர்
குலப்பெருமை கூறுகதை நுழைய வில்லை;
நிலவுபுகழ் நம்பெருமை அனைத்துங் கொண்டு
நீதூது செல்கின்றாய் வாழ்த்து கின்றோம் 7

நின்புலமைத் திறங்கண்டு மகிழ்ந்து போற்றி
நிலைத்துபுகழ்ப் பல்கலைசேர் கழகம் தானே
முன்வந்து பேரறிஞர் என்னும் பட்டம்
முறிஎழுதித் தந்திருக்க வேண்டும்; இன்னும்
அன்பதற்கு வரவில்லை யேனும் அங்கே
அமர்ந்துபணி ஆற்றுதற்கோர் பதவி தந்து
நன்மதிப்பைப் பெற்றதற்கு நன்றி சொல்வோம்
நாளைக்கே அப்பெயரும் வந்து சேரும் 8

மயலறுக்கும் நெறிமுறைகள் எழுதிக் காட்டி
மாந்தருக்கு வழிகாட்டி விளங்கும் நாட்டில்
இயலறிவு மொழியறிவு கல்வி கேள்வி
இத்தனையும் பெற்றிருப்பர் எழுத்தர் என்போர்;
பயனளிக்கும் இவ்வொன்றும் இல்லா ராகிப்
பாழ்பட்ட கதைகளையே எழுதிக் கொட்டிக்
கயிறுதிரிக் கின்றதிருக் கூட்டத் தாரே
காசுமிகும் எழுத்தாளர் இந்த நாட்டில்! 9

இவரெல்லாம் கூடியொரு சங்கம் கூட்டி
எழுத்தாளர் சங்கமெனப் பெயரும் சூட்டித்
தவறான வழியினிலே தமிழைக் காட்டித்
தந்நலமே வளர்த்தார்கள் பிழைத்தா ரன்றி
அவராலே தமிழுக்கோர் ஆக்கம் இல்லை
ஆணவத்தால் தீமனத்தால் தமிழில் நஞ்சைத்
தவறாமல் கலந்தார்கள்; சங்கந் தன்னில்
தமிழ்மரபில் பனிமூடிக் கிடக்கக் கண்டோம் 10

விடிபொழுதில் கீழ்வானில் சிவந்து காட்டி
விரிகதிர்கள் பரப்புமிளங் கதிரோன் தோன்றப்
படிமுழுதும் பரவிநிலம் மூடி நிற்கும்
பனிப்படலம் கரைந்துருகி மாய்தல் போல
முடிவில்லை என்றெண்ணிச் சங்கந் தன்னில்
மூடுபனி நின்வரவால் விலகக் கண்டோம்
விடிவுண்டு தமிழுக்கு நின்னால் என்று
மேலவனே பாடுகின்றோம் வாழ்த்து கின்றோம் 11

அன்றுமுதல் இன்றுவரை கொள்கைப் பற்றில்
அணுவளவும் பிறழாது நிலைத்து நிற்போய்!
என்றுமுள தென்றமிழ்க்குத் தொண்டு செய்ய
இடுக்கணுனைத் தொடர்ந்துறினும் கலங்கா நெஞ்சாற்
குன்றனையாய்! பொதுவாழ்வுக் குறிக்கோள் கொண்டாய்!
கூர்த்துணர்ந்து முன்னேற்றக் கருத்துங் கொண்டாய்!
இன்றுனைநான் வாழ்த்துவதாற் பெருமை கொண்டேன்
என்மனமும் நின்மனமும் ஒன்றாக் கண்டேன் 12

---

**பாடற் குறிப்பு:–** பன்மொழிப் புலவர் திரு. கா.அப்பாத்துரையார் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றமைக்காகத்
திருச்சிராப்பள்ளியில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் பாடிய பாடல்.

## 9. இளஞாயிறு

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

விரிநில மாந்தர் நிறைமட மென்னும்
இருளில் மூழ்கி இடர்பல வெய்தித்
துயருறுங் காலை சுடரொளி பரப்பி
மயல்இரிந் தோட வருமிள ஞாயிறாய்த்
தோன்றினை ஏசெனும் தோன்றலே! உலகில்
நினக்கென முயன்றிலை பிறர்க்கென முயன்றனை
குணக்குன் றென்னக் கூற நின்றனை
அழுக்கா றொடுமடம் அவாவுடன் வெகுளி
குழுக்கொண் டெழுந்து குமுறும் முகிலென
நின்னொளி மறைக்க நிமிர்ந்தன வாயினும்
பொன்னுடல் மறைத்தன மின்னொளி மறைத்தில
பொன்முடி சூட்டப் புரியா மாந்தர்
முண்முடி சூட்டி முடித்தனர் என்னே!
இருள்நீக்க வந்த இளஞாயி றுன்றன்
அருள்காக்கும் வாழ்வை இரவாக்க எண்ணிச்
சிலுவை கண்டனர் சிறியர்; நீயோ
குலவுமவ் விரவிலும் நிலவிய கதிரொளி
பாரெலாம் பரப்பும் பாங்கு பெற்றனை
தொண்டுளம் கொண்ட தூயவர் தம்மை
மண்டிணி ஞாலம் மறப்பினும், உண்மை
கண்டுளம் களிக்கப் போற்றுதல் கண்டோம்;
பின்னர் வந்தவர் நின்பெயர் சொல்லிப்
பண்ணும் இழிசெயல் பகர்தலோ அரிதே!
பொன்மொழி புகுதா வன்செவி மாக்கள்
அன்பை மறந்தனர் அறிவை இகழ்ந்தனர்
வன்பே புரிந்து வாழ்தல் விழைந்தனர்
புறத்துறுப் பெல்லாம் போற்றி வளர்த்தனர்
அகத்துறுப் பொன்றே அகற்றினர் அந்தோ!
புறத்தில் தூய்மை சிறப்புடன் ஏற்றினர்
அகத்தில் அழுக்கும் அவ்வணம் ஏற்றினர்
ஆகுல நீரன ஆற்றினர் சாற்றினர்
ஆகும் நெறியதும் ஆகா நெறியதும்
காணும் அறிவினைக் காணார் நின்னைப்
பேணும் முறையிற் பிழைபா டுற்றனர்
என்னே இவர்தம் இயல்பே! இனியும்
கொன்னே புரிவினை கொள்ளா ராகி
நீநயந் துரைத்த நெறியினிற் செல்க!
நாநயங் கூறி நல்லன நினைந்து
மாநிலம் அன்பால் மலர்க! போரின்
தீங்கெலாம் நீங்கித் தெளிகநல் லமைதி!
யாங்கணும் தொண்டுளம் ஓங்குக பெரிதே!

## 10. மறைந்தாரோ?

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

ஐயையோ **திரு.வி.க.** மறைந்தார் கொல்லோ
  ஐம்புலனும் ஒடுங்கியதே; தமிழி னத்தார்

செய்வதென்ன? தமிழ்பேசும் செவ்வாய் எங்கே?
  செம்மையுறு தொண்டெங்கே? சமயம் சார்ந்த
பொய்மைஎலாம் அழித்தாரே! புதுமை வாழப்
  பொதுமைநெறி கண்டாரே! அவர்ந மக்குக்
கைமாறு கருதாமல் உழைத்தா ரந்தோ!
  கதறுகிறேன் அவர்மறைவு கேட்ட தாலே 1

தாழ்ந்தநிலைத் தமிழகமே! நின்வாழ் வுக்கே
  தந்நலத்தை மறுத்தெழுந்த தூயர் தம்மை
ஆழ்ந்தநிலைக் காக்கிவிட்டாய்! ஈது மாறா
  அவமானம்! அவமானம்! வறுமைப் பாட்டில்
வீழ்ந்திருந்தும் வாழ்வாங்கு வாழ்ந்து நின்றார்;
  வீரமுடன் இருந்தாரே அவரை இங்கு
வாழ்ந்திருக்க விட்டாயா? நன்றி யீதோ!
  வீணருக்கு வாழ்வுதந்தாய் அந்தோ! அந்தோ! 2

## 11. எங்கே சென்றீரோ?

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

பஃறொடை வெண்பா

அஞ்சுகிலா நெஞ்சாய்! அறிவாய்ந்து கூர்காட்டும்
செஞ்சொல்லாய்! சீர்திருத்தத் தென்னாட்டு மோகன்ராய்!

எங்கள் **முருகப்ப!** எம்போல்வார்க் கோர்துணையே!
இங்கிருந்து சென்னைநகர் ஏகியநீ மீளவில்லை

என்னுஞ்சொல் அம்பாய் எமதுளத்துத் தைத்ததுவோ
என்னஇனிச் செய்வோம் இரங்கலன்றி அந்தோநின்

தோழர் திரு.வி.க. தூய கவிமணியார்
வீழ நமக்கினிமேல் வேலைஎன்ன எனறுணர்ந்தோ?

கம்பனிடம் சென்று கருத்தறிய வேண்டுமென்றோ?
வெம்பும் அழுக்காற்று வீணுலகம் ஈதென்றோ?

நீயெம்மை நீத்தனையே! நிற்கின்றோம் இவ்வுலகில்
தாயில்லாச் சேய்போல் தவித்து

## 12. ஆறாத் துயரம்

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

வல்லீட்டி பாய்ந்ததுவே எனது நெஞ்சில்
  மாணவர்காள் எவ்வண்ணம் வாய்தி றந்து
சொல்லூட்டித் தமிழ்சொல்வேன்! சோர்வு பெற்றேன்
  துடித்துமனம் வெந்துழலத் துயரங் கொண்டேன்
வில்லோட்டும் கூரம்போ கொடிய வாளோ
  வெள்வேலோ **நகைமன்னர்** மாய்ந்தார் என்ற
சொல்லீட்டி பாய்ந்ததுவே! இனிமேல் நாமும்
  சுவையாக நகைச்சுவையைக் காண்ப தென்றோ! 1

கடுந்துன்பம் எத்துணைதான் வரினும் நெஞ்சம்
  கலங்கலிலான்; சிரிப்பொன்றே துயரை நீக்கி
விடுமென்பான்; மன்பதைக்கும் அந்த வுண்மை
  விளக்கிநின்றான்; கண்புதைத்து நாமெல் லோரும்
படுந்துயரம் தனைமறப்ப தெவ்வா றந்தோ!
  பகர்ந்துவந்த அச்சிரிப்பு மருந்தும் ஆமோ?
நெடுங்கடலே! வான்பரப்பே! சுடுநெ ருப்பே!

நீணிலமே! பெருங்காற்றே! அழுதீர் கொல்லோ? 2

திரையுலகில் மன்னனவன்; தமிழ கத்துச்
சீர்திருத்த நல்லுலகில் மன்னன்; தீய
குறையொழியப் பகுத்தறிவைச் சுவையா ஆக்கிக்
குழைத்தெடுத்துக் கொடுக்கின்ற மன்னன்; வெய்ய
சிறைஎனினும் அஞ்சலிலான் அங்கி ருந்தும்
சிந்திக்கும் மன்னனவன் கொடுமைச் சாக்கா(டு)
இரையெனவே கொண்டதுவோ அந்தோ! அந்தோ!
இவனைஅலால் கிடைத்திலரோ உலகில் எங்கும்! 3

கிந்தனெனும் புதுமைதரும் கதையைப் பாடக்
கேட்பதினி எந்நாளோ? பொங்கல் நாளில்
எந்தவிதம் வானொலிதான் அவன்க ருத்துக்
கோவைகளை எடுத்தியம்பும்? நடிகர் யார்க்கும்
பந்தமுடன் அறிவுறுத்தி வழியும் காட்டிப்
பாங்குறுத்தத் தலைவரினி யாரே உள்ளார்?
சிந்தைஎலாம் தேள்கொட்டிக் கிடந்து வாடும்
குடும்பமதைச் செயற்படுத்த வல்லார் யாரே? 4

நின்வாழ்வின் மதுரந்தான் பிரிவை அந்தோ
நினைந்தாற்ற வல்லாரோ? கொடுமை வந்து
பொன்வாழ்விற் புகுந்ததுவே! நினக்க மைந்த
புதுநடையைக் கனிமொழியைப் பெருஞ்சி ரிப்பைத்
தம்வாழ்வில் எவ்வண்ணம் மறந்தி ருப்பார்?
தவிக்கின்ற பல்குடும்பம் யாது செய்யும்?
மின்வாழ்வாய் அமைந்ததுவே நின்றன் வாழ்வு!
மேலவனே! பிரிந்தாலும் நிறைந்தாய் நெஞ்சில் 5

---

**பாடற் குறிப்பு:–** வகுப்பறையில் இருக்கும் பொழுது கலைவாணர் மறைவுச் செய்தி கேட்டுப் பாடிய பாடல்.

## 13. நெஞ்சம் கலந்த தாய்
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

பெயருடன் **தருமம்** சேர்ந்த
பேருளத் தம்மா! நின்றன்
செயலிலும் தருமம் கண்டோம்
செம்மையின் திறமும் கண்டோம்
மயலுறும் இளைஞர் மாதர்
வாழ்வினில் உய்தல் வேண்டி
முயன்றதும் கண்டோம்; நாளை
அவர்க்கென முயல்வார் யாரே? 1

மாணவர் மன்ற மென்னும்
வளரிளங் குழந்தை யின்று
காணெழில் கூர்ந்து காளைப்
பருவமாய் நிற்குங் காலை,
பேணிய செவிலித் தாயே!
பெருமுது கிழவன் நற்றாய்
காணவன் மயிலை முத்து
கலங்கிடப் பிரிந்தாய் அந்தோ! 2

புலவராம் எம்ம னோரைப்
புன்மொழி புகன்று திட்ட,
அலமரும் பொழுதத் தந்த
அமைச்சவை நடுங்கப் பேசும்
கலகல என்னும் பேச்சைக்
காதினாற் கேட்ப தென்றோ!
புலவரை இகழ்வார்க் காணின்

புலியென எழும்தாய் யாரே? 3

பண்புறும் தமிழர் நாட்டைப்
பாழ்செய இந்தி வந்து
புண்படச் செய்த போது
பொங்கியே சினந்து பாயும்
பெண்புலி ஒன்று கண்டோம்;
பேதையர் கூண்டி லிட்டும்
கண்படை கொள்ள வில்லை
அப்புலி காண்ப தென்றோ! 4

மறக்குல மகளே! நாட்டின்
மானமே பெரிதென் றெண்ணித்
திறத்துடன் அறப்போர் ஆற்றும்
தீர்தம் கைவேல் ஆனாய்
புறப்படும் பெண்ப டைக்குப்
புத்துணர் வூட்டி நிற்கும்
அறப்படைத் தலைவி யானாய்!
எமக்கெலாம் அன்னை யானாய் 5

அன்னையே உன்போல் மாதர்
ஆயிரம் ஆயி ரம்பேர்
பின்னரும் உள்ளார் என்று
பேசிட வாழ்த்துக் கூறி,
இன்னலும் சிறையும் எங்கட்
கினிமையாய்த் தோன்ற நெஞ்சில்
மன்னுக நீயே உன்றன்
மலரடி வாழ்த்து கின்றோம். 6

---

**பாடற் குறிப்பு:–** மாணவர் மன்றத் தலைவி தருமாம்பாள் மறைந்த பொழுது பாடிய பாடல்.

## 14. திரு. வி. க.

**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

எண்சீர் விருத்தம்

குறளென்னுஞ் சொற்பொருளைச் சிறிதுங் காணார்
குலவுதமிழ் இலக்கணத்தை என்றுங் கேளார்
அறநூலோ புறநூலோ ஒன்றுந் தேறார்
அகரமுதல் வரிசைமட்டும் தெரிந்தாற் போதும்
குறளிடத்து குறைசொல்வார் திருத்தம் செய்வார்
புத்துரையுங் குறித்துரைப்பார் திருக்கு றட்குப்
பிறவுரைகள் சரியில்லை பிழையே என்பார்
பெருகிவரக் காண்கின்றோம் இந்த நாளில் 1

கற்றற்குத் தகுநூல்கள் கசடு நீக்கிக்
கற்றுப்பின் அவைசொல்லும் வழியில் நின்று
முற்றுமுணர் அறிவினராய் வாழ்ந்து காட்டி
முதற்புலவன் வள்ளுவன்செய் குறள்நூ லுக்குத்
[1]தெற்றெனுமா றுரையெழுதிக் காட்டி அந்தத்
திருநெறியில் **திரு. வி. க.** வாழ்ந்து நின்ற
[2]பெற்றியையான் ஓரளவு தெரிந்த வண்ணம்
பாடுகிறேன் பிழையுளதேல் பொறுத்தல் வேண்டும் 2

**கடவுட் கொள்கை**

ஒருநூறு சமயங்கள் படைத்துக் காட்டி
உட்கிளைத்த சமயங்கள் பலவுங் கூட்டிப்
பெருமைசொலி அத்தனைக்குந் தெய்வங் கண்டு,
பெண்பார்த்து மணமுடித்துப் பிள்ளைப் பேறும்
உருவாக்கி, ஒருசிலரை இரண்டாந் தாரத்
துட்படுத்திப் பிறர்மனையை நாட வைத்துச்

சிறுவர்விளை யாடலென ஆடிவிட்டுச்
செம்மைநெறி காணாமல் திகைத்து நின்றோம் 3

இருள்சேர இவ்வண்ணந் திகைக்குங் காலை
எழுந்ததுவோர் செம்பரிதி, உலகுக் கெல்லாம்
மருள்போக ஒளிதந்து கடவுட் பாங்கை
மறுவறநன் குணர்த்திற்று; செம்மை கண்டோம்;
திருவுடைய வள்ளுவனாம் பரிதி காட்டும்
திருநெறியே திரு.வி.க. வேண்டி நின்றார்
திருநீறு பொலிநெற்றி உடையா ரேனும்
தெய்வநெறி பொதுநெறியே கூறி வந்தார் 4

**குறள் நெறியர்**

அழுக்காறும் அவாவெகுளி இன்னாச் சொல்லும்
அகற்றியநன் மனத்துக்கண் மாசொன் றின்றி,
ஒழுக்கமுயிர் எனஓம்பி, அறமே போற்றி
உள்ளத்தாற் பொய்யாமல் ஒழுகி, என்றும்
வழுக்காமல் குணமென்னும் குன்றில் ஏறி,
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, நெஞ்சில்
தழைக்கின்ற செந்தண்மை பூண்ட ஒன்றால்
தகவுடைய அந்தணராய் விளங்கி நின்றார் 5

நாவதனாற் சுட்டவடு ஆறா தென்றே
நாகாத்தார் திறமுடனே யாவுங் காத்தார்;
[3]காவலரும் ஏவல்செயக் காத்தி ருக்கக்
கற்றறிவு பெற்றிருந்தும் பணிவே கொண்டார்;
பாவலர்தம் "எல்லார்க்கும் பணிதல் நன்றாம்"
என்றவுரை பகுத்துணர்ந்து பெரியர் ஆனார்;
மேவியதோர் தந்நிலையிற் றிரியா தாங்கண்
மிகவடங்கி மலையினுமே பெரிதாய் நின்றார்; 6

[4]ஒப்புரவு கண்ணோட்டம் அன்பு வாய்மை
உயர்நாணம் இவ்வைந்தால் [5]சால்பு தாங்கிச்
செப்பரிய [6]மிகுதியினால் மிக்க செய்யின்
செயற்கரிய தகுதியினால் அவரை வென்றார்;
இப்புவியில் ஆணுக்குங் கற்பு வேண்டும்
என்றதிரு வள்ளுவனார் நெறியில் நின்றார்;
தப்பரிய குறள்நெறியிற் சிறிதும் மாறார்
தமிழ்ப்பெரியார் திரு.வி.க நற்பேர் வாழ்க! 7

**எது அறம்?**

இல்லறமா துறவறமா இவ்வி ரண்டுள்
எதுவேண்டும் எனவினவின், அறமென் றோத
இல்லறமே சாலுமெனக் குறள்நூல் சொல்லும்;
இந்நூலில் காமத்தை வேண்டா என்று
[7]சொல்லியவர் முன்னின்றே இல்ல றந்தான்
தூயதெனச் சான்றுரைத்து நிறுவிக் காட்டி
வெல்லுதலைத் தாம்கொண்டு குறள்நூல் வாக்கின்
மெய்ப்பொருளை நன்குணர்ந்து விளக்கி நின்றார் 8

**பெண்ணின் பெருமை**

சிறுவரையும் ஒருபொருளா எண்ணச் செய்யும்
செல்வத்தைப் பெண்ணாக்கி, மடமை தீய்க்கும்
பெருவலிய கல்வியையும் ஓர்பெண் ணாக்கி,
பெறுவெற்றி, நல்லழகு, நிலம்பெண் ணாக்கி,
வருபசியை நீக்குகின்ற [8]கூலம் மற்றும்
வறுமையையும் பெண்ணாக்கி, வாழ்வில் என்றும்
உறுதுணையாய் நல்விளக்காய் விளங்கு கின்ற
ஓரினத்தைப் புண்ணாக்கி மகிழ்வு கொண்டோம் 9

இருகண்ணில் ஒருகண்ணைப் புண்ப டுத்தி
இயற்கைஎழில் மறுகண்ணால் காண முந்தும்
பெருமதியீர்! பெண்மைக்குப் பெருமை நல்கப்
பிந்தாதீர்! நடந்துசெலக் காலி ரண்டும்

சரிசமமா இல்லைஎனில் நொண்டி என்று
சாற்றுவரால்; சமன்செய்து வாழ்க என்றார்
பெருமைமிகு திரு.வி.க. நல்ல பெண்ணிற்
பெருந்தக்க யாவுளவோ எனுஞ்சொல் [9]ஓர்ந்தார் 10

**இனியவை கூறல்**

[10]படிறிலதாய்ச், செம்பொருளைக் கண்டார் வாய்தான்
பகருவதாய், அன்புகலந் திருப்ப தொன்றே
[11]படியதனில் இன்சொல்லென் றுரைக்கும் பாட்டைப்
பயிலுங்கால் பொருள் [12]தேறேன்; தமிழ வானின்
விடிவெள்ளி திரு.வி.க. மொழியைக் கேட்டேன்
விளங்காத அக்குறளின் பொருளுணர்ந்தேன்
கடிதலிலா இன்சொல்லின் இலக்க ணத்தைக்
கண்டுகொண்டேன் இனியவையே அவர்வாய்ச் சொற்கள் 11

[13]துனியுடைய ஒருசிலர்தாம் கூடி நின்று
தூய்மைக்குத் தொடர்பிலராய் விலகிச் சென்று
நனியிகந்த சுடுமொழிகள் கழறித் தம்முள்
நகுமொழிகள் பலசொல்லி நகைத்தா ரேனும்
[14]முனிவறியார், பணிவுடையார், இன்னாச் சொல்லை
மொழிந்தறியார், அறிவுரையே உரைத்து நிற்பார்
இனியஉள வாகவுமின் னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்தல் என்றார் அன்றோ? 12

**சொல் வல்லார்**

பேரூராம் சென்னைநகர் ஆலை ஒன்றில்
பெருந்துயரம் பட்டதொழி லாளர் எல்லாம்
[15]ஈரேழின் ஆயிரவர் ஒன்று கூடி
இனிப்பொறுமை இலைஎன்று கொதித்தெ ழுந்தார்;
ஓராளும் இல்லாமல் சுடுகா டாகும்
ஒருவிரலைத் தலைவரவர் காட்டி நின்றால்;
ஆரூரர் திரு.வி.க. தலைவர் அந்நாள்
அவ்விரலை அசைத்தனரா இல்லை! இல்லை! 13

பசிவயிறும் குழிகண்ணும் உடையா ரேனும்
பார்வையிலே சுட்டெரிக்கும் தோற்றங் கொண்டோர்,
விசைஒடிந்த உடலெனினும் ஒவ்வோர் என்பும்
வில்லாகும் அம்பாகும் வீரங் கொண்டோர்,
[16]நசையோடு தலைவர்தரும் ஆணை கொண்டு
நாவசையாப் பொம்மைகளாய் நிற்றல் கண்டேன்;
பிசகாமல் இனிதுசொல வல்லார்ப் பெற்றால்
பெருஞாலம் விரைந்துதொழில் கேட்கு மன்றோ? 14

**புகழ்த் தோற்றம்**

எய்தரிய செயல்செய்து புகழால் மிக்கும்,
எஞ்சாத பழிமிகவே இயற்றி நின்றும்,
வய்யகத்து மன்றதனில் தோன்றி நிற்போர்
வகைவகையாப் பலருண்டு; நம்பே ராசான்
செய்யரிய செயல்செய்து தோன்றும் போழ்தே
செவ்வியநற் புகழுடனே தோன்றி நின்றார்;
உய்வகையும் நமக்குரைத்து மறையும் போதும்
உலகத்தார் உள்ளமெலாம் புகழக் கொண்டார் 15

**நடுநிலைமை**

நடுநிலைமை ஒருசிறிது பிறழ்ந்தா ரேனும்
நாடாளும் அமைச்சரவை இவர்க்கும் ஆங்கண்
நடுவிருக்கும் ஒருபதவி தந்தி ருக்கும்,
நான்வணங்கும் இத்தலைவர் நயந்தா ரல்லர்;
[17]"நடுவிகந்த ஆக்கத்தை வேண்டேன் வேண்டேன்
[18]நடுவொரீஇ [19]அல்லசெய ஒவ்வேன் ஒவ்வேன்
கெடுநிலைமைக் கேகாதீர்! நன்றே செய்வீர்!
[20]கிளந்தவெலாம் மறப்பதுவோ?" என்றே சொன்னார் 16

**சுருக்கத்தில் உயர்வு**
இடுக்கண்கள் பலவரினும் சிரித்து நிற்பார்;
இயல்பென்பார்; [21]அற்றேமென் றல்லல் கொள்ளார்;
[22]கொடுக்கின்ற குணமுடைய ஒருவர் சென்று
கொள்கவெனப் பெருநிதியம் தந்து நிற்கப்
'படுத்திருக்கும் இந்நிலையில் செல்வம் ஏனோ?
பண்புடையீர்! கொள்ளே'னென் றுயர்வுங் கொண்டார்
கெடுக்கின்ற [23]சுருக்கத்தில் உயர்வு வேண்டும்
கிழவரவர் குறள்கூறும் மானங் கொண்டார் 17

**குணங்குற்றம் ஓர்தல்**
பலவாகக் கிளைத்தெழுந்த கட்சிக் கூட்டம்,
பாரிலுள அகச்சமையம், அவற்றி னோடு
குலவாத புறச்சமையம், மற்றும் இங்குக்
கூட்டுகிற கூட்டமெலாம் பறந்து செல்வார்;
விலகாமல் அனைத்திடத்தும் புகுதல் கண்டு
வியர்த்திருப்பர் பக்திஎனும் கவசம் பூண்டோர்;
நலமாகும் குணம்நாடிக் குற்றம் நாடி
நடுவாக மிகைநாடி மிக்க கொண்டார் 18

**தவஞ்செய்தார்**
பிறனாக்கம் காணினிவர் பொறாமை கொள்ளார்;
பேணிஅவர் பெருமைஎலாம் புகழ்ந்து பேசி
அறனாக்கம் மிகப்பெற்றார்; மறந்து நின்றும்
அணுவளவும் பிறன்கேடு சூழார்; மேலும்
உரன்ஆக்கும் தவஞ்செய்தார்; காடு செல்லார்;
உடுப்பதுவுங் காவிகொளார்; துறவும் பூணார்;
தரங்கெடுக்கும் ஆசையினால் அவஞ்செய் யாராய்த்
தங்கருமஞ் செய்துதவஞ் செய்தார் ஆவர் 19

**உயர்நட்பு**
தொழிலாளர் நலங்கருதி உழைக்கும் போழ்து
தூய்மனத்துக் காந்தியிவண் வந்தார் என்று
முழுவாழ்வுத் தமிழ்ப்பெரியார் காணச் சென்றார்;
முகஞ்சுருக்கி [24]"எற்காணக் குருதி தோய்ந்து
பழுதான கைகளொடு வந்தாய்?" என்று
பகர்ந்ததுமே திடுக்கிட்டார் திகைத்து நின்றார்;
தொழுதபடி ஒருசொல்லும் கூறா ராகித்
துயர்படிந்த மனத்தினராய் இல்லம் சேர்ந்தார் 20

"அமைதிக்கே நமதுவிரல் அசையும் அல்லால்
அறியாது மற்றொன்றும், குருதி ஏது?
[25]சுமைமனத்தர் அவர்மனத்தை மாற்றி விட்டார்!
சூதறியா நல்லுள்ள மேனும் கீழோர்
இமைநொடியில் மாற்றுவரோ? என்று சிந்தித்
தினிதிருந்தார்; நோதக்க நட்டார் செய்யின்
தமையறியாப் பேதைமையாம் கிழமை யும்மாம்;
தமிழ்நெஞ்சம் வன்சொல்லை மறந்த தன்றே 21

தென்னாட்டில் இந்திமொழி புகுந்த காலை
திருநாட்டின் [26]முதலமைச்சர் இவர்க்கு முன்பே
பன்னாள்கள் பழகியநல் நண்ப ரேனும்
"பைந்தமிழ்க்குத் தீங்குசெய வேண்டா" வென்று
முன்கூட்டி இடித்துரைத்தார், அல்லல் ஏற்றார்;
முகநகுதற் பொருட்டன்று நட்டல், நட்டார்
பின்னீர்க்கும் மிகுதிக்கண் இடித்து ரைத்துப்
பேசுதற்கே என்றகுறள் தெளிந்து நின்றார் 22

ஈரோட்டுப் பெரியாரும் திரு.வி.க.வும்
இனிதுவப்பத் தலைக்கூடிப் பின்பு கொள்கை
வேறாகிப் பிரிந்தாலும் உள்ளும் வண்ணம்
விலகுதலே மேற்கொண்டார், என்றும் போலச்

சீராட்டிப் பேசிடுவார், ஒருகால் ஆள்வோர்
சிறைவைத்தார் பெரியாரை என்று கேட்டுச்
''சாராட்சி நடப்பதுவோ? சரிந்து மாயும்
சமயமிதோ?'' எனக்கனன்று தலைமை ஏற்றார் 23

*சென்னைநகர்ப் பெருந்திடலில் மக்கள் கூட்டம்
சிங்கமெனச் சூழ்ந்திருக்கத் தலைவர் நின்றார்
முன்புறத்தில் துப்பாக்கி வீரர் நின்றார்
முதன்மைபெறும் ஊர்காவல் தலைவர் வந்து
பின்னின்று மறுப்பாணை தந்தார்; திங்கள்
பிழம்பனலைக் கக்கியது கண்டேன் கண்டேன்
உன்னுமுனம் உடுக்கையிழந் தவன்கை போல
உதவுநட்புக் கிலக்கியமாய் வாழ்ந்து நின்றார் 24

சொல்வல்ல நல்லறிஞர் காஞ்சி அண்ணா
துரைஇவர்தம் கருத்துரையை மறுத்து ரைப்பார்
வில்விடுக்கும் அம்பெனவே சிலகால் தாக்கி
விரிவுரைகள் ஆற்றிடுவார்; கேட்டி ருந்தும்
நல்லுள்ளம் கொண்டஇவர் நயந்து பேசி
''நல்லவரே இவ்விளைஞர் தமிழன்'' என்றே
சொல்லிடுவார்; அழச்சொல்லி இடித்து ரைக்க
வல்லார்நட் பாய்ந்துகொளும் தூய நெஞ்சர் 25

இவ்வண்ணம் வள்ளுவர்தம் வழியில் நின்ற
என்தலைவர் திரு.வி.க. வாழ்விற் கண்ட
மெய்வண்ணம் ஒருசிலவே விளம்பி நின்றேன்
மேலான மெய்ந்நெறியே அவர்தம் தோற்றம்
உய்வண்ணம் நமக்கவர்தாம் உணர்த்திச் சென்ற
உண்மைகளை மறவாமல் ஓர்ந்து நின்று
செய்வண்ணம் செயலாற்றி வாழ்வோம் வாழ்வோம்
செந்தமிழும் நம்நாடும் வாழ்க! வாழ்க! 26

முடிப்புரை

*சிறந்தபுலச் சான்றோரை ஆக்கித் தந்தால்
தென்னகமும் தேயாது வாழும் என்றால்
மறைந்துவிட்ட திரு.வி.க., மொழிக்குன் றாய
மறைமலையும் பாரதியும் உரிமை வேட்கை
உரந்தழுவும் சிதம்பரனார், கல்வி கேள்வி
உயர்கம்பன், இளங்கோவும் யாரோ சொல்வீர்
திறங்கொண்ட பலர்பலரைத் தந்தும் தெற்குத்
தேய்ந்ததுமேன்? ஆட்டுவித்தால் ஆடார் யாரே? 27

''ஆட்டுவிக்க ஆடாமல் நாமே ஆள
அரசுரிமை எய்தியபின் யாவ ரோடும்
கூட்டுறவு கொளல்நன்றாம் தமிழும் வாழும்
குலையாமல் தென்னகமும் வாழும்'' என்று
கூட்டமெலாம் திரு.வி.க. கூறி வந்தார்;
குறுகியநோக் கென்றுசிலர் திரித்துச் சொல்லிக்
காட்டுவதை நம்பாதீர்! தென்ன கத்தைக்
காப்பதுவே நமதுகடன் வாரீர்! வாரீர்! 28

---

**பாடற் குறிப்பு:–** 11.8.1957 அன்று, காரைக்குடிக் குறள் விழாக் கவியரங்கில், 'வள்ளுவர் வழியில்–திரு.வி.க.' என்ற தலைப்பில் பாடப் பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–**
1. தெற்றெனுமாறு – தெளிவாக 2. பெற்றி – இயல்பு.3. காவலரும் – நாடு காக்கும் ஆட்சியாளர். 4. ஒப்புரவு – பிறருக்கு உதவுதல். 5. சால்பு – சான்றாண்மை. 6. மிகுதியினால் – செருக்கால். 7.காமத்துப் பாலை வேண்டாவென்று கூறியவர் முன்னாள் கல்வியமைச்சர். 8. கூலம் – தானியம். 9. ஓர்ந்தார் – ஆய்ந்து உணர்ந்தார். 10. படிறு – வஞ்சனை. 11. படி – உலகம்.12. தேறேன் – தெளிவாக உணர்ந்திலேன். 13. துனி – பகைமை. 14. முனிவு – வெறுப்பு. 15. ஈரேழின் ஆயிரவர் – பதினாலாயிரவர். 16. நசை – அன்பு.1 7. நடுவிகந்த – நடுவு நிலைமை கடந்த. 18. ஒரீஇ – நீங்கி. 19.அல்ல – தீயன. 20.கிளந்த– சொன்ன. 21..அற்றேம் – பொருளிழந்தோம். 22.கொடுக்கின்ற குணமுடைய ஒருவர் – கோட்டையூர் .க.வீ.அழ.ராம.இராமநாதன் செட்டியார். 23. சுருக்கம் – பொருள் சுருங்கிய காலம். 24. எற்காண – என்னைக்காண. 25. சுமை மனத்தர் – தீமை சுமக்கும் மனத்தினர். 26. முதலமைச்சர் – ஓ.பி. இராமசாமி ரெட்டியார். *ஒருமுறை திராவிடர் கழகப் பொதுக்குழு சென்னையில் கூடியது. அக்கூட்டத்தில் அனைவரையுமே ஆட்சியாளர் சிறை

செய்தனர். கொதித்தெழுந்த திரு.வி.க, 'காவல்துறை ஆணையாளர்' தடையுத்தரவைக் காட்டியுங் கூடக் கண்டனக் கூட்டத்தை வெற்றிபெற நடத்தினார். *இவ்விழாவில் பேசிய ஒருவர் சான்றோர்களை உண்டாக்கித் தந்தால் தெற்குத் தேயாது என்றார். அவர்க்கு மறுமொழி தரும் வகையில் கவியரங்கத் தலைப்புகளாகத் தரப்பட்ட சான்றோர்களை அமைத்துப் பாடப் பட்டது முடிப்புரை.

## 15. அழகப்பர்

**(நூல்:—கவியரங்கில் முடியரசன்)**

எண்சீர்விருத்தம்

அகம்மலர்த்தும் செந்தமிழே! [1]உயிரே! மெய்யே!
அகிலத்து மொழிமுதலே!அன்பே! பண்பே!
[2]புகல்கொடுத்துச் சிறியேனை ஆட்கொள் செல்வீ!
பொழுதெல்லாம் களிப்பருளும் தெய்வத் தாயே!
பகைதவிர்த்துத் தமிழ்பாடும் என்றன் நாவால்
பாரறிய **அழகப்பன்** புகழு ரைக்க
வகைவகுத்த சொற்பொருளால் அணியால் [3]ஆன்ற
வளமிக்க கவிவெறிஎன் நெஞ்சில் ஏற்று! 1

பற்றறுக்கும் துறவுநிலை பூண்டி ருந்தும்
பால்மொழியாம் தமிழ்ப்பற்றுத் துறவா உள்ளம்
பெற்றதனால் தாய்மொழிக்குத் தீமை என்றால்
பேசாத மேடையிலும் பேசு கின்ற
[4]நற்றலைவ! கலைத்திருநாள் காணும் நல்லீர்!
நலஞ்சான்ற கவிபுனைவீர் எங்கள் நெஞ்சில்
உற்றிருக்கும் அழகப்ப வள்ளால்! அன்பின்
உளங்கனிந்த என்வணக்கம் கொள்க நன்றே 2

***அவையடக்கம்**

முன்னைஎழு வள்ளல்தமைச் சங்கச் சான்றோர்
முழுமையுறு செந்தமிழால் புகழ்ந்துரைத்தார்
என்னையுமோர் வள்ளல்புகழ் பாடச்சொல்லி
ஏற்றமெனக் களித்தமைக்கு நன்றி; ஆனால்
முன்னையவர் பொருள்கொண்டு, மகிழ்ந்து, வள்ளல்
முன்னின்று, விலையில்லாக் கவிதை சொன்னார்;
என்கவிக்குப் பொருளில்லை; அவனும் இல்லை
எனினும்உயர் புகழுக்கே பாடுகின்றேன் 3

என்குலத்துப் பாவலர்தம் பனுவல் எல்லாம்
எழுவள்ளல் செவிகுளிரக் கேட்டார் அந்நாள்;
என்கவிக்குச் செவிகொடுக்க அழகன் இல்லை
ஏங்குகிறேன்; அவனுயிரைக் குடித்த காற்றே!
பொன்னுடலைச் சுவைத்தொளிர்ந்த தீயே! வானே!
புல்லர்தமைப் பொறுத்திருக்கும் நிலமே! நீரே!
தென்னகத்து வள்ளலிவன் செய்த தொண்டைச்
சிறுசெந்நா விளம்புவதைக் கேட்பீர்! கேட்பீர்! 4

**எழுவரா? எண்மரா?**

வரையாது வழங்குகொடை வள்ளல் தம்மை
வரையறுத்தார் முன்னாளில் எழுவர் என்றே;
குறையாமல் கல்விக்கே கோடி கோடி
கொடுத்துயர்ந்த அழகனுமோர் வள்ளல் ஆனான்
கரவாத பிறரெவரும் இருப்ப ரேல்இக்
காலத்தும் உளரெழுவர் வள்ளல் என்பேம்
பிறராருங் காணேமால், ஒருவன் நின்றான்
பெருங்கொடைஞர் அறுவர்க்கு யாண்டுச் செல்கேம்? 5

ஆதலினால் முன்வகுத்த எழுவர் என்ற
எண்மாற்றி அவருடனே எண்மர் என்போம்;
ஓதுகின்ற மாணவரும் தேர்வுத் தாளில்
உயர்வள்ளல் எண்மரென எழுதிப் போந்தால்

பேதலியேம் மதிப்பெண்கள் உரிய நல்கிப்
பெருங்கொடையால் வள்ளலென யாமும் வாழ்வோம்;
ஏதமிலான் இத்துறையில் புரட்சி செய்தான்
எவரிந்த அழகப்ப வள்ள லொப்பார்? 6

**ஒரே வள்ளல்!**

அன்றிருந்த கொடையாளர் எழுவர் தாமோ?
ஆயிரவர் இருந்தமைக்கு நூல்கள் சான்றாம்;
என்றாலும் வள்ளலெனும் பெயரைப் பெற்றார்
எழுவர்க்கு மேலில்லை; இற்றை நாளும்
துன்றியதம் பொருளீவார் பலர்தா மேனும்
துணிந்துரைக்கின் வள்ளலெனும் புகழைத் தாங்கி
நின்றிருக்க அழகப்பன் ஒருவ னேதான்;
நெஞ்சிருப்போர் கைவைத்தால் இதயம் சொல்லும் 7

**அரசரும் வள்ளலும்**

தென்னாட்டுத் திசைதோறும் கோவில்கட்டித்
திருப்பணிகள் எனும்பெயரால் அள்ளி வீசும்
இந்நாட்டுப் பரம்பரையில் இருவர் தோன்றி
இருநிதியம் கல்விக்கே வாரித் தந்தார்;
முன்கூட்டிச் செய்தவர்நம் செட்டி நாட்டு
[5]முதல்மன்னர்; அழகப்பர் மற்றோர் வள்ளல்;
என்பாட்டுக் கடங்காது வள்ளல் உள்ளம்
[6]கொடைமடமென் றிருசொல்லே சொல்லத் தோன்றும் 8

**காடு செடுத்தான்**

நடப்பவர்தம் கால்வருந்த முட்கள் தைக்கும்
நச்சரவம் பலநெளியும் கொடிய காட்டைக்
கெடுத்தொழித்து நகராக்கிக் கல்விக் கூடம்
கிளைத்தெழும்பத் தானுறையும் இல்லுஞ் சேர்த்துக்
கொடுத்திருக்கும் இயல்புடையான் ஈட்டுஞ் செல்வம்
அத்தனையும் ஈத்துவக்குங் குமணன் போல்வான்
படித்துவரும் பன்னூறு மக்கள் உள்ளம்
பைந்தமிழால் அள்ளூறிப் பாடும் வள்ளல் 9

**கலைக்கோவில்கள்**

அகரமுதல் நெடுங்கணக்கை ஓது தற்கும்
அடுத்தடுத்த உயர்நிலையில் கற்ப தற்கும்
மகளிருயர் கலைக்கல்வி பயிலு தற்கும்
மாணாக்கர் கலைஎழிலை அறிவ தற்கும்
தகவுடைய ஆசிரியப் பயிற்சிக் கென்றும்
தளராத உடற்கல்வி கற்றற் கென்றும்
புகலரிய விஞ்ஞானம் தொழில்நு ணுக்கம்
பொறியியல்என் றத்தனைக்கும் கோவில் கண்டான் 10

**துணிவுடையான்**

வணிகத்தால் அழகப்பன் [7]அளகை அப்பன்
வாழ்வடைந்தான் எனினும்அதில் மூழ்க வில்லை;
வணிகத்தில் பெரியதொரு இலாப மென்றால்
வருமுன்பே அத்தொகையைக் ''கொடுத்தேன்'' என்பான்
துணிவகத்தான் மிகப்பெரிய இலக்கம் என்ற
தொகைக்குரிய மதிப்பெல்லாம் குறைத்து விட்டான்;
[8]பணிகுறித்துக் கொடுத்ததொகை எண்ணு வீரேல்
பகர்ந்ததனைச் சரிஎன்பீர் பொய்ம்மை இல்லை! 11

**பாரி இருவர்**

நனிசெல்வம் ஆங்காங்குக் கல்விக் காக
நயந்தளித்த பேருள்ளம் கண்ட நாட்டார்
நுனிமூக்கிற் சுட்டுவிரல் சேர்த்து, ''முன்னை
நூலிலன்றி யாங்கணுமே கண்ட தில்லை!
இனிநமக்குப் பாரிஎன இருவர் கண்டோம்''
எனவியந்தர்; அச்செம்மல் விழைவே போல
இனிதெனப்*பல் கலைக்கழகம் ஆதல் வேண்டும்

இருநிலத்தில் அவர்புகழும் ஓங்க வேண்டும் 12

**பெற்றோரானான்**

கல்லூரி வட்டத்தில் இனிதி ருந்து
கல்விபயில் பன்னூறு மக்கள் காண்பான்
எல்லாரும் சான்றோராம் என்று கேட்க
இனியதொரு தாயாவான்; ஆடல் பாடல்
வல்லார்போல் மாணவர்கள் நிகழ்த்துங் காலை
வள்ளலிவன் தந்தையினும் மகிழ்வே கூர்வான்;
நல்லானை நோய்முறிக்க வீழ்ந்த போதும்
நயவுரைகள் நகைச்சுவையில் வழங்கி வந்தான் 13

**பெரியார் புகழ்ந்தார்**

முயன்றுபெறும் செல்வமெலாம் தமக்குப் பின்னர்
முழுவுரிமை புதல்வர்க்கே ஆதல் உண்மை;
அயர்வின்றி இவனுழைப்பால் கண்ட செல்வம்
*அவனுக்கே சொந்தமெனப் பெரியார் நாவால்
நயந்துரைக்கப் பெரும்பேறு பெற்றா னேனும்
நான்சொல்வேன்: பட்டையந்தான் அவற்கே யன்றிப்
பயன்முழுதும் நம்மக்கள் துய்க்கின் றாரால்
பாடுதும்நாம் பாடுதும்நாம் வள்ளல் பேரே 14

**நிலையாமையுணர்ந்தவன்**

நிலையாமை நிலையாமை என்று சொல்லி
நிறைபொருளைத் தொகுப்பார்கள் வகுத்தல் காணார்:
அலைவார்கள் இனுஞ்சேர்க்க மேலுஞ் சேர்ப்பர்;
ஆனாலும் இன்பமொரு சிறிதுங் காணார்;
அலையாழி பலகடந்தே இவனுஞ் சேர்த்தான்
அப்படியே வகுத்தளித்தான் தனக்கொன் றில்லான்;
நிலையாமை நன்குணர்ந்தான் இவனே அன்றோ?
நிலைத்தபுகழ் இன்பமிகக் கொண்டு நின்றான் 15

**அவனோர் கஞ்சன்!**

பொருள்கொடுத்தான் மிகக்கொடுத்தான்; அதனின் மேலாப்
புகழ்கொண்டான்; கொடைசிறிது, சிறிய ஒன்றால்
அருள்பழுத்தான் கொண்டதுதான் மிகுதி என்பேன்;
அதிலென்ன வியப்புளதோ? மேலும் அன்னான்
ஒருவகையில் கஞ்சனெனக் குறையும் சொல்வேன்;
உவந்தளித்தான் நிதியமெலாம், உண்மை; ஆனால்
வருபுகழில் சிறிதேனும் பிறர்க்கீந் தானோ?
வருகின்ற புகழெல்லாம் வைத்துக் கொண்டான் 16

**எவ்வுயிர்க்கும் அருளாளன்**

வாடுபயிர் காணுங்கால் வாடி னேனென்
றுளங்கனிய வாய்மொழிந்தார் வடலூர் வள்ளல்;
ஆடுமலர்க் கொடிகண்ட மற்றோர் வள்ளல்
அதுபடரத் தேர்தந்து [9]படர்து டைத்தான்;
சாடுபுயல் வீசுகையில் நமது வள்ளல்
தான்வளர்த்த செடிகளெலாம் வீழக் கண்டு
வாடியதை நாமுணர்வோம்; எவ்வு யிர்க்கும்
வள்ளலென்போர் இரங்கியருள் செய்வர் போலும் 17

**வள்ளல்களை வென்றான்**

பாரிவிடும் தேரதனால் வாழ்வு பெற்ற
படர்முல்லைக் கொடிஒன்றே; செல்வம் எல்லாம்
வாரிவிடும் அழகப்பன் தந்த வீட்டால்
வாழ்வுபெறும் பூங்கொடிகள் கணக்கில் உண்டோ?
[10]சோரிவிடத் தலைதந்தான் குமணன் என்பர்;
சொல்லரிய பொருளெல்லாம் கல்விக் காக
[11]மாரிபடத் தந்ததன்மேல் வாழ்வே தந்தான்
மனமுள்ளோர் இவன்கொடையின் அருமை காண்பர் 18

படுபெயலால் மிகநனைந்து குளிரால் வாடிப்
பதைபதைத்து நடுநடுங்கக் கண்டு, நெஞ்சு

துடிதுடித்தே அடடா ஓ! என்று பேகன்
துய்யமயில் ஒன்றுக்கே ஈந்தான் போர்வை;
கொடையழகன் பலமயில்கள் கற்ப தற்குக்
குடியிருக்கும் தன்வீட்டை ஈந்தான் கண்டோம்;
கொடைமடத்தால் உளம்பெரிது பேக னுக்கு,
கொடுப்பதிலே உரம்பெரிதே அழக னுக்கு 19

**தமிழ்நாடு உலகோடு சமம்**
வண்மைமிகும் ஆய்தன்னால் நமது தெற்கு
வடக்கோடு சமமாக நின்ற தென்றார்;
உண்மையிது; நானொன்று துணிந்து சொல்வேன்;
உறங்கினுமோர் கொடைக்கனவே காணும் நம்பன்
வண்மையினால் உலகோடு சமமே என்பேன்;
வடக்கென்ன கிடக்கட்டும் என்று ரைப்பேன்;
பெண்மையுளார் அஞ்சிடுவர் ஆண்மை கொண்டேன்
பேசுகின்றேன் பாடுகின்றேன் மறுப்பும் உண்டோ? 20

**மாசு துடைத்தேன்**
கொடைத்திறத்தால் புகழ்கொண்டான் பாரி வள்ளல்
குவலயத்தில் அவன்புகழே விஞ்சக் கண்டு
படைத்திறத்தால் முடியரசர் வேந்தர் மூவர்
பாரியின்மேல் அழுக்காறு கொண்டு கோட்டைக்
*கடைத்திறப்பு நிகழாமற் சூழ்ந்து நின்றார்;
கண்டபயன்? மாசொன்றே! கோட்டை யூரன்
கொடைச்சிறப்பால் அரசர்சிலர் அழுக்கா றுற்றார்
மாசுற்றார் என்கின்ற கொடுஞ்சொற் கேட்டேன் 21

வள்ளலுக்கு முடியரசர் விளைத்த தீமை
வடுவாக அமைந்ததுவே! உலக மக்கள்
எள்ளலுக்கும் பொருந்தியதே! என்று நெஞ்சில்
எழுகின்ற பரிவால்அம் மாசு நீக்க
வள்ளல்புகழ் முடியரசன் பாடு கின்றேன்,
வண்டமிழாற் பாத்தொடுத்துச் சூட்டுகின்றேன்;
[12]மள்ளர்மிகு படைவலத்தாற் படைத்தார் மாசு;
மகிழ்ந்தளிக்கும் [13]தொடைநலத்தால் துடைத்தேன் மாசு 22

**பண்பாளன்**
இறையன்பு நிறைமனத்தன் எனினும் தந்தை
எனுந்தேவே தொழுதெழுவான்; [14]உற்ற போது
நிறையன்பு கொண்டவரை, ஊக்கந் தந்து
நிலைநிற்கச் செய்தவரை மறவா நன்றி
யறிவுடையன் என்பதனை விடுதி காட்டும்;
அரசியலில் பிறதுறையில் ஆன்ற சான்றோர்
செறிநண்பு கொண்டமையைப் படங்கள் காட்டும்;
சிரித்தமுகம் அவன்மனத்து தூய்மை காட்டும் 23

**அனைத்தும் ஈந்தான்**
*அள்ளியள்ளி வழங்குதற்குக் கையை ஈந்தான்
அழகாகப் பேசுதற்கு வாயை ஈந்தான்
உள்ளமெனும் ஒருபொருளை உரத்துக் கீந்தான்
உடம்பினையும் கொடுநோய்க்கே ஈந்தான் அந்தோ!
வெள்ளமென வருநிதியம் வாழும் வீடு
வினைமுயற்சி அத்தனையுங் கல்விக் கீந்தான்
உள்ளதென ஒன்றில்லை அந்தப் போதும்
உயிருளதே கொள்கவெனச் சாவுக் கீந்தான் 24

**அழகப்பா நகரம்**
சாந்துணையும் ஈந்திருந்தோன் புகழைச் சாற்றச்
சான்றோர்கள் பலர்வேண்டும்; ஒருவன் என்னால்
ஆந்துணையோ? சிலபாடல் முற்றுஞ் சொல்ல
அமைவாமோ? காவியமே சிறிது சாலும்;
போந்துள்ள பெருமக்காள்! உம்மை ஒன்று
போற்றிமிக வேண்டுகிறேன்; இந்த வட்டம்

சூழ்ந்துள்ள, பகுதியையும் ஒன்றே ஆக்கி
    *அழகப்பன் நகரெனப்பேர் சூட்டு வீரே 25

---

**பாடற் குறிப்பு:–** 27.10.1957 அன்று, காரைக்குடி அழகப்பர் கல்லூரிக் கவியரங்கில், 'எட்டுத்தமிழ் வள்ளல்–அழகப்பர்' என்ற தலைப்பில் பாடப் பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–**

1. உயிரே மெய்யே – உயிரும் மெய்யும் போன்ற தமிழே. உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் ஆகிய தமிழே. 2. புகல் – தஞ்சம். 3. ஆன்ற – நிறைந்த. 4. நற்றலைவ – குன்றக்குடி அடிகளார்.

*அவையடக்கப் பாடலின் பின் இரண்டடிகள் ஏற்றங் கூறுவது போலமைந்து அவையடக்கம் உணர்த்துகின்றன.

ஏற்றம் –> சங்கத்தார் பொருள் பெற்றுப் பாடினர்; நான் பொருள் பெறாது பாடுகிறேன். சங்கத்தார் அரசர் முன்னின்று பாடியமையால் முகமன் உரைத்திருக்கலாம்; அழகப்பர் இல்லாதபொழுது நான் பாடுவதால் உண்மையான புகழையே பாடுகிறேன். மேலும் சங்கத்தார் கவிதைகள் விலை போகாதவை.

அவையடக்கம் –> சங்கத்தார் பாடல்களிற் பொருளுண்டு; என் பாடலிற் பொருளே இல்லை. அரசர் இருந்தமையால் மகிழ்ந்து பாடினர் அப்புலவர்; அழகப்பர் இல்லாமையால் நான் வருந்திப் பாடுகிறேன்.அவர்கள் பாடல் விலைமதிக்க முடியாதவை; என் கவிதைகள் எளியன, எனினும் என் புகழுக்காகப் பாடுகிறேன்.

5. முதல் மன்னர் – செட்டிநாட்டரசர் அண்ணாமலையார்.

6. கொடைமடம் – அள்ளிக் கொடுப்பதில் அறியாமை. 7. அளகை அப்பன் – குபேரன். 8. பணி – கல்விப்பணி..

*பல்கலைக் கழகம் ஆதல் வேண்டும் என்ற கவிஞரின் எண்ணம் பிற்காலத்தில் பலித்து விட்டது.

*அழகப்பர் கல்லூரிகளுக்கே செல்வமெலாம் சேர்வதால் அச்செல்வம் அழகப்பருக்கே சொந்தமாகிறது என நகைச்சுவைபடப் பெரியார் பேசினார். 9. படர் – துன்பம். 10. சோரி – இரத்தம். 11. மாரிபட – மழை தோற்க.

*கடைதிறப்பு என்பது எதுகை நயத்திற்காகக் கடைத் திறப்பு என நின்றது (கதவு திறத்தல்).

12. மள்ளர் – வீரர். 13. தொடை – தொடைகள் மிகுந்த பாநலம்.

14. உற்றபோது – துயருற்றபோது.

*இப்பாடல்களைக் கேட்ட அடிகளார் முடிவுரையில் உணர்ச்சி வயப்பட்டு அழுது விட்டார்.

*அழகப்பர் நகர் எனப் பேர் சூட்டும் கவிஞரின் இவ்வெண்ணமும் பலித்து விட்டது.

## 16. எனக்கும் ஓர் அதியன்

**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

நேரிசை ஆசிரியப்பா

1குறள்நெறி வாழும் கொள்கைக் கோவே!
அருள்நெறி ஒழுகும் **அண்ணால்!** எங்கள்
**சுப்பிர மணியத்** தோன்றால்! வணக்கம்
மெய்ப்பொருள் உணர்ந்த மேலோய் வணக்கம்
[1]தந்தாய்! [2]என்னுயிர் தந்தாய்! [3]என்கோ?
[4]அன்னாய்! [5]என்னுயிர் அன்னாய்! என்கோ!
இன்னருள் புரியும் [6]என்கோ! என்கோ?
எவ்வணம் நின்னை ஏத்திப் புகழ்வேன்!
செய்வணம் அறியேன் சிறியேன் நின்னடி
நெஞ்சத் திருத்தி நினைகுவன்
அஞ்சலென் றருளுக தஞ்சம் நீயே 1

எண்சீர் விருத்தம்

ஒழுக்கத்தின் உறைவிடமே! தொண்டும் பண்பும்
    ஒன்றாகி உருவெடுத்த நல்லோய்! மக்கள்
அழுக்ககற்றும் திருக்குறளின் வார்ப்பே! எங்கள்
    ஐயாவே! அருளூற்றே! அன்பும் நண்பும்
பழுத்திருக்கும் குளிர்தருவே! தொன்று தொட்டுப்
    பாங்குயர்ந்த குடிப்பிறப்பே! ஏழை மக்கள்
வழித்துணையே! மணித்திருநாள் பெற்றோய்! நின்றன்
    வாழ்வெல்லாம் நலம்பெற்று வாழ்க வாழ்க 2

நின்னுடலில் தென்னாட்டுக் கருமை கண்டேன்
    நெஞ்சத்தில் சொல்லரிய செம்மை கண்டேன்
நின்சொல்லில் நிலைத்திருக்கும் உண்மை கண்டேன்
    நீயுடுத்தும் ஆடையினில் வெண்மை கண்டேன்
பொன்விரும்பாப் புகழ்விரும்பாத் தொண்டு எத்தால்
    புரிகின்ற செயலிலெலாம் நன்மை கண்டேன்

எந்நிலையும் எப்பொழுதும் அன்பா! நின்றன்
இயல்புடைய வாழ்க்கையினில் குறளைக் கண்டேன் 3

ஆடவர்கள் எந்நிலத்து நல்லர் உள்ளார்
அந்நிலத்தை நன்னிலமென் றவ்வை சொன்னாள்;
தேடரிய செயல்வீர! சுப்ர மண்யச்
செம்மலுன்னால் புதுக்கோட்டை புதிய கோட்டை
நாடறிய ஆயிற்று; நின்னால் மேலும்
நல்லவரும் பலரானார்; ஊர்கள் தோறும்
பாடுபட ஓரொருவர் நின்போல் தோன்றின்
பழம்பெருமை பேச்சிலன்றிச் செயலிற் காண்போம் 4

இந்நாளில் ஒருசிறிய நன்மை செய்தோர்
இருநிலத்தார் அறியும்வகை எடுத்து ரைப்பர்
பொன்னோடு புகழ்விரும்பிச் செய்தித் தாளில்
புகழ்ந்தெழுதப் பொருள்கொடுப்பர்; பொய்ம்மை யன்று;
முன்னாக நாற்பஃதாண் டெல்லை நீயே
முனைந்திருந்து நற்பணிகள் ஆற்று கின்றாய்!
இந்நாளும் பிறரறியா தடக்கி வைத்தாய்!
என்போல்வார் பாட்டுக்கு மறைந்தா போகும்? 5

இவ்வுலகில் தீமையைத்தான் மறைத்துச் செய்வர்;
நன்மைகளை ஏன்மறைத்துச் செய்கின் றாய்நீ?
செவ்வியனே நீமறைத்துச் செயினும் எங்கள்
சிறுசெந்நா பறையறைந்து யாண்டும் சாற்றும்;
ஒவ்வியதே நின்னடக்கம் பெருமை காட்டும்;
உலகுக்கு நாங்கள்சொலல் நன்றி காட்டும்;
எவ்வகையால் முயன்றாலும் புலவன் நாவைத்
தடைப்படுத்த இயலுவதோ? அடங்கா தன்றோ! 6

எழுத்தறிய மாட்டாமல் ஏங்கும் நாட்டில்
எண்ணரிய திருப்பணிகள் எங்கும் ஆக்கி
வழுத்துகின்ற மாந்தருக்கு நன்றுசொன்ன
வாய்மொழியைப் பாரதியின் பாடல் தன்னை
வழுத்திஅதை வாழ்வாக்கிக் கல்வித் தொண்டை
வழுவாமல் ஆற்றுவதே கடவுள் தொண்டென்
றழுத்தமுற மனத்திருத்தி நாளும் செய்வாய்!
அறநெறியின் தனிமுதலே! வாழ்க வாழ்க! 7

உன்குணமும் உயர்ந்தஒரு தாய்வ யிற்றில்
உடன்பிறந்த கோவிந்த சாமி என்போன்
தன்குணமும் சீர்தூக்கிக் காணுங் காலை
சரியாக நிறைகாட்ட முடியவில்லை;
உன்குணமும் அவன்குணமும் ஒன்றை யொன்று
விஞ்சுவதால் உணர்ந்தறிய இயல வில்லை;
நன்கொடையும் உயர்பண்பும் குடிப்பி றந்த
நல்லோர்க்கு வாய்க்கின்ற இயல்பு போலும் 8

ஈகைமனம் பெற்றவனே! அறுபான் ஆண்டை
எய்துகின்ற இந்நாளில் நின்னை நாங்கள்
வாகைபெறும் பெரியாராக் காணு கின்றோம்;
மருத்துவத்துக் கலைஞர்தமைக் கருப்பஞ் சாற்றுப்
பாகைநிகர் செந்தமிழில் பாடல் நல்கும்
கவிஞர்தமை, இலக்கியத்தில் தோய்ந்தெ ழுந்து
மேகமெனச் சொல்பொழியும் அறிஞர் தம்மை
மேலாக்கி மகிழ்ந்தவன்நீ [7]அண்ணா! வாழ்க! 9

*சீலமிகு சான்றோனே! நின்னி டத்துச்
சிலகுறைகள் நான்கண்டேன் கூறு கின்றேன்;
ஞாலமிசைத் திருக்குறளே ஓங்க நெஞ்சில்
நாடுகிறாய்! தமிழொன்றே போற்று கின்றாய்!
கோலமொழித் தமிழ்நெஞ்சங் கொண்ட வர்க்கே
கொடுக்கின்றாய்! குறைகாணின் கடிந்து ரைப்பாய்!

மேலுமெனைப் போல்வார்க்கும் பணிந்து நிற்பாய்!
    மேலோனே கணக்கறியாய் ஈயும் போது! 10

இவ்வுரைத்த குறையன்றிக் காண கில்லேன்;
    இனிஎனைநீ காத்தளித்த பண்பு சொல்வேன்;
அவ்வைக்கு நெடுங்காலம் உயிர்நி லைக்க
    அதியனெனும் ஒருவள்ளல் இருந்தான் முன்னாள்;
உய்வித்துச் சிறியேனை நீண்ட காலம்
    உயிர்வாழ அருளினைநீ; எனக்கும் அந்த
அவ்வைக்கும் வள்ளல்களை ஈந்து காத்த
    அத்தமிழைச் செந்தமிழை வணங்கு கின்றேன் 11

குருதியுமிழ் கொடுநோய்க்கே ஆளாய் நின்றேன்
    குறுநகையும் பெருநகையும் இழந்து நின்றேன்
செறுபகையும் எனைக்காணின் இரங்கி நிற்கும்
    செயலற்றேன் நடைதளர்ந்தேன் உடல்மெ லிந்தேன்
மறுபடியும் உயிர்வாழ்வேன் என்ற எண்ணம்
    மாய்ந்துவிட மாயாத கவலை கொண்டேன்;
“உறுதியுனைக் காக்கின்றேன்” என்று வந்தென்
    உயிர்காத்தாய்! உன்னருளால் வாழ்கின் றேன்நான் 12

உயிர்காத்த உத்தமனே! என்பாற் கண்ட
    உயர்வென்ன? தமிழன்றி வேறொன் றில்லை;
செயிரில்லாச் செந்தமிழைப் பாடும் வாயில்
    செங்குருதி சிந்துவதா எனநி னைந்தோ?
உயிர்பிழைத்தால் இவனும்போய்த் தமிழைக் காப்பான்
    உயர்கவிதை பலதருவான் எனுங்க ருத்தோ?
அயர்வின்றி அருகிருந்து காத்த தாயே!
    ஆலயமாம் என்னுளத்தில் அமருந் தேவே! 13

தாய்தந்தை நல்லன்பைக் கண்டேன் அல்லேன்
    தகுபொழுதில் உதவுவதற் குறவு மில்லேன்
நோய்வந்து மனத்துயரால் மாழ்குங் காலை
    நுவலரிய தனித்துணையாய் [8]இராமச் சந்த்ரச்
சேய்கொண்டு மனநோவைத் தீர்த்து வைத்துச்
    சிறியேனை நின்குடும்பத் தொருவன் ஆக்கிச்
சேய்போல ஆட்கொண்டாய்! அன்பு செய்தாய்!
    செம்மனத்தோய்! கைம்மாறு யாது செய்வேன்? 14

எந்நாளும் உன்பெயரைச் சொல்லிச் சொல்லி
    ஏத்துவதே தொழிலானேன் என்றன் சேய்க்குப்
பொன்னான நின்பெயரைச் சூட்டி நெஞ்சில்
    பூசித்து மகிழ்கின்றேன் போற்று கின்றேன்
நின்பேரன் என்மகனாம் கார ணத்தால்
    நீஎனக்குத் தந்தைமுறை ஆகி விட்டாய்
என்னபிழை நான்செயினும் பொறுத்தல் வேண்டும்
    என்தந்தாய்! பொன்தந்தாய்! புகழும் தந்தாய்! 15

என்னுயிரைக் காத்தமையால் தன்க ழுத்தில்
    எழிற்றாலி மின்னுவதைக் கண்டு நெஞ்சால்
என்மனையாள் வாழ்த்துகின்றாள்; என்றன் சேய்கள்
    எம்தந்தை தந்தாயென் றேத்து கின்றார்;
நன்மழலைச் செல்வர்களைக், காதல் வாழ்வின்
    நற்றுணையை நான்மீண்டுங் காணச் செய்த
உன்னுதவி நாடோறும் ஏத்து கின்றேன்;
    உயிரனையாய்! திருவடியை வாழ்த்துகின்றேன். 16

---

**பாடற் குறிப்பு:—** 19.10.1958 அன்று, புதுக்கோட்டைத் திருக்குறள் கழகத் தலைவர் அண்ணல் பு.அ.சுப்பிரமணியனார் மணிவிழாவில் மனம் நெகிழப் பாடிய பாடல்.

**இக்கவிதையை முடியரசனார் கண்கலங்கப் பாடியதைக் கேட்டு மணிவிழா அரங்கமே அழுதது. மேடையில் இருந்த பாவேந்தர் பாரதிதாசனின் முகமும் சோகமானது. முடியரசனாரைக் கூர்ந்து பார்த்தவாரே அவரின் கவிதையைக் கேட்ட பாவேந்தர் உணர்ச்சிவசப் பட்டு அடிக்கடித் தன் கைகளைத் தூக்கித்தூக்கித் தன் தொடைகளில் தட்டித்தட்டிப் பாராட்டிக்கொண்டே இருந்தார்.**

கவிஞர் கண்ணதாசன் தன் 'தென்றல்' இதழில் இக்கவிதையை வெளியிட்டார்.

**அருஞ்சொற் பொருள்:–** 1. தந்தாய் – தந்தையே. 2. என் உயிர் தந்தாய் – என் உயிரை மீட்டுத் தந்தவனே. 3. என்கோ – என்பேனா.
4. அன்னாய் – தாயே. 5. என் உயிர் அன்னாய் – என் உயிர் போன்றவனே. 6. என் கோ என்கோ – என் தலைவன் என்பேனா.
7. அண்ணா – இவரை எல்லாரும் 'பிரதர்' என்றே அழைப்பதால் அண்ணா எனப் பெற்றார். *இப்பாடல் வஞ்சப் புகழ்ச்சியணி.
8. இராமச்சந்திரச் சேய் – புதுக்கோட்டை மருத்துவப் பேரறிஞர் டாக்டர் வி.கே. இராமச்சந்திரனார். இவரும் அண்ணலால் உருவாக்கப் பட்டவராதலின் சேய் எனப்பட்டார்.

## 17. அறிஞர் வாழ்க!
**(நூல்:–பாடுங் குயில்)**

அறிஞர் வாழ்கவே – பேர்
அறிஞர் வாழ்கவே – இசைப்பேர்
அறிஞர் வாழ்கவே
–அறிஞர்

நிறையும் ஞானம் பொழியுங் கானம்
சொரியும் மேகம் தவழும் வானம்
–அறிஞர்

திருவாய் மலர்ந்தால் ஏழிசை மணக்கும்
தேன்மழை போலது காதினில் இனிக்கும்
ஒருகால் கேட்பினும் நெஞ்சினை உருக்கும்
ஓ!ஓ! அவர்புகழ் என்றுமே இருக்கும்
–அறிஞர்

இசையின் மயமாய் மேடையில் இருப்பார்
இசைத்திடும் பாடலில் இரண்டறக் கலப்பார்
அசையும் உடலால் இசைநயம் கொடுப்பார்
அவரே மதுரைச் சோமுவென் றுரைப்பார்
–அறிஞர்

---

**பாடற் குறிப்பு:–** 25.11.1976 ஆம் நாள் பாடியது.

## 18. புகழ்க்கம்பன்
**(நூல்:–தமிழ் முழக்கம்)**

எண்சீர் விருத்தம்

புகழ்மிகுத்து வாழ்வாரே வாழ்வார் நல்ல
புகழ்விடுத்தார் வாழாதார் என்றே வாய்மை
புகல்கின்ற முந்தையருள் முதல்வ னான
பொய்யாத மொழிப்புலவன் சொன்னான்; மேலும்
புகழ்வருமேல் இன்னுயிருங் கொடுத்து நிற்பர்
புன்மைவரும் எனில்உலகே கிடைக்கு மேனும்
இகழ்ந்ததனைக் கொள்ளார்நற் சான்றோர் என்றே
இளம்பருவப் பெருவழுதி இயம்பி நின்றான். 1

பிறக்குங்கால் புகழோடு பிறப்பா ருண்டு;
பிறந்தபினர்த் தம்முழைப்பால் அறிவின் ஆற்றல்
சிறக்குங்கால் புகழடைந்து வாழ்வார் உண்டு;
செலவழித்து விலைகொடுத்துப் புகழை வாங்கப்
பறக்கும்பேர் சிலருண்டு; வேண்டு மென்றே
பலர்க்கதனைச் சுமத்துவதும் வழக்கில் உண்டு;
பிறக்குங்கால் புகழோடு பிறந்தான் கம்பன்
பெருமைக்கே உறைவிடமாய்த் திகழ்ந்து நின்றான். 2

இயலைந்தும் ஐங்குழுவாய் அமர்ந்தி ருக்க
எண்சுவைகள் பேராயம் எட்டாய் நிற்க;
மயல்தவிர்ந்த புலமைஎனும் மகுடஞ் சூடி,
மக்கள்மன அரியணையில் வீற்றி ருந்து,
செயல்மிகுந்த உணர்ச்சிஎனும் செங்கோல் தாங்கிச்,
சீரியநற் கற்பனைவெண் குடைமேல் ஓங்கப்
பயன்மிகுந்த கவியுலகை ஆட்சி செய்யும்
பாவல்ல முடியரசன் **கம்பன்** ஆவன். 3

பெண்மையுடன் ஆண்மையுமென் றிரண்டும் ஒன்றின்
பேசுமொரு காதலுக்குச் சிறப்பி ருக்கும்;
வண்மையுள உணர்ச்சியுடன் இலக்க ணத்தின்
வகைசேரின் பாடலுக்கு மதிப்பி ருக்கும்;
பண்ணலங்கள் நன்குணர்ந்த முந்தை மாந்தர்
பாடலுக்கு வகுத்துரைத்த வழியீ தாகும்;
கண்ணெனவே அவ்வழியைப் போற்றிக் கம்பன்
கவிமரபைச் சிதைக்காமல் புகழைப் பெற்றான். 4

பணிசெய்வோம் எமைத்தேர்க என்று நம்முன்
பணிந்துவரும் வேட்பாளர் வரிசை போல
அணியணியாய்ச் சொல்லெல்லாங் கூடி நின்றே
அவன்முன்னே தவங்கிடக்கும்; அவற்றில் தேர்ந்து
மணியனைய சொல்லெடுத்துக் கோத்து நல்ல
மதிப்பேற்றி மெருகேற்றி அணிகள் செய்தான்;
அணிமிகுந்த அவன்பாடல் உலக மெல்லாம்
அளப்பரிய புகழ்பெற்று வாழக் கண்டோம். 5

விருத்தமெனும் ஒண்பாவால் புகழைப் பெற்றார்
வேறொருவர் ஈங்கில்லை; கம்பன் பெற்ற
பெருத்தபுகழ் பாரறியும்; வண்ண மெல்லாம்
பெருங்களிப்பால் கூத்தாடி நிற்கும் பாட்டுத்
திறத்தைஒரு பழமொழியே அளந்து கூறும்;
தென்மொழியான் கம்பன்றன் வீட்டில் கட்டும்
சிறுத்தஒரு தறிகூடக் கவிதை யாகச்
செப்புமெனில் புகழ்சொல்ல வல்லார் யாரே? 6

வில்வளைத்துப் பேராற்றல் விளங்கக் காட்டி
மிதிலைதரும் எழிலணங்கை மணந்தான் அண்ணல்;
சொல்வளைத்துப் பாவாற்றல் துலங்கக் காட்டிச்
சொல்லரிய புகழணங்கை மணந்தான் கம்பன்;
மல்விளைக்குந் தோளுடையான் மருங்கு காணா
அலைமகட்கு மணவணிநூல் சூட்டி நின்றான்;
சொல்விளைக்கும் நாவுடையான் மருங்கு காணும்
கலைமகட்குச் சுவையணிநூல் சூட்டி நின்றான். 7

‘கற்றறிவு கம்பனுக்குச் சிறிதும் இல்லை
காளிவந்தாள் அவன்நாவில் எழுதி விட்டாள்’
பற்றுடையார் இவ்வண்ணம் கட்டி விட்டார்
பகுத்தறிவுக் கொவ்வாத கதையீ தாகும்;
முற்றுணர்ந்த அறிஞனவன், கலைப்ப ரப்பில்
மூழ்கிஎழுங் கலைஞனவன், காலங் காணாச்
சொற்றமிழிற் கவிஞனவன், நறைப ழுத்த
துறைத்தமிழில் தோய்ந்தெழுந்த புலவன் ஆவன். 8

தொடுத்திருக்கும் பழம்பாடற் றொடைகள் தாங்கித்
தொன்மைக்கும் தூய்மைக்கும் முதன்மை காட்ட
எடுத்திருக்கும் எங்கள்தமிழ்க் கடல்க டந்தான்
எல்லையிலாப் புகழடைந்தான்; தென்பு லத்தை
அடுத்திருக்கும் வடமொழியும் எல்லை கண்டான்;
அம்மொழியைப் படிஎன்றே அவனை யாரும்
தொடுத்திருந்து வற்புறுத்தித் தொலைக்க வில்லை;
துணைமொழியாப் பயின்றதனிற் புலமை பெற்றான். 9

பலமொழிகள் இவ்வண்ணங் கற்று ணர்ந்த

பாங்கறிந்து 'கல்வியினாற் பெரியன் கம்பன்
புலவனிவன்' என்றெல்லாஞ் சான்றோர் வாயால்
புகழந்துரைக்கப் பெருவாழ்வு வாழ்ந்தி ருந்தான்;
குலமுனிவன் வன்மீகன் காதை கற்றுக்
குலவுதமிழ்க் கடவுட்கோர் கோவில் கண்டான்
இலகுபுகழ் பெறவாழ்ந்தான் ஏற்றங் கொண்டான்
என்றுமுள தென்றமிழ்க்குப் புகழுந் தந்தான். 10

தனக்கொருவர் செய்ந்நன்றி மறவேல் என்ற
தமிழ்மொழியும் முந்தைவழி; அதனைக் கம்பன்
மனத்திருத்திப் பெரும்புகழுக் குரியன் ஆனான்;
மதியுடையான் பாட்டுவளம், வெண்ணெய் நல்லூர்
தனக்குரியான் சடையப்பன் மனமு வந்து
தந்துவந்த சோற்றுவளம் அன்றோ? அந்தப்
பனைத்துணைய நன்றியினை மறவா தென்றும்
பாட்டகத்தே பாடிவைத்துப் புகழும் பெற்றான் 11

---

**பாடற் குறிப்பு:–** காரைக்குடிக் கம்பன் விழாக் கவியரங்கில் பாடியது – மார்ச் 1965.

## 19. பிறவிக் கவிஞன்

(நூல்:–தமிழ் முழக்கம்)

சங்கத்துப் புலவரெலாம் காத்த ளித்த
சாறுநிறை கனிமரங்கள் நிறைந்தி ருக்கும்,
செங்குட்டு வற்கிளையோன், கம்ப நாடன்
திருத்தக்கன் நடுசெடிகள் படர்ந்தி ருக்கும்,
எங்கட்கோர் உயிர்மூச்சாய் இயங்கு கின்ற
இனியதிருக் குறளென்னும் தென்றல் வீசும்
துங்கத்தொல் காப்பியனார் இட்ட வேலி
சூழ்ந்திருக்கும் இலக்கியப்பூஞ் சோலைக் குள்ளே. 1

புகுந்திருந்து சிறைவிரித்துப் பறந்து சுற்றிப்
பூத்துள்ள எழில்கண்டு கனிசு வைத்து,
மிகுந்துவரும் எக்களிப்பால் கூவிக் கூவி
மிதந்துவரும் இசைபரப்பி இன்பம் நல்கி,
மகிழ்ந்திருந்த ஓர்குயிலைக் கண்டு வந்து
மாகவிஞர் பாரதியார் பற்றி வந்தார்;
அகங்கனிந்து கனிநல்கி வளர்த்துப் பின்னர்
அக்குயிலைத் தமிழ்மொழிக்கே வழங்கி விட்டார். 2

பாரதியார் வழங்குகொடை யாக வந்த
பாவேந்தன் பாரதிக்குத் தாசன் என்பான்
சீரறியார் யாருள்ளார்? அந்த வள்ளல்
சிறிதளித்த கொடையாலே கவிஞர் ஆகி
ஊரறிய நாடறிய வாழ்வு பெற்றோர்
ஒருநூற்றின் மேலாக விளங்கு கின்றார்;
கூரறிவுப் பாவேந்தன் எனையும் ஈங்குக்
கொடையாக வழங்கியுளான் நாட்டுக் காக. 3

துறைதோறும் துறைதோறும் தீங்கு செய்து
தூயதமிழ்ப் பண்பாட்டை மாற்றி விட்டு,
மறைவாக நமக்குள்ளே பிளவுண் டாக்கி
வஞ்சனையால் சூழ்ச்சியினால் வாழ்வு பெற்ற
கறைசேரும் ஆரியமாம் காரி ருட்டைக்
கடிதினிலே வெருண்டோடச் செய்து, மீண்டும்
நிறைவான தமிழ்வாழ்வு மிளிர வேண்டி
நீள்துயிலை நீக்கஎழும் கதிரோன் போல்வான். 4

---

**பாடற் குறிப்பு:–** பறம்புமலை பாரிவிழாக் கவியரங்கில் பாடியது – 18.4.1970.

## 20. பாரதிதாசன் என் அரசன்
(நூல்:நெஞ்சிற்பூத்தவை)

கவியரங்கே அரண்மனையாய்,மக்கள்நெஞ்சே
 காவலன்றன்அரியணையாய்த் துணிவஞ் சாமை
இவையிரண்டும் மெய்காப்பாய்ப் பெருமி தத்தோ
 டெழுபுலமை நல்லமைச்சாய் எழுது கோலே
நவைதவிர்ந்த செங்கோலாய்ச் சங்க நூல்கள்
 நலஞ்செய்யும் வெண்குடையாய் விளங்க வேந்தன்
கவியுலகே அவன்ஆட்சி செய்யும் நாடு
 காப்பளிக்கும் இலக்கணந்தான் எல்லைக் கோடு! 1

அடையார்தம் நெஞ்சத்தை நடுங்க வைக்கும்
 அரிமாவின் தோற்றத்தன்; வகுத்த சாதிப்
படையாவும் துடிதுடித்துப் புறமிட் டோடப்
 பகுத்தறிவுப் படைக்கலங்கள் செலுத்தும் வீரன்;
தடையாகும் மதயானை அடக்குந் தோட்டி
 தாங்கிவரும் உரனுடையன்; பாண்டி வேந்தன்;
அடடா,ஓ! அவ்வரசன் போர்தொ டுத்தால்
 அவனெதிரில் நிற்பதற்கோர் ஆளே இல்லை! 2

பெரியாரைத் துணைக்கொண்டு செங்கோ லோச்சும்
 பெருவேந்தன் பாவேந்தன் தனது நாட்டில்
சரியான சமநீதி வழங்குஞ் சட்டம்
 தன்னிகர்த்த திருக்குறள்தான்; அரசு மன்றில்
புரியாத எம்மொழிக்கும் ஆட்சி யில்லை;
 புதுமைமிகும் தமிழொலிதான் எங்கும் கேட்கும்;
எரியாது மாந்தருளம் குளிர்ந்தி ருக்கும்;
 எழில்கொஞ்சும் இன்பமெலாம் பொங்கி நிற்கும்! 3

வண்டினங்கள் இசையமுது பொழிந்து சூழும்
 வளர்முல்லைக் காடிருக்கும்; குறிஞ்சித் திட்டில்
[1]தண்டகம்போல் தேனருவி முழங்கி நிற்கும்;
 தரைமுழுதும் அழகெல்லாஞ் சிரித்தி ருக்கும்;
கண்டுநிகர் தமிழியக்கப் பாவ லர்க்குக்
 கைநிறையப் பாண்டியன்நற் பரிச ளிப்பான்;
பெண்டிரினம் குடும்பவிளக் கேற்றி வைத்துப்
 பேணிநலம் துய்த்திருப்பர் அந்த நாட்டில் 4

பாட்டென்ற வில்லெடுப்பான் பகைமு டிக்கப்
 பகுத்தறிவு நாணேற்றிச் சொல்தொ டுப்பான்
'காட்டுன்றன் வீரத்தைப் புலியின் போத்தே
 காப்பாற்றுன் தாயகத்தை' எனப்ப ணிப்பான்
பாட்டாட்சிப் பாசறையில் பயிற்று வித்துப்
 படைமறவர் பற்பலரைத் தோற்று வித்தான்;
ஏட்டாட்சிப் போர்க்களத்தில் என்றன் மன்னன்
 எனக்களித்தான் படைத்தலைமை அவன்போ் வாழி! 5

---

**பாடற் குறிப்பு:–** 'தமிழரசு' – பாவேந்தர் மலருக்காக எழுதப்பட்டது – 21.03.1978.

**அருஞ்சொற் பொருள்:** 1. தண்டகம் – குறிஞ்சி நிலப்பறை.

## 21. வெண்தாடி வேந்தர்
(நூல்:–ஞாயிறும் திங்களும்)

வெண்தாடி வேந்தரைப் பாரீர் – செய்த
விந்தைகள் யாவையும் பாடுவம் வாரீர்
 –வெண்தாடி

கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகக்
காலமெல் லாம்உழைத்து மேனியெல்லாம் பழுத்த

—வெண்தாடி

பண்ணுயர் தமிழும் பாங்குயர் இனமும்
பாரினில் மேம்படப் போர்பல தொடுத்தார்
கண்ணொளி குறைந்தும் கால்நடை தளர்ந்தும்
கலங்காமல் தன்னலங் கருதாமல் உழைத்தார்

—வெண்தாடி

செந்தழல் மேனி சிந்தனை ஞானி
சிங்கம்போல் முழக்கம் சீரிய பழக்கம்
வெந்துயர் தாக்கினும் வீணர்கள் தூற்றினும்
வெஞ்சிறை யேகினும் அஞ்சில ராகிய

—வெண்தாடி

சிக்கனக் காரர் செலவிட ஒவ்வார்
சேர்த்தவை எல்லாம் யார்க்கெனத் தந்தார்?
மக்களுக் கென்றே மனத்தினிற் கொண்டார்
தொகுத்தார் வகுத்தார் கொடுத்தார் அந்த

—வெண்தாடி

பகலிலும் இரவிலும் பயணம் செய்வார்
பனிமழை பாரார் பசியெனச் சோரார்
இகலது சாய இழிவுகள் மாய
எதிர்ப்பார் அறப்போர் தொடுப்பார் அந்த

—வெண்தாடி

ஆதர வின்றி அண்டிய பிள்ளை
அத்தனைப் பேருக்கும் அவர்தாம் தந்தை
ஓதிய கொள்கை மோதுதல் அன்றி
ஒருதனி மனிதரைப் பகைத்ததும் இல்லை

—வெண்தாடி

தண்டின் துணையால் தளர்நடை நடந்தும்
தரைதனில் நடந்திட இயலா திருந்தும்
தொண்டின் பணியில் துவளா திருந்தார்
தொழுவோம் அவர்பணி தொடர்வோம் எங்கள்

—வெண்தாடி

---

**பாடற் குறிப்பு:—** 21.6.1979 ஆம் நாள் பாடியது.

## 22. தொண்டுக்கிலக்கணங்கண்டவர்

**(நூல்:—ஞாயிறும் திங்களும்)**

தொண்டுக் கிலக்கணங் கண்டவர் **பெரியார்**
தொடர்ந்ததன் இலக்கியம் ஆகவும் உரியார்

—தொண்டு

கண்டதை ஏசியும் கல்லினை வீசியும்
கண்டவர் தாக்கினும் கொண்டது பேசித்

—தொண்டு

குளித்திடப் பன்னீர் கொடுத்திடும் செழிப்பால்
கோமான் அவரென யாவரும் அழைப்பர்
குளித்திட எனினோ முகம்மிகச் சுழிப்பார்
குளிக்குமந் நேரமும் பணியிடைக் கழிப்பார்

—தொண்டு

புகழ்ந்திடும் தோழர் போற்றின ராயினும்
பொருளென அவற்றை மதித்துளம் மயங்கார்
இகழ்ந்திடும் மாந்தர் தூற்றின ராயினும்
இருசெவி வழங்கார் எள்முனை கலங்கார்

—தொண்டு

மலர்பல தூவிய பஞ்சணை மேவிய
மதிதவழ் மாளிகைத் துயில்வளம் படைத்தார்
அலைந்திடும் ஆண்டிகள் போலதை விடுத்தே
அல்லும் பகலும் அயரா துழைத்தார்

—தொண்டு

பகலிலும் உழைப்பார் இரவிலும் விழிப்பார்
பகுத்தறி வுச்சுடர் எழுத்தினில் படைப்பார்
மிகுமிள வேனிலும் குளிர்பனி நாளிலும்

மிடுக்குடன் பொதுப்பணி யாற்றிட நடப்பார்
—தொண்டு

இளையவர் எனினும் இனியன உரைப்பார்
எதிரிக ளாயினும் கனிவுடன் அழைப்பார்
இளமையை இழந்தும் முதுமையை அடைந்தும்
இளையார் பணியிடைக் களையார் பெரியார்
—தொண்டு

பிறவியில் தலைவர் பெரும்பொருள் வணிகர்
பேணிய புகழுக் குரியார் எனினும்
துறவிகள் போலொரு தோற்றமும் உடையார்
துளிசெருக் கடையார் அடக்கமும் உடையார்
—தொண்டு

---

**பாடற் குறிப்பு:—** 23.6.1979 ஆம் நாள் பாடியது.

## 23. பல்லாண்டு பல்லாண்டு

**(நூல்:—ஞாயிறும் திங்களும்)**

பொருளுயர்ந்த அரசியலில் முதலி, பேச்சில்
பொடிவைத்து நகைசெய்யுங் கலைஞன், நெஞ்சில்
அருளுயர்ந்த பண்பாட்டில் ஐயன், ஆடை
அணிஆடம் பரந்தன்னில் செட்டி, பேசும்
விரிவுரையால் உளங்கவரும் கள்ளன், என்றும்
வெல்கின்ற அறப்போரில் மறவன், கேடு
தருகின்ற பழிமொழியை நாடான், எங்கள்
தமிழ்த்தாயின் புகழ்காக்கும் வீரப் பிள்ளை. 1

ஒருநாளும் பெரியார்சொல் தட்டான், என்றும்
உயர்தமிழில் நீங்காத பத்தன், நன்மை
உருவாகும் செயலொன்றே பார்ப்பான், பேச்சில்
உவமைசொலும் நாவிதனாய் நிற்பான், ஆட்சி
புரிமாந்தர் அடக்குமுறைக் குடையான், நல்ல
புதுமைக்கும் பழமைக்கும் இடையன், அந்தத்
திருவாளன் நம்மவர்க்கு [1]நாய்க்கன், அன்பைச்
செழிப்பிக்கும் வேளாளன் எங்கள் **அண்ணா.** 2

நன்மகனாம் பிள்ளையிவன் வாழ்நா ளெல்லாம்
நாட்டுக்கே பணிசெய்ய ஈன்ற தாயின்
பொன்வயிற்றை மணிவயிற்றை வாழ்த்து கின்றேன்;
பூதலத்து மாந்தரெலாம் அண்ணா அண்ணா
என்னுமொரு உறவுமுறை சொல்லும் வண்ணம்
இந்நாட்டுத் துரையிவனே என்னும் வண்ணம்
முன்னுணர்ந்து பெயர்வைத்த திருவாய் தன்னை
முக்காலும் வாழ்த்துகின்றேன் வாழ்க என்றே. 3

துரையென்றால் அரசனெனப் பொருளு ரைப்பர்;
சொற்புகழ்சேர் திராவிடநா டவற்குச் சொந்தம்;
துரையிவற்குத் தலைநகர்தான் காஞ்சி யாகும்;
துணைநலமாம் பட்டத்து ராணி யுண்டு;
முறைவகுக்கும் நெடுஞ்செழியன் கொள்கை குன்றா
முடியரசன் தென்னரசு போல்வா ரிங்குத்
திறைசெலுத்தும் சிற்றரசர்; எழுதுங் கோலே
செங்கோலாம்; எழுத்தெல்லாம் படையின் கூட்டம். 4

வெல்லரிய படைவரிசை யுடைய வேந்தன்
வீற்றிருக்கும் அரியணைதான் தமிழர் நெஞ்சம்;
நல்லறிஞன் இவனாட்சி பெருகக் கண்ட
நாவிரண்டு கொண்டவர்கள் அழுக்கா றுற்றுப்
புல்லியசொற் கணைதொடுத்தும் அஞ்சா நெஞ்சன்
புன்முறுவல் செய்துபகை வென்று நின்றான்;

சொல்லரசன் இவன்பெயரை வாழ்த்தி நிற்போம்
தூயபுகழ் மாலைபல சூட்டி நிற்போம். 5

நாட்டுக்குப் பெருமைதரும் வீரன் ஆனான்
நாகரிக அரசியலின் தலைவ னானான்
பாட்டுக்குப் பொருளானான் பகைசேர் நெஞ்சும்
பாராட்டும் பண்புடைய நல்லோன் ஆனான்
கேட்டுக்கு வித்தாகும் மடமை என்னும்
கிளர்பகைக்குப் போராடும் எதிரி யானான்
ஏட்டுக்குள் ளடங்காத புகழின் மிக்கான்
எம்மவர்க்கோர் உறவானான் அரணும் ஆனான். 6

எழுத்தினிக்கும், பேச்சினிக்கும், எண்ண மெல்லாம்
இனித்திருக்கும், முத்தமிழும் வல்லான் றன்பால்
பழுத்திருக்கும் நடிப்பினிக்கும், கழகம் காக்கும்
பண்பினிக்கும், அரசியலின் திறமி னிக்கும்,
பழித்திருக்கும் கயவரையும் பொறுத்தி ருக்கும்
பாங்குயர்ந்த சிறப்பினிக்கும், மேலோன் றன்னை
வழுத்துகிறேன் வாழ்த்துகிறேன் தமிழும் நாடும்
வாழ்வதற்கே பல்லாண்டு கூறு கின்றேன். 7

---

**அருஞ்சொற் பொருள்:—** 1. நாய்க்கன் — தலைவன்.

## 24. காஞ்சிக் கதிரவன்

**(நூல்:—ஞாயிறும் திங்களும்)**

அடிமைஎனும் இருளகற்ற வந்த காஞ்சி
அறிஞனொரு செம்பரிதி, உரிமை பூத்துப்
படிவளரத் தமிழ்மாரி பொழியும் வானம்,
பரவிவரும் தம்பியராம் உடுக்க ணங்கள்
தொடருமொரு முழுத்திங்கள், மூடச் செய்கை
தூரோடு சாய்ந்துவிழக் கடிது வீசிப்
படருமொரு புயற்காற்று, வறியர் வாழ்வில்
படர்துடைத்து நலம்பயக்குந் தென்றற் காற்று 1

குற்றால மலைமுகடும் நாணும் வண்ணம்
கொட்டுகிற சொல்லருவி, எங்கள் **அண்ணா**
வற்றாத கலையூற்று, கோலார் போல
வளமான சிந்தனைகள் நிறைசு ரங்கம்,
கற்றோரின் நூல்களெல்லாம் தேக்கி வைத்துக்
காக்கின்ற அணைக்கட்டு, முகில்ப டர்ந்து
பற்றாத முழுமதிசேர் நீல வானம்,
பண்பாறு பாய்கின்ற கடலும் ஆவான். 2

திருவெண்காட் டின்னிசையும், சொக்க வைக்கும்
சீர்த்திருவா வடுதுறையின் மிடுக்குஞ் சேர்ந்தே
உருவங்காட் டுங்காரு குறிச்சி மன்னன்
ஊதிவந்த நாதசுரம்; மதங்கொண் டோடும்
பொருவெண்கோட் டானைதனை அடக்கி வந்த
புலியனைய உதயணன்பால் இருந்த நல்யாழ்;
மருவுங்காட் டானிரைகள் மயங்கி நிற்க
வாயூதும் ஆயன்கைக் குழலும் ஆவான். 3

அரசியலில் நடிப்பறியான், ஆனால் நல்ல
அரசியலின் நடப்பறிவான்; நீண்ட காலம்
பரவுதமிழ் நாடிதனைப் பற்றி நின்ற
பழிதீர்ப்பான், பழிதீர்த்துக் கொள்ள மாட்டான்;
உரமுடையன் நயம்விஞ்சும் சொல்லே சொல்வான்
ஒருநாளும் நயம்வஞ்சம் பேச மாட்டான்;
உருவமதிற் சிறுமையினைப் பெற்ற தன்றி

உள்ளமதிற் பெருமையையே பெற்று நின்றான். 4

பகுத்தறிவுப் பெருங்கடலுள் முளைத்து வந்த
பகலவனை, அறியாமை இருட்க ணத்தைச்
செகுத்தொழிக்கும் பரிதிதனை, துயிலை நீக்கச்
சிவந்தெழுந்த சூரியனை, அரசி யல்வான்
தகதகக்கப் பண்பொளியைப் பாய்ச்சி எங்கள்
தமிழ்செழிக்கக் கிளர்ந்தெழுந்த செஞ்ஞா யிற்றை
உகப்புடனே தமிழரினம் மலர்ந்து தோன்ற
உதித்தெழுந்த கதிரவனை வாழ்த்து கின்றேன். 5

## 25. தமிழ்நாட்டுப் பேரரண்
(நூல்:—ஞாயிறும் திங்களும்)

அறிவுடைய மாந்தரெலாம் அறிஞர் ஆகார்
அளப்பிலநூல் பயின்றவரும் அறிஞர் ஆகார்;
நெறியொழுகி, அருள்சுரந்து, மக்கட் பண்பு
நிறைந்திருந்து, பிறர்துயரம் துடைத்து, நல்ல
குறியுடைய வாழ்வுநெறி மலரத் தம்மைக்
கொடுப்பவரே அறிஞராவர்; அனைத்துங் கூடி
அறிஞரெனும் சொல்லுக்கே உரிய ரானார்
**அண்ணா**என் றழைப்பதற்கும் உரிய ரானார். 1

குறளுக்கும் மூன்றெழுத்தே அண்ணா என்னும்
குளிர்மொழிக்கும் மூன்றெழுத்தே; உலகம் போற்றும்
குறள்வகுக்கும் பால்மூன்றே அண்ணா சொன்ன
கோட்பாடும் ஒருமூன்றே; நுவலும் பாட்டின்
உருவுக்கும் பேர்குறளே அண்ணா கொண்ட
உருவமதும் குறளேயாம்; அதனால் அண்ணா
குறளுக்கு நிகராவார்; மேலும் வாழ்வு
கூறுகிற குறளுக்குப் பொருளும் ஆவார். 2

பாவேந்தன் பாட்டுக்கோர் அரணாய் நின்றார்
பைந்தமிழ்ப்பண் பாட்டுக்கும் அரணாய் நின்றார்
நாவேந்தர் கோவேந்தர் கூடிக் காத்த
நாட்டுக்கும் அரணானார் நமது நெஞ்சப்
பூவேந்தும் நம்அண்ணா தமிழ்மொ ழிக்குப்
பொலிவுதரும் அரணானார் தமிழி னத்தார்
தாழ்வேந்திப் போகாமல் காத்து நிற்கும்
சரித்திரத்தின் பேரரணாய் விளங்கு கின்றார். 3

தனித்தனியே பிரிந்தவர்க்கும் கூடு நர்க்கும்
தலைமகனாம் இம்மன்னன் காத லூட்டிக்
கனிச்சுவையை விஞ்சுதமிழ் அமுதம் பெய்து
களிப்பூட்டும் நிறைமதியன் ஆவான் கண்டீர்;
அனிச்சமலர் மென்மையினை மனத்திற் கொண்ட
அம்மதியை [1]ஓரிரவிற் கண்டாற் போதும்
தனிச்சுவடு பதித்தமையை உணர்ந்து கொள்வர்
தமதுள்ளம் உடலுயிர்கள் உருகி நிற்பர். 4

மறைமலையும் பாரதியும் திரு.வி.க.வும்
மானமுள்ள புலவர்களும் விதைத்து வைத்த
நிறைவிதைகள் முளைத்தெழுந்து பசுமை கண்டு
நின்றிருந்த தமிழ்ப்பயிர்கள், இந்தி என்னும்
உறைவெயிலின் வெம்மையினால் வாடுங் காலை,
உழவருளங் களிப்பெய்த வந்த காஞ்சிப்
பெருமுகிலை ஈரோட்டுப் [2]பொருப்பில் தோய்ந்து
பெய்ம்மழையைத் தமிழ்மொழியால் வாழ்த்தி நிற்போம். 5

கலைமலர்கள் பலபூத்துக் கொத்துக் கொத்தாய்க்
கண்குளிர மனங்குளிரக் காட்சி நல்கும்

பலவகைய புகழ்மணக்கும் கனிகள் நல்கும்
பாடிவரும் தம்பியராம் தும்பி கட்கு
நலமருவும் அறிவுத்தேன் சொரிந்து நிற்கும்
நாவசைய மொழித்தென்றல் உலவி நிற்கும்
உலகிலுளார் இன்பமுறக் குளிர்ச்சி நல்கும்
உயர்சோலை காஞ்சியிலே வளர்ந்த தம்மா! 6

அம்மலர்சூழ் சோலையில்தேன் பருகி நாளும்
ஆயிரம்பல் லாயிரமாய்ப் பாடிப் பாடித்
தும்பிபல பறந்திங்கு வளர்ந்த துண்டு;
தும்பிகளால் மகரந்தப் பொடிப ரந்தே
அம்புவியில் பலமலர்கள் பூக்கக் கண்டோம்;
அவற்றிலுறு நறுமணங்கள் பரவிச் சென்று
மொய்ம்புடைய கோட்டைஎலாம் மணக்கக் கண்டோம்,
மொய்த்திருந்து மக்களெலாம் வியக்கக் கண்டோம். 7

பகையென்றும் நட்பென்றும் பாரா வண்ணம்
பழிவாங்கும் சிற்றறிவு சேரா வண்ணம்
நகைமொழியால் மாற்றலரை ஈர்க்கும் வண்ணம்
நாகரிக அரசியலை நடத்திக் காட்டி
மிகுபுகழால் உயர்ந்தானை, எளியர் வாழ்வு
மேலோங்கச் செய்தானை, எங்கள் எட்டுத்
தொகைமொழியில் தோய்ந்தானை, பண்பு காக்கும்
அரணாகிச் சூழ்ந்தானைத் தொழுது நிற்போம். 8

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. ஓரிரவு – அவரெழுதிய நாடகம்.
2. பொருப்பு – மலை.

## 26. தலைவா வருக!
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

அகிலம் போற்றும் அறிஞனே வாவாவா
அண்ணன் என்னும் உறவினாய் வாவாவா
பகைவர்க் கிரங்கும் பண்பினாய் வாவாவா
பணிவும் துணிவும் நிறைந்துளாய் வாவாவா
குகையில் வாழும் சிங்கமே வாவாவா
கொடுமை கண்டு பொங்குவாய் வாவாவா
நகைமி குந்த முகத்தினாய் வாவாவா
நன்மை வாழும் அகத்தினாய் வாவாவா 1

சிறையின் மீளும் வீரனே வாவாவா
சிந்தை வாழும் தீரனே வாவாவா
திருவி டத்தின் தலைவனே வாவாவா
சேனை கண்டு மகிழவே வாவாவா
உரிமை காக்கும் படைஞனே வாவாவா
உள்ளங் கவரும் கலைஞனே வாவாவா
பெருமை சேர்க்கும் நாவினாய் வாவாவா
பேணும் நாட்டை மீட்கவே வாவாவா 2

அருளைப் பொழியும் விழியினாய் வாவாவா
அறமுரைக்கும் மொழியினாய் வாவாவா
மருளொ ழிக்கும் மதியினாய் வாவாவா
மடமை போக்கும் வலியினாய் வாவாவா
கருணை காக்கும் நெஞ்சினாய் வாவாவா
கடமை போற்ற அஞ்சிலாய் வாவாவா
இருள்த விர்க்கும் உதயமே வாவாவா
எதையும் தாங்கும் இதயமே வாவாவா 3

---

**பாடற் குறிப்பு:–** 1962 சூலை 19–இல் அஃக விலை உயர்வை எதிர்த்து மறியல் செய்தமையால் சிறைப்படுத்தப்பட்டு, 24.10.1962–இல் விடுதலை பெற்ற **அறிஞர் அண்ணா** அவர்களுக்கு வரவு கூறும் முறையில் பாடப்பட்டது.

## 27. காக்குங் கைகள்

(நூல்:—ஞாயிறும் திங்களும்)

சங்கத்தால் தமிழ்வளர்த்த மதுரை மூதூர்த்
தண்பதியில் பெரும்புலவர் கூடி நின்ற
சங்கத்தில் ஒருதலைவர் எழுந்து நின்று,
தகுதியிலா இழிமொழிகள் கூறி, நெஞ்சம்
பொங்கத்தான் பழித்துரைத்தார்; அதனைக் கேட்டும்
பொறுமைக்குப் புகலிடமாய் விளங்கும் அண்ணன்
தங்கத்தின் பெருங்குணத்தான் சினக்க வில்லை
தமிழ்நெஞ்சிற் பண்பொன்றே விளங்கக் கண்டேன். 1

பழித்துரைத்த தலைவருளம் நோகும் வண்ணம்
பதிலுரைக்க விரும்பவிலை; ஒருசொல் லேனும்
இழித்துரைக்க எடுத்தெழுத முயல வில்லை;
எவரிடத்துங் காணாத உயர்ந்த வுள்ளம்
பழுத்திருப்போன், அத்தலைவர் நாட்டுக் காகப்
பாடுபட்ட வீரத்தைத் தியாகப் போக்கை
எழுத்தினிக்க எழுதியதற் பண்பைக் காக்க
எழுந்தஎழிற் கையெங்கள் **அண்ணா** கையே. 2

தென்னவர்தம் நெஞ்சமெலாம் சோலை யாக்கித்
தித்திக்குங் குரலெழுப்பிக் குயிலாய்ப் பாடி
மன்னரெனக் கவியுலகில் விளங்கி வந்த
மாகவிஞர் ஏறனையார் கவிதைக் கையால்
கன்னல்நிகர் மொழியானை அண்ணன் தன்னைக்
கடுமொழிகள் சிறுமொழிகள் வரைந்தா ரேனும்
முன்னவர்தம் கவிதைக்கு வலிமை கூட்டி
முத்தமிழைக் காக்குங்கை அண்ணா கையே. 3

என்னுயிரை இருவிழியைத் தாயின் மேலாம்
எழில்மொழியை நான்வணங்குந் தெய்வந் தன்னை
இன்னமுத இலக்கணத்தின் பிறப்பி டத்தை
இலக்கியத்தின் பேரூற்றைத் தொன்மை கண்ட
தென்னவர்தம் தாய்மொழியைத் தமிழை யிங்குத்
தீய்க்கவரும் மொழிப்பகையைத் தடுத்துக் காத்துப்
பன்னலமும் கனிந்துதமிழ் கொழிக்கச் செய்யப்
பாடுபடும் கைஎங்கள் அண்ணா கையே. 4

பகையுளத்து மாந்தரையும் அன்பு காட்டிப்
பண்படுத்தி அரவணைத்துக் காக்குங் கைகள்
மிகையடுத்துக் கூறவிலை; தமிழர் நாட்டின்
மேலான மானத்தைக் காக்குங் கைகள்
பகைஎடுத்தே எவர்வரினும் சீறி நின்று
பாரதமாம் இந்நாட்டைக் காக்குங் கைகள்
தொகையெடுத்த திட்டங்கள் தீட்டி நாட்டில்
தோன்றுதுயர் துடைத்துநலம் காக்குங் கைகள். 5

ஈரமிலா நெஞ்சத்தார் இட்ட தீயால்
ஏங்குகிற எளியவரைக் காக்குங் கைகள்
நேரமெலாம் தந்நலமே பேணிக் காத்த
நெறியாளர் ஆட்சியிலே காணா நன்மை
சேரவொரு நெறிமுறையைச் செய்து நாடு
செழுமையுறப் படியளந்து காக்குங் கைகள்
வீரமெலாம் ஒருவிரலில் காட்டும் அண்ணா
விழிப்போடு செங்கோன்மை காக்குங் கைகள். 6

## 28. ஆழம் அறியா அன்புள்ளம்

(நூல்:—ஞாயிறும் திங்களும்)

சிந்தனையால் நாவலத்தால் செய்யஎழுத் தாற்றலினால்
இந்தத் திருநாட்டின் ஏறனைய நல்லிளைஞர்
நெஞ்சங் கவர்ந்தான் நிலையான தம்பியராக்
கொஞ்சி அணைத்துக் குலவி மகிழ்கின்றான்
உய்தற் குரியவழி ஓதிவந்த நம்தலைவர்
செய்தற் கரியனவே செய்துயர்ந்த நம்பெரியார்,
தந்திரத்தில் வல்ல தகுதியுள மூதறிஞர்,
செந்தமிழில் வல்லார், சிவனடியார், மற்றெவரும்
அண்ணனுக்கு மூத்தோர் அறிவாளர் ஆனாலும்
தண்ணளியன் முன்னிலையில் தம்பிய ராகிவிட்டார்;
**அண்ணா**நம் அண்ணாஎன் றப்பெரியர் வாயார
அண்ணாவைச் சொல்லி அழைத்ததை நாமறிவோம்;
பேச்சாளர் என்று பெயர்சொல்லி மேடைகளில்
ஏச்சாள ராகி இழிமொழிகள் கட்டுரைத்துப்
பேசிவரும் பித்துடையார் பேச்செல்லாம், நெஞ்சத்து
வீசுகிற வேலாகி மேலோரைப் புண்படுத்தும்;
நாடாளும் நம்தலைவன் நாவசைத்துப் பேசுங்கால்
கூடாரைக் கூடக் குலவிவரப் பண்படுத்தும்;
வெல்லரிய சொல்வல்லான் வெற்றி தரும்எழுத்தில்
நல்லதொரு முத்திரையை நாட்டிப் புகழ்பெற்றான்;
செந்தமிழில் மிக்கபுலம் சேர்ந்ததுபோல் ஆங்கிலத்தும்
வந்த புலமுடையான் வாகைத் திறமுடையான்;
நான்பிறந்த பொன்னாட்டை நல்லதமிழ் நாடென்று
தேன்போல் இனிக்கப்பேர் செய்தானை வாழ்த்துகின்றேன்;
என்னுள் கொலுவிருந் தேற்றம் தருபவட்குக்
கண்ணுள் கருமணிக்குக் காவியத் தாய்மொழிக்கு
மாநாடு கூட்டி மலர்சூட்டிப் பாரெல்லாம்
தான்நாடச் செய்தானைத் தாள்பணிந்து போற்றுகின்றேன்;
மற்றோர் வளர்ச்சியினால் தன்வளர்ச்சி மாறுமெனச்
சற்றேனும் எண்ணாமல் தன்னாற்றல் நம்புமவன்,
சார்ந்தாரை வாழ்வித்துத் தன்போல் வளர்த்துவிடத்
தேர்ந்தானைப் பல்லாண்டு வாழ்கவெனச் செப்புகின்றேன்;
கற்றுணர்ந்த நல்லோர்பால் காணுந் திறமையினை
உற்றுணர்ந்து போற்றிவரும் உள்ளத்தை வாழ்த்துகின்றேன்;
பேராற்றல் வாய்ந்த பேராயக் கட்சியினைப்
போராட்டத் தேர்தலிலே பொன்றிவிழச் செய்திடினும்
வெற்றிக் களிசிறிதும் வேண்டாப் பெருந்தன்மை
உற்றதொரு நற்பண்பை உள்ளூறிப் பாடுகின்றேன்;
தொண்டரெலாம் தம்பியராத் தோள்தந்து காக்குமுளம்
கொண்டொழுகும் அன்புளத்தைக் கோடிமுறை வாழ்த்துகின்றேன்;
தந்தை பெரியாரும், தந்நலத்தை நாடிகளும்
தந்த வசைமொழிகள் தாங்கும் இதயத்தை,
அண்ணன் குடும்பத்தை ஆணவத்தார் கூறிவந்த
புன்மொழிகள் யாவும் பொறுத்திருக்கும் நெஞ்சுரத்தைக்
கோடி முறைசொல்லிக் கோவில்கட்டிக் கும்பிட்டுப்
பாடி முடித்தாலும் பாட்டில் அடங்காது;
நேரு பெருமகனார் நீண்ட ஒருசொல்லைக்
கூற மனந்துணிந்தார்; கொற்றமிகு காளையர்கள்
சீறி எழுந்தார்கள்; சிந்தனையில் செந்தமிழில்
ஊறிவரும் நெஞ்சத்தான் ஒன்றுரைத்தான் தம்பியர்க்கு;
'நம்மிற் பெரியவர்தாம் நம்மைப் பழித்துரைத்தார்
விம்மாதீர் மன்னிப்போம் விட்டு மறந்திருப்போம்'
என்று மொழிந்த இனிய குணத்தானை
நின்று வணங்கி நெடுங்காலம் வாழ்த்திடுவேன்;
நம்மிடையே வாழ்ந்து நலம்பெற்று வாழ்வுயர்ந்து
தம்பி நிலைமாறித் தாவிவிட்ட ஓர்நடிகர்
எங்கிருந் தாலுமவர் வாழ்க எனவாழ்த்திப்
பொங்கி மொழிந்தஒரு பொன்மொழியை வாழ்த்துகின்றேன்;
அன்புளத்தின் ஆழம் எவரும் அறியாத
தென்புலத்தான் வாழ்க சிறந்து.

---

**பாடற் குறிப்பு:–** 29.9.1968 ஆம் நாள் பாடியது.

## 29. அண்ணா வருக!
(நூல்:—ஞாயிறும் திங்களும்)

**அண்ணா** வருக! அறிவே வருக!
கண்ணே வருக! கனிவே வருக!
பண்பே வருக! பணிவே வருக!
அன்பே வருக! அறமே வருக!
முதல்வா வருக! முத்தமிழ்த் தாயின்
புதல்வா வருக! புண்ணியா வருக!
தாயெனத் தமிழகம் தாங்கும் நினக்கு
நோயென ஒருசொல் நுவன்றனர்; அச்சொல்
தணியாத் துயரைத் தந்திட நொந்தேன்
இனியாய் நினக்கோ இந்நிலை நேர்ந்ததென்
றேங்கி ஏங்கி இடர்தனில் வீழ்ந்தேன்;
தாங்கிய துயரம் சாற்றுதற் கரிதே;
நாட்டின் நிலையும் வீட்டின் நிலையும்
வாட்டிட நாளும் வதங்கிடும் என்மனம்
நாட்டின் தலைவன் நலிவுற் றானெனக்
கேட்டுத் துடித்துக் கிடந்தது துவண்டது;
பைந்தமிழ் பாடிப் பழகுமென் நாவும்
வெந்துயர் பொறாஅது வேதனைப் படலால்
பாடல் மறந்து பாழ்த்துக் கிடந்தது
வாடல் தவிர்த்திட வந்தனை தலைவா!
வருகஎம் தலைவா! வாழிய நெடுநாள்
தருகசொல் லமிழ்தம் தலைவா வாழிய!
புல்லிய கொடுநோய் போக்கிய வல்லவர்
மில்லர் எனும்பெயர் மேவிய நல்லவர்
அமெரிக்க ராயினும் ஆருயிர் காத்தலால்
தமரெமக் காயினர் தமராம் அவரைப்
பொங்கும் உளத்தாற் போற்றுதும் யாமே
எங்கள் தோழரென் றேத்துதும் யாமே;
குடர்ப்புண் தீர்த்தனர் குலவிடும் எங்கள்
இடர்ப்புண் தீர்த்தனர் இனியராம் எமக்கே;
நலமுற வந்துள நல்லோய் வணக்கம்
இளகிய மனமும் இனியநன் மொழியும்
குலவிய தலைவா கூர்மதி யுடையோய்
வாழிய நெடிதே வாழிய இனிதே.

---

**பாடற் குறிப்பு:—** அமெரிக்க நாடு சென்று நலம் பெற்றுத் திரும்பிய அண்ணாவுக்கு எழுதிய வரவுரை—6.11.1968.

## 30. யாழ் உடைந்தது
(நூல்:—ஞாயிறும் திங்களும்)

விண்மீன்கள் புடைசூழ்ந்து நிற்க, வான
வெளியினிலே முழுமதியொன் றொளிரக் கண்டோம்;
மண்மீது பயிர்தளிர்க்க உயிர்த ளிர்க்க
வளர்நிலவைப் பாய்ச்சியது மகிழ்ந்தோம்; அந்தத்
தண்மதியை முகிலொன்று வந்து சூழத்
தன்னொளியும் மங்கியது மயங்கி நின்றோம்;
[1]கொண்மூதான் விலகிவிடும் மேலைக் காற்று
கூடிவரும் காலமிதென் றெண்ணி நின்றோம்; 1

காற்றடித்த வேகத்தாற் கொடிய மேகம்
கலைந்ததுகண் டொருவாறு தேறி நின்றோம்;
கூற்றெடுத்த படையெடுப்பில் தோற்று விட்டோம்;
குளிர்நிலவைக் கருணையிலான் விழுங்கி விட்டான்,
காற்றடிக்கச் சிதறுண்ட மேகம் எங்கள்

கண்களிலே புகுந்துநிலை நின்ற தம்மா!
கூற்றுவற்குப் பசியெடுத்தால் இந்த நாட்டைக்
குளிர்விக்கும் முழுமதிதான் கிடைத்த தேயோ? 2

வடிவமைந்த யாழொன்று தனது கையில்
வைத்திருந்தாள் தமிழன்னை; அதனை மீட்டிப்
படிமுழுதும் இசைமயமாப் படைத்து நின்றாள்;
படர்ந்துவரும் இசைத்தேனைப் பருகி மாந்தர்
உடல்நிமிர்ந்தார் உளம்நிமிர்ந்தார் உயர்வும் உற்றார்;
உயர்விதனைப் பொறுக்ககிலாக் காலன் என்னும்
கொடியஒரு பாவியவன் யாழ்ப றித்தான்
குமுறியழ முகாரிப்பண் பாடு கின்றான். 3

தமிழ்வானில் வட்டமிட்டுச் சுற்றிச் சுற்றித்
தனக்குநிகர் இல்லைஎனப் பாடிப் பாடி
அமிழ்தனைய இசைபரப்பி நம்மை எல்லாம்
அகமகிழச் செய்ததொரு வானம் பாடி;
இமிழ்கடலுக் கப்பாலும் பறந்து சென்றே
இனியதமிழ் பாடிவரக் கண்டு வந்தோம்;
உமிழ்சினத்துக் காலனெனும் வேடன் கண்டான்;
ஒருசிறிதும் இரக்கமிலான் வீழ்த்தி விட்டான். 4

வித்தாகி முளையாகிக் கழனி யெங்கும்
விளைகின்ற பயிராகிச் செழித்து நல்ல
கொத்தாகிப் பயனாகிக் கூடுங் காலை
கொள்பயனைச் சிதைத்தானோர் கொடிய பாவி;
பித்தாகித் திரிகின்றோம் துன்ப மென்னும்
பேராழி மூழ்குகின்றோம்; தமிழர் வாழ்வின்
சொத்தாகி வந்தானை **அண்ணா** என்னும்
சொல்லுக்கே உரியானைப் பறித்தான் அம்மா! 5

அறப்போர்கள் பலமுடித்தான் ஆட்சி பெற்றான்
அன்பொன்றே மனத்தமைத்தான்; அந்த ஆட்சிச்
சிறப்பாலே முதலமைச்சன் ஆனான் அண்ணன்;
செந்தமிழர் நற்றவமென் றிருந்தோம்; ஆனால்
இறப்பாலும் முதலமைச்சன் ஆனான் அம்மா!
இத்துயரை எவரிடம்சென் றாற்றிக் கொள்வோம்?
மறப்பென்னும் மருந்தாலும் மாறா தந்தோ!
மனமென்னும் ஒன்றனைநாம் பெற்ற தாலே. 6

செந்தமிழ்க்கும் புலவர்க்கும் விடிவு காலம்
சிறந்ததொரு பொற்காலம் மீண்டும் இங்கு
வந்திருக்க வழியுண்டென் றெண்ணி எண்ணி
மகிழ்ச்சியெனுங் கடலுக்குள் விரைந்து சென்றோம்
உந்திஎழும் கற்பனையாம் படகில் வந்தோம்
ஒளிவிளக்காம் கரைவிளக்கம் அணைந்த தந்தோ!
நொந்திருக்கும் துயர்க்கடலுள் வீழ்ந்து விட்டோம்;
நோவகற்றக் கைகொடுக்க வருவார் யாரே? 7

திருக்குறளாம் தெளிதேனைச் சங்கம் தந்த
தீங்கனியாம் இலக்கியத்தைத் துய்த்துத் துய்த்துத்
தெருக்களெலாம் தமிழ்முழக்கம் செய்து நின்றாய்!
தேயமெல்லாம் தமிழோசை பரவச் செய்தாய்!
உருத்தெழுவாய் தமிழுக்குத் தீங்குண் டென்றால்!
உவந்திடுவாய் தாய்மொழிக்கோர் ஆக்கங் கண்டால்!
இருக்கின்ற தமிழ்ப்பணியை விட்டுச் செல்ல
எவ்வண்ணம் மனந்துணிந்தாய்? அண்ணா அணணா! 8

பழகுதமிழ் நிலையுயரப் பாடு பட்ட
பண்பாளர் தமிழ்ப்புலவர் உருவை எல்லாம்
அழகியநற் சிலைவடிவில் படைத்துப் போற்றி
ஆழிநெடுங் கரையருகே வரிசை செய்தாய்!
தொழவுரியர் சிலையருகே நீயும் சென்று
தூயவனே நிலையாக அமர்ந்து விட்டாய்!

பழையதமிழ் நிலையுணர்ந்து பாடங் கேட்கும்
பற்றாலே அவ்வண்ணம் அமர்ந்தாய் கொல்லோ? 9

மணப்பாட்டின் ஒலிகேட்க அறுபான் ஆண்டு
மணித்திருநாள் நினக்குவரும் அந்நாள் என்றன்
மணிப்பாட்டை நின்னடிக்குப் படைப்பேன் என்று
மனக்கோட்டை கட்டிவைத்து மகிழ்ந்தி ருந்தேன்;
பிணப்பாட்டுப் பாடவைத்து மறைந்தாய் அண்ணா
பேச்சாலே கோட்டைதனைப் பிடித்தாய் என்றன்
மனக்கோட்டை மூச்சாலே இடித்தாய்! இந்த
மனவேறு பாடெதற்குக் கொண்டாய் ஐய! 10

பண்பாடு பண்பாடென் றுரைத்து ரைத்துப்
பகைதழுவும் நெஞ்சத்தார் தம்மை யும்போய்
நண்போடு தழுவியநற் கைககள் எங்கே?
நலமிக்க ஒளிவிளக்காய் வந்த கோவே
கண்பாடு கொண்டனையே கல்ல றைக்குள்;
காரணமென்? அரசியலில் நீநி னைத்த
பண்பாடு காணாத ஏக்கத் தாலோ?
பதறியழ எமைவிடுத்துச் சென்று விட்டாய்! 11

விடுதலைநாள் சுதந்திரத்தின் திருநாள் தன்னை
வீரத்தின் தியாகத்தின் திருநாள் என்றாய்;
அடிமையென ஆக்கிவைத்தோர் கணக்கைத் தீர்த்த
அரியதொரு நாளென்றாய் நாற்பத் தேழை;
உடைமைஎன வரவேட்டில் கணக்குப் பார்க்கும்
உவகைமிகு நாளென்றாய் அறுபத் தேழை;
கடமையினை நன்கியற்றி நின்றோய்! ஏனோ
கணக்கொன்றும் பாராது மூடி விட்டாய்? 12

பெரும்புரட்சிக் கருத்தெல்லாம் பேசி நிற்பாய்!
பேச்சொன்றே கேட்டிருந்தோர் அஞ்சி, நின்னை
இரும்புளத்து மனிதனென எண்ணி நாட்டில்
ஏதேதோ விளைந்துவிடும் என்றி ருந்தார்;
கரும்புளத்து மென்மையினை மேன்மை தன்னைக்
காட்டினைநீ குடியாட்சிப் பண்பு காட்டி;
பெருங்குணத்தைக் கண்டபினர்; அஞ்சி நின்ற
பேணாரும் நின்நட்பை விழைந்து வந்தார். 13

அரசியலைத் திறமுடனே நடத்த வல்லார்,
அண்ணாநீ தோற்றுவித்த கட்சி தன்னை
உரமுடனே வளர்க்கவல்லார் தோன்ற லாகும்;
உன்போலப் பாசத்தை வளர்த்துப் போற்றி
அரவணைக்க வல்லாரை என்று காண்போம்?
அண்ணாவென் றுறவுமுறை சொல்லிச் சொல்லி
உரிமையுடன் அழைத்திடயாம் எவர்பாற் செல்வோம்?
உனைநினைந்தே நாளெல்லாம் உருகு கின்றோம். 14

படிப்படிநீ உழைத்துழைத்து மேலே சென்றாய்;
பாராளும் நிலைபெற்றாய்! அதைப்போல் இன்றும்
படிப்படியா வுயிர்த்துயிர்த்து மேலே சென்றாய்!
பாடல்களில் நிலைபெற்றாய் சிலையும் பெற்றாய்!
அடிப்படையை இழந்ததனால் ஆடி நிற்கும்
அரண்மனையாய்த் தமிழ்நாடு மயங்கி நின்று
துடிப்படையச் செய்துவிட்டாய்! எங்கள் கோவே
தொண்டெல்லாம் முடிந்ததென்றா முடித்தாய் வாழ்வை.
15

'எழுத்தெனினும் பேச்செனினும் சலிப்புத் தோன்றின்
எழுதுவதைப் பேசுவதை நிறுத்து' கென்று
பழுத்துயர்ந்த பட்டறிவால் தம்பி யர்க்குப்
பகருவைநீ! நின்வரவால் களிப்பே யன்றி
வழுத்துதலுக் குரியவனே சலிப்பே யில்லை;
வருமூச்சை நீஎதற்கு நிறுத்திக் கொண்டாய்
எழுத்துலகம் பேச்சுலகம் என்றும் நின்னை

எதிர்நோக்கி நிற்பதைநீ அறியாய் கொல்லோ? 16

பண்ணாலுன் அருட்புகழைப் பாடு கின்றேன்
பணிகின்றேன் மலரடியை; நின்ப டத்தைக்
கண்ணார மனங்குளிரப் பார்த்துப் பார்த்து
கண்ணீர்கொண் டாட்டுகின்றேன் கருணை வாழ்வே!
எண்ணாத நாளொன்று வாழ்வில் இல்லை;
இனியதமிழ் வளர்ப்பதிலே உன்னைக் காண்பேன்
அண்ணாஎன் கவிமலரைத் தூவி நின்றே
அடியிணையைத் தலைதாழ்த்தி வணங்குகின்றேன். 17

---

**பாடற் குறிப்பு:–** 16.2.1969 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. கொண்மூ – மேகம்.

## 31. அடக்கத்தை அடக்கம் செய்தோம்

**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

படைவலியால் வடபுலத்தைச் சேர வேந்தன்
பகையாக்கிப் பணிவித்தான்; நீயோ பேச்சு
நடைவலியால் நட்பாக்கிப் பணிய வைத்தாய்!
நாவலனே! 'மன்பதையைக் காக்கும் கொற்றக்
குடையுடைய குடிப்பிறத்தல் துன்பம்' என்று
குட்டுவனும் தெளிந்துரைத்தான்; புலவர் பாட்டுத்
தொடையுடையாய் 'முதலமைச்சன் எனினும் நானோர்
சூழ்நிலையின் கைதி' என நீயும் சொன்னாய். 1

'அன்றுமுதல் இன்றுவரை தோழர் என்னை
**அண்ணா**வென் றழைக்கின்றார்; அமைச்ச ரான
இன்றென்னை ஒருசிலரும் அண்ணா என்பார்;
இரண்டுக்கும் இடையிலுள வேறு பாட்டை
நன்றுணர்வேன்' என்றுரைத்தாய்; 'அமைச்ச ராகி
நாடாளும் பொறுப்பேற்றேன் இன்றும் தோழன்
அன்றுதரும் நிலைபோல வெண்பொன் ஒன்றே
அளிக்கின்றான்; மதிக்கின்றேன் மகிழ்வுங் கொள்வேன்.2

'நாடாள வந்தபினர் நூறு நூறு
நான்தருவேன் நான்தருவேன் என்று செல்வர்
ஓடோடி வருகின்றார்; ஏழை தந்த
ஒருவெண்பொன் என்னுடலிற் குருதி யாகும்;
மேடாளும் செல்வர்தரும் வெண்பொன் நூறும்
மெய்ப்பூசும் சந்தனமாக் கொள்வேன்' என்றாய்;
ஊடாடும் பொருள்நயத்தை எளியோர் தம்பால்
உனக்கிருக்கும் அன்புளத்தைக் காட்டி நின்றாய். 3

பிறந்தனைநீ சென்னைஎனும் இராச்சி யத்தில்;
பெற்றெடுத்த தாய்நாட்டின் இழிவு நீக்கி
இறந்தனைநீ தமிழ்நாட்டில்; தமிழ்நா டாக்க
ஏற்றதுயர் பற்பலவாம்; தன்ன லத்தைத்
துறந்தனைநீ நாட்டுநலம் ஒன்றே வேண்டித்
தூயபணி ஏற்றனைநீ; உழைத்து ழைத்துச்
சிறந்தனைநீ; அன்புருவே காந்தி யண்ணல்
சிந்தையெலாம் நின்செயலில் மிளிரக் கண்டோம். 4

புகழ்மலையின் உச்சிக்கே சென்று விட்டாய்!
புவியாளும் முதலமைச்சும் பெற்று விட்டாய்!
மகிழ்வுற்றுச் செருக்குற்றுத் திரிந்தா யல்லை;
மன்னவனே 'சாமான்யன்' என்றே உன்னை
இகழ்வாக அடக்கமுடன் சொல்லி வந்தாய்!
இனியிந்த அடக்கத்தை எங்குக் காண்போம்?
தகவுடையாய் அடக்கத்தை அடக்கம் செய்தோம்

தணியாத துயர்க்கடலில் மூழ்கி விட்டோம். 5

---

**பாடற் குறிப்பு:–** 16.2.1969 ஆம் நாள் பாடியது.

## 32. நெஞ்சம் நெக்குருகும்
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

பூவுலக வரலாறு படித்துத் தேர்ந்தார்
புதியதொரு வரலாற்றைப் படைத்து வாழ்ந்தார்
[1]நாவலர்ந்து வருஞ்சொல்லால் எழுத்தால் நெஞ்சால்
நயத்தக்க நாகரிகப் பண்பு சேர்த்தார்
தாவிவருந் தொண்டர்களைத் தம்பி என்று
தன்மானக் குடும்பத்தில் சேர்த்துக் கொண்டார்
ஆவிதனைத் தமிழினத்தின் விடுத லைக்கே
அளித்துவிட்டார் எமதுயிரில் தளிர்த்து விட்டார். 1

ஆண்டவனைப் பற்றுடையார் அழைப்ப தைப்போல்
**அண்ணா**அண் ணாவென்றே அழைக்கப் பெற்றார்
மீண்டவரைப் போலொருவர் யாங்குக் காண்போம்
மேலவரை நூலவரைப் பெரியார் சொல்லைத்
தாண்டரிய நெஞ்சினரைப் பண்பா டெல்லாம்
தழைத்துவரும் மனத்தவரைத் தமிழர் ஆட்சி
மீண்டுவர உழைத்தவரை நினையுந் தோறும்
மெழுகெனவே நெக்குருகிக் கசியும் நெஞ்சம். 2

---

**அருஞ்சொற் பொருள்:–** 1.நாவலர்ந்து – நா + அலர்ந்து = நாவில் தோன்றி.

## 33. பண்பு மலர்
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

பரந்திருக்கும் உள்ளத்தை நெற்றி காட்டும்;
பண்பாட்டை நகைதவழும் இதழ்கள் காட்டும்;
சிறந்திருக்கும் கூர்மதியை மூக்கு காட்டும்;
சிந்தனையின் ஆற்றலினை விழிகள் காட்டும்;
கரந்திருக்கும் வீரத்தைப் புருவங் காட்டும்;
கரகரத்த குரல்காட்டும் பெருமி தத்தை;
சுரந்திருக்கும் பேரருளை உள்ளங் காட்டும்
சுட்டுவிரல் தமிழரின ஒருமை காட்டும். 1

எளிமைதனை அணிந்திருக்கும் உடைகள் காட்டும்;
ஏற்றத்தை அவர்கண்ட நடைகள் காட்டும்;
ஒளிமிகுந்த அறிவாளர் எடுத்து ணர்த்தும்
உயர்நெறிகள் போற்றுவதைச் செவிகள் காட்டும்,
தெளிவுடைய மனமுடையார் அண்ணா என்று
செப்புகிற உறவுச்சொல் உரிமை காட்டும்;
அளிமிகுந்த துணிவுதனைச் செயல்கள் காட்டும்;
அடக்கத்தைக் குறளான உருவங் காட்டும். 2

பொறுமையெனும் உயர்பண்பு கொண்ட வுள்ளம்
பொறாமைதனை எள்ளளவும் காணா வுள்ளம்
வறுமையினைக் காணுங்கால் இரங்கும் உள்ளம்
வளர்தமிழின் வாழ்வுக்கே வாழ்ந்த வுள்ளம்
சிறுமையினைக் காணுங்கால் சீறும் உள்ளம்
சினமென்னுஞ் சுடுநெருப்பைச் சேரா வுள்ளம்
வருபவரைக் கைகொடுத்து வளர்க்கும் உள்ளம்
வாழ்வெல்லாம் நலஞ்செய்தே வளர்ந்த வுள்ளம். 3

கலைத்துறையில் திறமிக்க தலைவ ருண்டு
களங்காணாப் போராட்டத் தலைவ ருண்டு
கலைத்துவிடும் அரசியலில் தந்தி ரங்கள்
காட்டுகிற தலைவருண்டு துறைகள் தோறும்
மலைத்தெவரும் பாராட்டும் தலைவ ருண்டு
வானநெறி காட்டுகிற தலைவ ருண்டு
நிலைத்துவரும் பேரன்பை அண்ணன் போல
நெஞ்சத்தில் வளர்த்துவந்த தலைவ ருண்டா? 4

தொண்டர்தமைச் சொக்கட்டான் காய்க ளாக்கிச்
சுரண்டிநலம் துய்க்காத தலைவன், ஏழைத்
தொண்டர்தமைத் தூண்டிவிட்டுச் சிறைக்க னுப்பிச்
'சுகபோகங்' காணாத தலைவன், நல்ல
தொண்டருக்குள் தொண்டனெனக் கலந்து நின்று
தோள்தந்து துணைநின்ற தலைவன், உற்ற
தொண்டர்தமைத் தம்பியராக் கொண்ட அண்ணன்
தொண்டுளத்தால் நிலைபெற்ற தலைவன் ஆனான். 5

பேசுபுகழ்ப் பேரறிஞன் எங்கள் அண்ணன்
பெற்றிருந்த ஆற்றலுக்கோர் எல்லை யுண்டோ?
ஏசுவையும் புத்தரையும் ஏட்டிற் கண்டோம்
இன்றவர்தம் பண்புருவை நாட்டிற் கண்டோம்
ஏசுமொழி அத்தனையும் தாங்கிக் கொள்ளும்
இதயத்தை அண்ணாவின் செயலிற் கண்டோம்
வாசமலர் போல்மனத்தான் சிரித்துக் கொண்டே
'வசவாளர் வாழ்க'வென மொழியக் கேட்டோம். 6

ஒருவழியில் நிலைநின்று நடப்பீர் என்றே
உணர்த்துதல்போல் ஒருவிரலைச் சுட்டிக் காட்டிப்
பெருமையுற நிற்கின்ற சிலையின் முன்னே
பேதையர்போல் துணிகொண்டு முகத்தை மூடி
வருமனித உருவங்கள் கண்ட துண்டு;
வாராத நோய்வந்து வாடி நின்று
மருகுகிற வேளையிலும் வைதா ருண்டு;
மாவலியன் பொறுமையொடு தாங்கி நின்றான். 7

நெஞ்சமெலாம் குடிபுகுந்து மெச்ச நின்றான்
நெடும்புகழின் படியேறி உச்சி சென்றான்
செஞ்சுடர்போல் ஒப்பரிய தலைவன் என்றே
சேராரும் உணர்ந்துதலை வணங்க நின்றான்
வஞ்சமிலான் நானேநும் தலைவன் என்று
மதங்கொண்டு வெறிகொண்டு சொன்ன தில்லை;
நெஞ்சுருகச் 'சாமான்யன்' என்றே சொன்னான்
நெல்வயலில் விளைந்தபயிர் வளைந்தே தோன்றும். 8

தம்பியர்தம் நெஞ்சமெலாம் இதழ்க ளாகத்
தனிஅறிவு மகரந்தப் பொடியே யாக
வெம்பகைக்கும் இனிமைசெயும் கருணைப் பண்பே
வீசிவரும் மணமாகக் கற்ற கல்வி
தெம்புடைய தண்டாகச் சுரக்கும் அன்பே
தேனாகக் காஞ்சிஎனும் பொய்கை தன்னில்
செம்மைநிறத் தாமரைப்பூ மலரும் போது
சிறுகாலன் அம்மலரைக் கசக்கி விட்டான். 9

## 34. நன்றி காட்டுக
(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)

கடவுளின் பெயரைச் சொல்லிக்
கட்டிய கதைக ளெல்லாம்
மடமையென் றெடுத்துச் சொல்லி
மாபெரும் போர்தொ டுத்துக்
கடமையை ஆற்றி நின்ற

கதிர்நிகர் பெரியார் கொள்கை
சுடர்விடப் பாடி வந்த
தொழத்தகு பாட்டு **வேந்தன்.** 1

சுயமரி யாதைக் காரன்
சோர்வினை யறியா வீரன்;
மயலுறு பகைவர் நெஞ்சம்
மருண்டிடச் செய்யுந் தோளன்
நயமிகு தமிழர் பண்பில்
நஞ்சினைக் கலக்கும் வஞ்சக்
கயவரைச் சுட்டெ ரிக்கும்
கனல்பொழி விழிகள் கொண்டான். 2

நறுக்கிய கருப்பு மீசை
நரிக்குண மாக்கள் வாலை
நறுக்கிடும் தோற்றம் காட்டும்;
நற்றமிழ் மாந்தர் வாழ்வில்
குறுக்கிடும் பகைமை யெல்லாம்
குலைநடுங் கிடவே செய்யும்;
முறுக்கிய நரம்பில் நல்ல
முத்தமிழ்க் குருதி பாய்ச்சும். 3

சொல்லிலே தேனும் உண்டு;
சுடர்விடுங் கனலும் உண்டு;
மெல்லவே தென்றல் பேசும்;
மீறிய புயலும் வீசும்;
நல்லமென் குயிலும் கூவும்
நடுவினிற் புலியும் பாயும்;
வல்லமை தமிழர்க் கிங்கே
வழங்கிடும் உணர்ச்சிப் பாடல். 4

தமிழ்மொழி தழைக்க வேண்டின்
தமிழினம் நிமிர வேண்டின்
அமிழ்தெனப் பாட்டு வேந்தன்
ஆக்கிய பாடல் முற்றும்
தமிழரின் நெஞ்ச மெல்லாம்
தனியரசு சாட்சி செய்து
கமழ்ந்திட வேண்டு மிங்கே
களிநடம் புரிய வேண்டும் 5

பாரதிப் புலவன் நூலைப்
பரப்பிடப் பலரிங் குள்ளார்;
பாரதி தாசன் பேரைப்
பகர்ந்திடச் சிலரே உள்ளார்;
ஊரவர் நன்றி யில்லார்
ஒருதமிழ் மகனைப் போற்றும்
சீரறி யாத மாந்தர்
செந்தமிழ் நாட்டில் உள்ளார். 6

இத்தகு நினைவால் எங்கள்
எழிற்கவி வேந்த னுக்கு
முத்தமிழ் மன்றங் காண்க;
முன்னவன் புகழ்ப ரப்ப
மெத்தவும் முயல்க; அந்த
மேலவன் கருத்தும் பாட்டும்
இத்தரை முழுதுஞ் செல்க;
எழுச்சியைப் பரப்பி வெல்க. 7

## 35. கண்ணீரை யார் துடைப்பர்?

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

பாவெல்லாம் படையாக்கிப் பகைமை யோட்டும்

**பாவேந்தே** எங்குலத்தின் தலைவா இன்று
நாவெல்லாம் புலர்ந்திருக்க விழிநீர் சிந்த
நாடெல்லாங் கவிவாணர் திகைத்து நிற்கக்
கோவென்று வாய்ப்புலம்பக் கையற் றேங்கக்
கொற்றவனே கற்றவனே மறைந்தா விட்டாய்!
சாவொன்றும் புதுவதன்று தெரியும்; ஆனால்
தமிழன்னை கண்ணீரை யார்து டைப்பார்? 1

கவிஞரெனப் பேர்படைத்த எங்கட் கெல்லாம்
காவலன்யார்? செந்தமிழ்க்குத் தீங்கு செய்யப்
புவியிலெவர் நினைத்திடினுங் கனன்றெ ழுந்து
புலிப்போத்தாய்த் தனைமறந்து தமிழ்நி னைந்து
கவிபொழிய வல்லான்யார்? இனிமே லிங்குக்
கவிதைக்குப் பரம்பரையைப் படைப்போன் யார்யார்?
இவையெல்லாம் நினையுங்கா லுணர்வு விஞ்சி
இறப்பென்னும் ஒருபாவி தொலைக என்போம். 2

முழுநிலவே செங்கதிரே காலங் கண்டும்
மூவாத தமிழ்ப் பொழிலில் ஆடிவந்த
அழகொழுகும் இளமயிலே உலக மாந்தர்
ஆவியெலாங் குளிர்விக்குந் தென்றற் காற்றே
பழகுதமிழ்க் கனிமூன்றுஞ் சுவைத்துப் பார்த்துப்
பாடிவந்த பூங்குயிலே மறைந்தாய் நாங்கள்
அழுதழுதும் வாராயோ? மீண்டு மிங்கே
ஆடாயோ பாடாயோ? அந்தோ அந்தோ! 3

கண்மூடி வழக்கமெனுங் காட்டில் தோன்றுங்
கவைக்குதவாச் சாதிமதம் அடிவே ரற்றும்
எண்கோடிப் பழங்கொள்கைச் சருகு சுள்ளி
இழிவுதரும் அடிமையெனும் வெம்பல் வீழ்ந்தும்
மண்மூடிப் போகவெனச் சாடி வந்த
மாவலிமைப் பெரும்புயலே இடிமு ழக்கப்
பண்பாடி அணிதிகழும் பாவால் மின்னிப்
பழுத்தசுவை பொழிமுகிலே யாண்டுச் சென்றாய்? 4

எவ்விடத்தும் எப்பொழுதும் எவரி டத்தும்
எதுவரினும் உண்மையினை எடுத்து ரைக்கும்
செவ்வியநற் பெருமிதமும் அஞ்சா நெஞ்சும்
சேராரை நடுக்குறுத்துஞ் சீர்த்த நோக்கும்
கவ்வுமெழிற் றிண்டோளும் விரிந்த மார்பும்
களிறனைய பெருநடையுங் கொண்ட சிங்கம்
இவ்வுலகில் எங்கள்மனக் குகையில் வாழும்
எழுந்தெழுந்து முழங்கிவரும் எந்த நாளும் 5

இருட்புலத்திற் கவியுலகம் மூழ்குங் காலை
எழும்வெள்ளி பாரதியாய் வந்த திங்கே
மருட்புலத்தை மாய்க்கின்ற ஞாயி றாக
மன்னவனே நீவந்தாய் அவன்பேர் சொல்ல;
உருப்பெற்ற கதிர்களென எம்மைப் போல்வார்
உள்ளனரே ஆயிரவர் நின்பேர் சொல்ல;
செருக்குற்றே மொழிகின்றேன் ஐயமில்லை
சிந்தையுளே நீயிருக்க எனக்கேன் அச்சம்? 6

வாழ்நாளிற் கவிஞனுக்கு வாழ்வே யில்லை
வையத்துக் குறையென்றே சொல்வர்; அந்தத்
தாழ்வுரையைப் பெருங்குறையை மாற்றி விட்ட
தகவுனக்கே தலைநகரில் வாய்த்த தையா!
வீழ்நாளின் பிறகடையும் பெருமை யெல்லாம்
விழியெதிரே கண்டுவந்தாய் வெள்ளம் போல
ஆழ்கடலின் கரையருகே தமிழர் கூட்டம்
ஆர்ப்புடனே விழவயர்ந்து களிக்கக் கண்டாய். 7

இல்லறத்தைப் பல்கலையின் கழக மாக்க
ஈடில்லாக் குடும்பவிளக் கேற்றி வைத்தாய்

சொல்லடுத்த தமிழ்வளர்க்கத் தமிழர்க் கெல்லாம்
தூய்மைமிகு தமிழியக்கஞ் சொல்லி வைத்தாய்
புல்லிதழ்த்தேன் மலர்முதலா இயற்கை யூடு
பொருந்தழகின் சிரிப்பெல்லாந் திரட்டித் தந்தாய்
சொல்லிருக்கும் பொருளிருக்கும் அணியி ருக்கும்
சொற்றமிழில் பாண்டியனின் பரிச ளித்தாய். 8

நறுந்தேனும் பசுப்பாலுங் கலந்து வைத்து
நற்கவியாம் முக்கனியை நறுக்கி யிட்ட
விருந்தாகும் நீதந்த கவிதை; மேலும்
விசையொடிந்த உடலகத்தில் வீரஞ் சேர்க்கும்;
பொருந்தாரைச் செவிசாய்த்துப் பொருந்த வைக்கும்;
புலவோய்நின் நறுங்கவிதைக் கனிகள் சாவா
மருந்தாகும்; செந்தமிழுக் குயிர்ப்பு நல்கும்;
வையத்துள் என்றென்றும் வாழும் ஐயா 9

எம்பாட்டன் பாரதிக்குத் தாச னானாய்
எம்மனைய கவிவாணர்க் கரச னானாய்
நம்மாட்சி யவைப்புலவன் நீயே யாகும்
நாள்விரைவி லுண்டென்று நம்பி நின்றோம்
எம்பாட்டில் அவலத்தைச் சேர்த்து விட்டாய்
இரங்குகின்றோம் கண்ணீரைச் சொரிந்து நின்றோம்
தெம்பூட்டித் தமிழ்காக்க வழிகள் காட்டு,
திறமூட்டு கைநீட்டித் தொழுது நின்றோம் 10

பாரதிக்குத் தாசனெனப் பாரு ரைக்கும்
பாவலனே கவிக்குலத்துத் தலைவ ரேறே
யாருரைக்க வல்லார்நீ யிறந்தா யென்றே
யாமொவ்வோம்; பாரதியும் இளங்கோ கம்பன்
பேரறிஞன் வள்ளுவனும் இறந்தா போனார்?
பெருமையொடு வாழ்கின்றார்; அவர்போல் நீயும்
பாருலகில் வாழ்கின்றாய் ஐயா எங்கள்
பாடலுக்கும் உயிரூட்டு வழியுங் காட்டு. 11

## 36. உளங்கவர் புலவர்

(நூல்:—தாய்மொழி காப்போம்)

கண்ணுக்கு விருந்தாகும் இயற்கைக் காட்சி
காளையரும் கன்னியரும் விழைந்து தங்கள்
கண்ணுக்கு முதன்மைதரும் காதற் காட்சி
கருவிழியை விழித்திமையார் முகத்தும் மார்பும்
புண்ணுக்கு விழைந்திருக்கும் வீரக் காட்சி
புலவருக்குப் புரவலரும் பணிந்து நின்று
பண்ணுக்கு விழைந்திருக்கும் காட்சி எல்லாம்
பாடிவைத்த சங்கத்தார் கவர்ந்தார் நெஞ்சை 1

அகச்சமையம் புறச்சமையம் என்று கூறி,
அளப்பரிய சமையங்கள் படைத்து நின்று,
பகைக்குணமே கொண்டுழன்ற மாந்த ருக்குப்
பகவனென ஒருபொருளை உணர்த்திப் பாவில்
மிகச்சிறிய குறட்பாட்டால் அறத்துப் பாலும்
மேன்மைபெறும் பொருட்பாலும் இன்பப் பாலும்
தொகுத்தறங்கள் உரைத்தவன்யார்? அவனே யன்றோ
தொன்னாள்தொட் டுளங்கவர்ந்த கவிஞன் ஆவன்; 2

கற்புடைய மாதர்தமை உலகம் போற்றக்
கலைக்கோயில் எழுப்பியருள் சேரன் நல்ல
பொற்புடைய அறச்செல்வி பசிநோய் நீக்கப்
பூண்டிருந்த தொண்டுளத்தை விளக்கும் வண்ணம்
சொற்புதுமை காட்டியொரு நூல ளித்த
தொல்புலவன் மதுரைநகர் வாழும் சாத்தன்,
பற்பலவாம் மணம்புணர்ந்த சீவ கற்குப்

பாமாலை தொடுத்ததிருத் தக்க தேவன். 3

தமிழ்மொழியின் சொற்களெலாம் முன்னே நின்று
தவம்புரிந்தே இடம்பெறுவான் முந்தி நிற்க
அமிழ்தனைய பாடலுக்குள் வரிசைநல்கி
அவைதமக்கு மாற்றுயர்ந்த அணிகள் நல்கித்
தமியனெனச் சொற்சிலம்பம் ஆடுங் கம்பன்,
தரணியிலோர் நிகரில்லாப் பரணி பாடி
நமையெல்லாம் மயக்குறுத்தும் வீர மூட்டி
நாப்பறையால் போர்ப்பறைகள் ஆர்த்த நல்லோன். 4

பொன்விளைந்த களத்தூரன் வெண்பாப் பாடிப்
புகழேந்தும் ஒருகவிஞன் தமிழுக் காக்கம்
முன்விழைந்து நூல்செய்து காலங் கண்ட
முத்தமிழ்க்குத் தொண்டுசெயும் கவிஞ ரெல்லாம்
என்விழைவுக் கிலக்கானோர்; அவர்தம் பாட்டின்
இனிமைக்கும் தனிமைக்கும் அடிமை யானேன்;
இன்பளைந்த அவர்திறத்தை நுவலக் கேட்பின்
என்பெல்லாம் நெக்குருக மகிழும் உள்ளம். 5

மாசகன்ற வீணையென வெம்மை நீக்க
மாலைவரும் மதியமென, உளஞ்சி லிர்க்க
வீசுகின்ற தென்றலென, உயிர்கள் வேட்கும்
வீங்கிளமை வேனிலென, மலரில் வண்டு
மூசுகின்ற பொய்கையென உவமை சொல்லி
முழுமுதலை விளக்கிநின்ற நாவின் வேந்தன்
பேசுகின்ற தமிழ்ப்பாட்டால் இறையைக் காட்டும்
பெரும்புலவன் கவராத உள்ள முண்டோ? 6

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் நல்ல
குளிர்தருவாய். தருநிழலாய், நெஞ்ச மென்னும்
மேடையிலே வீசுகின்ற தென்றற் காற்றாய்,
மென்காற்றின் விளைசுகமாய், கருணை என்னும்
ஓடையிலே ஊறிவரும் தெண்ணீ ராகி
உகந்தமண மலராக, சிறுவ னாக
ஆடையிலே எனைமணந்த இராம லிங்க
அடிகளவர் உளங்கவர்ந்த வள்ள லாவர். 7

பாமரராய் விலங்குகளாய்ப் பான்மை கெட்டுப்
பகுத்தறிவும் அற்றவராய்ப் பிறந்த நாட்டைப்
பூமிதனில் அயலவர்க்கே அடிமை யாக்கிப்
புழுவினைப்போல் பூச்சியைப்போல் கிடந்த நாளில்
தேமதுரத் தமிழ்ப்பாட்டால் புரட்சித் தீயைத்
திசையெல்லாம் மூட்டியவன் உரிமை எல்லாம்
நாமடைய வேண்டுமென்ற உணர்வு தந்த
நற்கவிஞன் எனதுள்ளம் கொள்ளை கொண்டான்; 8

தென்னாட்டின் விடுதலைக்கே வாழ்வு தந்தோன்;
தீந்தமிழின் உரிமைக்கே பாடல் தந்தோன்;
இந்நாட்டில் பிறமொழிகள் படையெ டுத்தால்
எழுந்தார்க்கும் பாவேந்தன், எதிரி கோடிப்
பொன்காட்டி யழைத்தாலும் இகழ்ந்து தள்ளிப்
புகழ்மிக்க தமிழினத்தின் மேன்மை காக்கத்
தன்பாட்டைப் படைத்தளித்தோன் என்றும் மாறாத்
தன்மான இயக்கத்தான் உளங்க வர்ந்தான்; 9

எளிமைக்குப் பிறப்பிடமாய், இனிய சொல்லின்
இருப்பிடமாய் ஆசையிலா மனத்த னாகி,
ஒளிமிக்க புத்தனுக்கும் பார சீக
உமருக்கும் புகழோங்கும் வண்ணம் செய்த
களிமிகுத்த பாவலனாய்ச், சிறுவர் உள்ளம்
கனிவிக்கும் கவிமணியாய், உண்மை நேர்மை
தெளிவிக்கும் ஒருருவாய் வாழ்ந்த எங்கள்
தென்புலத்தான் திருவடியை நெஞ்சிற் கொள்வேன். 10

எத்துணைதான் இடுக்கண்கள் நேர்ந்த போதும்
　எதிர்த்தெழுந்து நகைத்துநின்று வெற்றி கண்ட
முத்தமிழ்க்குப் புகழ்படைத்த புலவர் பல்லோர்
　முன்னாளில் வாழ்ந்திருந்தார்; என்றன் உள்ளம்
நத்துகின்ற புலவர்சிலர் பெயரை இன்று
　நாம்நினைதல் நலம்பயக்கும்; நினைந்து வாழ்த்தும்
அத்திறத்தால் தமிழ்காக்கும் எண்ணம் நெஞ்சில்
　அரும்புவிடும்; மலராகும்; மணம்ப ரப்பும். 11

---

**பாடற் குறிப்பு:—** குன்றக்குடி கவியரங்கில் பாடியது—16.1.1965.

## 37. இளங்கோவடிகள்
**(நூல்:—தாய்மொழி காப்போம்)**

கோவேந்தர் பெருங்குடியிற் பிறந்தும் நாட்டுக்
　குடிமக்கள் காப்பியத்தைப் படைத்துத் தந்தான்;
மூவேந்தர் ஒற்றுமைக்கு வழியுங் கண்டான்;
　முதலினமாம் தமிழினத்தின் வரலாற் றுக்கு
நாவேந்தும் புகழ்சேர்த்தான் சேர நாட்டு
　நற்றமிழன்; பெண்ணினத்தின் பெருமை சொன்ன
பாவேந்தன்; தேனூற்றி வைத்த தைப்போல்
　பாநூற்றும் தான்நோற்றும் பெருமை கொண்டான். 1

சேவடியின் சிலம்பணியால் விளைந்து வந்த
　சிலம்படியால் கற்பணங்கின் வரலாற் றுக்கோர்
கோவிலினைக் கட்டியவன்; அரசு வேண்டாக்
　கோவடிகள்; முத்தமிழின் காப்பி யத்தால்
மூவரசர் வரலாறும் மொழிந்த மேலோன்
　மொய்த்தபுகழ் எம்மவர்க்குத் தந்த நல்லோன்;
நாவரிசை பாவரிசை காட்டி எங்கள்
　நற்றமிழ்க்குச் சுவைமிகுத்தான் வாழ்க நன்றே. 2

## 38. ஞாயிறு போற்றுதும்
**(நூல்:—தாய்மொழி காப்போம்)**

தென்பால் உளது, தேன்வளர் சாரல்
[1]மென்கால் உலவும் திண்கால் [2]ஆரம்
குதிதரும் அருவி மருவிய மாமலை
மதியந் தவழும் பொதியம் ஒன்று;
வடபால் உளது, வானுயர் கொடுமுடி
தொடருங் கருமுகில் படருஞ் சாரல்
உறைதருந் தண்பனி நிறைதரும் மாமலை
பரிதியை மறைக்கும் பனிமலை ஒன்று;
பெருமலை இரண்டும் ஒருமலை யாக்கக்
கருதிய ஒருசிலர் உறைபனி கொணர்ந்து
தென்றல் தவழும் குன்றின் தலையில்
அன்றவர் வைத்தனர்; அடடா என்றனர்;
பனியால் நடுக்குறும் பயனே கண்டனம்;
இனிய தென்றலும் எழில்நலங் குறைந்தது;
விடுத்தஅப் பனிதான் விரைந்திவண் விலக
நடுக்கிய பனியின் நலிவும் அகல
ஒருநூ ற்றாண்டின் முன்னர் ஒருநாள்
மறைமலை என்னும் மறுபெயர் பூண்டு
கடலலை மோதும் கரைபெறும் மூதூர்
இடமகல் நாகை எனும்பெயர்ப் பட்டினத்
தெழுந்ததோர் ஞாயிறு கரைந்தது வெண்பனி;
தொழுதனர் மாந்தர் தோன்றுசெங் கதிரை;

இரியா இருளை இரியச் செய்வான்
பெரியார் அண்ணா பெரும்பணி புரிநாள்
இடையறா அப்பணி இடையூ றின்றி
நடைபெறப் பேரொளி நல்கிய தக்கதிர்;
இருளால் மறைபடும் இனமொழி உணர்வுகள்
தெரிதர லாயின தெளிந்தனம் யாமே
தெளிந்தனம் ஆதலின் குழைந்துள பனியில்
விழுந்தினி அழியோம் விழிப்புடன் நடப்போம்;
விழியொளி பெற்றும் வீழ்ந்ததில் மூழ்கின்
பழிபெறும் எம்மினும் இழிந்தவர் இலையால்;
விழியுளார் படுகுழி வீழ்வதும் உண்டோ?
ஒருகால் உடையவன் ஊன்றுகோல் பெறலாம்
இருகால் உடையோன் எவனதை விழைவான்?
வளமிலா மொழிகள் வருமொழிச் சொற்களைக்
கொளலாம் அதனாற் குற்றமொன் றில்லை;
உயர்தனிச் செம்மொழி ஒப்பிலாத் தமிழ்மொழி
அயன்மொழிச் சொற்களை அணுகுதல் முறையோ?
முட்டிலாச் செல்வர் மற்றவர் பாற்கடன்
பெற்றிட முனைதல் பேதைமை யன்றோ?
அதனால்
சந்தனப் பொதியச் செந்தமிழ் மாமலை
தந்தருள் தென்றலில் தனிநடை பயில்வோம்;
தளர்நடை தவிர்த்துத் தனிநடை கொடுத்த
வளரிளங் கதிரை வாயுற வாழ்த்துவம்;
பலமொழி பயின்றும் பைந்தமிழ்ச் சோலையுள்
உலவிய தென்றலை உள்ளுறப் போற்றுவம்;
இசைத்தமிழ் சுவைத்திட ஈகுவர் பெரும்பொருள்;
நாடகத் தமிழ்க்கும் நல்குவர் அவ்வணம்;
இயற்றமிழ் எனினோ ஈயார் ஒருபொருள்;
மயற்படும் மாந்தர்தம் மதிதான் என்னே!
இந்நிலை நிலவிய இம்மா நிலத்தில்
அந்நாள் வெண்பொன் முந்நூ றளித்திட
இயற்றமிழ் மதிப்பை ஏற்றிய புலவன்,
செயற்றிறம் புரிந்து செந்தமிழ் வளர்த்தவன்
கொள்கையிற் பிறழாக் குணக்குன் றவனைக்
கள்ளவிழ் மலர்கொடு கைகுவித் தேத்துவம்;
மறைமலை என்னும் மறையா மலையை
நிறைதர நெஞ்சினில் நிறுத்துவம் யாமே;
செறிபுகழ்ச் செந்தமிழ் செழித்திட அவன்றன்
நெறியறிந் தொழுகுவம் நிலைபெறும் பொருட்டே.

---

**பாடற் குறிப்பு:–** 27.11.1976 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–1.** மென்கால் – தென்றல். 2. ஆரம் – சந்தனமரம்.

## 39. மீண்டது பொற்காலம்

**(நூல்:–தாய்மொழி காப்போம்)**

பண்சுமந்த பாட்டொலிபோல், அருவி பாடப்
 பனிமலரும் சந்தனமும் சூழ்ந்து நிற்க
விண்சுமந்த முகில்தவழ்ந்து துளிகள் தூவி
 விளையாடும் தண்பொதியம் தந்த தாயைக்
கண்சுமந்த கருமணியைத் தமிழைத் தேனைக்
 கனிசுமந்த சுவைச்சாற்றைத் தூய்ம னத்துக்
கண்சுமந்த பெரும் புலவீர்! நல்லீர்!
 கைகுவித்து நல்வரவு கூறு கின்றோம். 1

கண்ணுதலோன் தலைமைகொளப் புலவர் கூடிக்
 கழகமென ஒருமூன்று நிறுவி ஆங்குப்
பண்ணுறவே பசுந்தமிழை வளர்த்து நிற்கப்
 பாண்டியரின் துணையோடு வளர்ந்த சங்கம்

மண்ணிடையே இலக்கியங்கள் இலக்க ணங்கள்
வளமுறவே பெருகிவர ஆய்ந்த தென்பர்;
எண்ணரும்அப் பொற்காலம் மீண்டும் இங்கே
எழுந்ததெனப் புலவர்குழு தோன்றக் கண்டோம். 2

அன்றிருந்த புலவரெலாம் ஒன்று கூடி
அன்னைமொழி வளர்வதற்கு வழிகள் கண்டார்;
ஒன்றுபடு கருத்தினையே மொழிந்து நின்றார்
உயர்வுற்றார் தமிழ்மொழியின் உயர்வுங் கண்டார்;
இன்றவர்போற் புலவர்பலர் இணைந்து நிற்கும்
ஏற்றத்தைக் காணுகின்றோம் மகிழ்வுங் கொண்டோம்;
என்றுமுள தென்றமிழ்க்கு மேன்மை ஒன்றே
இனிவருமென் றெண்ணிமனங் களித்து நின்றோம். 3

கார்முகிலின் வருகையினால் மயில்கள் ஆடும்
கருவானில் மழைவரலால் பயிர்கள் கூடும்
ஏர்முனையின் வருகையனால் நிலம்சி ரிக்கும்
எழில்வண்டின் வருகையினால் மலர் சிரிக்கும்
ஊர்மதியம் விண்வரலால் இன்பம் பொங்கும்
உயர்புலவீர் நும்வரவால் எங்கள் நெஞ்சம்
கூர்மகிழ்வு கொண்டின்பம் பெருக நின்றோம்
குழுமிவரும் தமிழ்ப்பெரியீர் வருக வாழ்க! 4

பாரெல்லாம் தமிழ்நெறியே செழிக்க வேண்டும்
பல்வகைய புதுநூல்கள் தோன்ற வேண்டும்
ஊரெல்லாம் புலவர்தமைப் போற்ற வேண்டும்
உயர்வதனால் தமிழ்மொழிக்குச் சேர்தல் வேண்டும்
சீரெல்லாம் மேவிவர வலிமை கொண்ட
செயற்குழுவாய்ப் புலவர்குழு வளர்தல் வேண்டும்
பேரெல்லாம் பெற்றபெரும் புலவீர் வாழ்க!
பேணுமுயர் நாடுமொழி வாழ்க! வாழ்க! 5

---

**பாடற் குறிப்பு:—** காரைக்குடிக்கு வருகை தந்த தமிழகப் புலவர் குழுவிற்கு வரவேற்பு—18.10.1969.

## 40. என்றும் வாழ்வர்
**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

அள்ளிக் கொடுத்தவர் சாவதில்லை
அன்பு மனத்தவர் மாய்வதில்லை (அள்ளிக்)

உள்ளம் மிகுத்தவர் வீழ்வதில்லை
ஓங்கு பெரும்புகழ் சாய்வதில்லை (அள்ளிக்)

முல்லைக் கொடிக்கொரு தேர்கொடுத்தான் — **பாரி**
முத்தமிழ் வாணர்க்கோ ஊர்கொடுத்தான் (அள்ளிக்)

சொல்லுந் தமிழ்க்குயர் வாழ்வளிக்கக் — **குமணன்**
தூய தலைகொள வாள்கொடுத்தான் (அள்ளிக்)

நெல்லிக் கனிக்கொரு பேரளித்தான் — **அதியன்**
நீள்புகழ் அவ்வைக்கு வாழ்வளித்தான் (அள்ளிக்)

கல்விப் பணிக்கெனச் சீர்கொடுத்தான் — **அழகன்**
கைப்பொருள் யாவையு மேகொடுத்தான் (அள்ளிக்)

வள்ளல்க ளாமென வாழ்பவரை
மாய்ந்தனர் என்றிங்கு யாருரைத்தார்?
உள்ளம் இருப்பவர் யாவருமே
உலக வரைப்பினில் வாழ்ந்திடுவார்.

## 41 தமிழ்த் தொண்டு
**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

தமிழ்ப்புலவர் அரசியலில் வல்லா ருண்டா?
தகுதிமிகு செய்தித்தாள் நடத்த லுண்டா?
தமிழ்ப்புலவர் தொழிலாளர் இயக்கங் கண்டு
தலைமைபெறும் நிலையுண்டா? சிறையிற் பட்ட
தமிழ்ப்புலவர் முன்புண்டா? சமய வாதி
தன்கருத்தைப் பெரியார்முன் மொழிந்த துண்டா?
தமிழ்ப்புலவர் பொதுமைநெறி புதுமைப் போக்குச்
சார்ந்ததுண்டா? **திரு.வி.க.** ஒருவர் உண்டு. 1

பன்மொழிகள் கற்றதனால் பான்மை கெட்டுப்
பைந்தமிழ்க்கோர் ஊறுசெய நினையா நெஞ்சர்;
தென்மொழியும் வடமொழியும் கரைகள் கண்டார்;
தீந்தமிழைச் செந்தமிழை உயிராக் கொண்டார்;
நன்மைதரும் உரைவல்லார்; சங்க நூலின்
நயம்பொழியும் நாவல்லார்; பூங்குன் றத்து
நன்மகனைப் பண்டிதமா மணியை நெஞ்சால்
நாடிடுவோர் தமிழ்மொழிக்குத் தீங்கு செய்யார். 2

நாவாழும் தமிழ்மொழிக்கே வாழ்வு வேண்டி
நயத்தக்க ஆய்வுரைகள் எழுதிக் காட்டித்
தீவாழும் நெஞ்சுடைய ஆரி யத்தின்
திரிபுரையைப் பகுத்தறிவால் மறுத்துக் காட்டிக்
கோவாக நம்முன்னே வீற்றி ருக்கும்
கொடுமீசை சிவந்தவிழி கருத்தமேனிப்
பாவாணர் படைத்தளித்த எழுத்த னைத்தும்
பசுந்தமிழுக் காணிவேர் ஆகி நிற்கும். 3

மேவாத மனமுடையார் ஒன்று கூடி
மேலான எழுத்தாளர் என்று கூறிக்
காவாத நாவினராய் வீட்டுக் குள்ளே
கழறுகிற மொழியெல்லாம் எழுதி வைத்துச்
சாவாத இலக்கியமென் றியம்பி வந்த
சழக்கருக்கே முதலிடமென் றிருந்த நாளில்
மூவாத தமிழ்வளர வழிவ குத்த
மு.வ.வின் தமிழ்த்தொண்டே தலைநின் றோங்கும். 4

அறிவியலைத் தமிழ்மொழியில் ஆக்க வேண்டி
அதற்கென்றே உழைத்துவரும் கோவை தந்த
பொறியியலில் வல்லார்கள் வெளிக்கொ ணர்ந்த
பொன்மலராம் கலைக்கதிரின் புதுமை காட்டும்
நெறிமுறையை நாமின்னும் உணர வில்லை;
நிலையான அவர்பணியை மதித்துப் போற்றின்
வருமுலகம் நமைவாழ்த்தும் புகழும் சேர்க்கும்
வளர்தமிழில் புதுமைகளும் மலர்ந்து நிற்கும். 5

## 42. அப்பரடிகள்
**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

திருத்தலங்கள் பலசென்று, கசிந்து நின்று
திருவாயால் தேவாரம் பாடி வந்தார்;
உருக்குலைந்த இடமெல்லாம் தூய்மை செய்ய
உழவாரப் படையொன்று கையிற் கொண்டார்;
அருத்தியொடு ஞானப்பால் உண்ட வாயால்
**அப்பரெ**னச் சம்பந்தன் அழைக்க நின்றார்;
திருத்தமுற நடையறாத் துறவு பூண்டார்;
திருநாவுக் கரசரெனப் புகழும் பெற்றார். 1

வெப்புறுத்திக் கடலுக்குள் கட்டி வீழ்த்தி,
வேதனைக்குள் தள்ளிடினும் கொள்கை மாறா
அப்பருக்குச் சமமாக ஒப்பு ரைக்க
ஆளில்லை; சமயங்கள் பலவுந் தோய்ந்து
தப்பறுக்கும் நிலையுணர்ந்த தரும சேனர்;
தவமுனிவர், வேளாளர், தகுதி மிக்கார்;
அப்பழுக்கே இல்லாத ஒழுக்க சீலர்;
அவர்கொண்ட தொண்டுள்ளம் வாழ்க வாழ்க 2

## 43. எழுத்து மலை

**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

தொழத்தகுநற் றமிழ்மொழியும் அதனோ டொத்த
தொன்மைமிகும் ஆரியமும் கற்றுத் தேர்ந்து
பழுத்தமலை; பண்புவளர் ஆங்கி லம்போற்
பலமொழிகள் பயின்றமலை; சான்றோர் நெஞ்சம்
வழுத்துமலை; வளர்ந்துயர்ந்த எழுத்து வல்லார்
வற்றாத அருவியெனத் தோன்றச் செய்த
எழுத்துமலைப் பெருமையெலாம் விண்டு ரைத்தல்
எளியதொரு செயலாமோ**?** அரிய தன்றோ**?** 1

அளக்கஒரு கருவியிலா அளவு கொண்டான்;
அலகில்பல பொருள்கொண்டான்; பகைவர் யாரும்
துளக்கரிய நிலைகொண்டான்; புகழால் ஓங்கித்
தொலைவிலுளார் அறியவளர் தோற்றங் கொண்டான்;
உளத்துறுநம் தமிழ்நினைவு வறந்த போதும்
உலகினர்க்கு வளந்தருநல் வன்மை கொண்டான்;
வளத்திலுயர் அம்மலையை மறைப்பான் வேண்டி
வஞ்சனையார் முயல்வரெனின் மதிதான் என்னே! 2

நாடகநூல், பாவகைநூல், ஆய்ந்து ரைத்த
நலமிகுநூல், அறிவியல்நூல், நுழைபு லத்தார்
நாடறிவு, நூல்பலவோ டுரைநூல், நெஞ்சம்
நயக்கின்ற நெடுங்கதைநூல் இன்னே ரன்ன
பீடணையும் பெருநூல்கள் எழுதித் தந்த
பெருமலையாம் **மறைமலை**யின் எழுத்து வன்மை
நாடறியும் வீடறியும் நல்லோர் நெஞ்சம்
நன்கறியும்; அறியாதார் அறியா தாரே. 3

சமயமெனக் கடவுளெனப் பேர்கள் சொல்லித்
தழைத்துவரும் போலிகளைக் கடியும் கூர்வாள்;
தமிழரிடைப் படர்ந்துவரும் சாதித் தீமைச்
சழக்குகளை வேரொடுசுட் டெரிக்குஞ் செந்தீ;
இமயமலை தந்தபொது மொழியீ தென்றே
இந்திவரின் தடுத்தொழிக்கும் கேட யங்காண்;
நமதினத்தை விழிப்புறுத்தும் வெற்றிச் சங்கம்
நாளெல்லாம் அவனெழுதித் தந்த நூல்கள். 4

‘நக்கீரர் சிவஞான முனிவர் என்போர்
நாம்மகிழ ஒருருக்கொண் டிங்குத் தோன்றி
இக்காலை நற்றமிழை வளர்க்க வந்தார்,
இந்நாடு தனைமறந்து துயிலுங் காலை
எக்காளம் எடுத்தூதி விழிக்கச் செய்தார்
இவரென்று மண்முழங்கும் மரம்மு ழங்கும்
முக்காலும் ஈதுண்மை’ என்று [1]சான்றோர்
முழங்கினரேல் அவனெழுத்தின் பெருமை என்னே! 5

கல்லாதார் தமிழ்மொழியைக் கரைகண் டாற்போல்
கருதினராய் அயன்மொழிச்சொல் பலவுங் கூட்டி
இல்லாத வழுமொழியும் சிதைந்த சொல்லும்
எண்ணிறந்து குழப்பியதை எழுதிக் காட்டிப்

பொல்லாத செயல்புரிந்து தமிழின் தன்மை
புரியாத படிசெய்த இருட்டர் கூட்டம்
நில்லாது வெருண்டோட எழுந்து வந்த
நீள்கதிராம் மறைமலையைத் தொழுவோம் வாரீர். 6

---

**பாடற் குறிப்பு:–** 10.6.1969 ஆம் நாள் பாடியது

**அருஞ்சொற் பொருள்:–** 1. சான்றோர் – திரு.வி.க.

## 44 வாழிய தமிழ் முனிவர்

**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

தாயைத் தந்தையைத் தம்முடன் பிறந்தார்
தோயும் அன்பைத் துறந்தனர் எனினும்
முப்பா லூட்டிய முத்தமிழ் அன்பினில்
தப்பா தொழுகுந் தவமுனி யவர்தாம்;
வீட்டுப் பற்றும் வேறுள பற்றும்
[1]வீட்டுந் துறவறம் விழைந்தவர் எனினும்
நாட்டுப் பற்றினை நயந்திடுங் குறிக்கோள்
வேட்டுப் பணிசெயும் வியத்தகு தொண்டர்;
மனத்துப் பற்றினை விடுத்தனர் ஆகினும்
இனத்துப் பற்றோ டியங்கும் நடத்தையர்;
தம்மைத் தூற்றினும் தாம்பகை கொள்ளார்
எம்மவர் என்றே இனநலம் பேணுவர்;
கருத்து வேற்றுமை கருதில ராகிப்
பொறுத்துச் செல்லும் புன்னகை முகத்தினர்;
பன்னெறி யாளரும் பழகுதற் கேற்ற
நன்னெறி யாளர் நாநலம் மிக்கார்;
எளியோர்க் காணின் இரங்கும் நெஞ்சினர்
அளியால் பற்பல அறங்கள் புரிபவர்;
அருச்சனை ஒன்றே ஆண்டவன் அருளைப்
பெறத்தகு வழியெனல் பேணா ராகி,
உருக்குலைந் தொடுங்கிய உழைப்பினர் வாழத்
தெருத்தெரு வாகத் திரிவோர் உய்ய
வாழ்வின் துய்ப்பிலா வறியவர் நலம்பெறச்
சூழ்வதே ஆண்டவன் தொண்டெனத் தொடர்வார்;
திருமடம் ஒன்றே உறைவிடம் என்று
கருவறைப் புகுந்து காலங் கழியார்
ஊர்தொறும் ஊர்தொறும் ஓயா தோடிச்
சீர்பெறும் சிந்தனை செப்பிடும் பணியினர்;
சமயம் சார்தரு குறைகளைச் சாடிடச்
சமயம் வருங்காற் சற்றுந் தயங்கார்;
நற்றமிழ் பாடிய சொற்றமிழ்ச் சுந்தரன்
சொற்றிடும் பாடலிற் சொக்கிய சொக்கன்
தோழமை தந்தும் துணைபல புரிந்தும்
வாழும் வகைஎலாம் வழங்கினன் என்பர்;
அடிகளும் என்பால் அரும்பிய பாடலின்
அடிகளில் மயங்கினர் அன்புறு தோழமை
தந்தென துளத்தைக் கொண்டனர் தமிழ்முனி;
குன்றைச் சூழ்ந்துள **குன்றக் குடி**யில்
ஒன்றிய திருமடம் உறைதரும் **அடிகள்**
நன்றிவண் வாழ்கென நலமிகு நெஞ்சே
சென்றுரை அவர்பால் சேவடி பணிந்தே.

---

**பாடற் குறிப்பு:–** 14.9.1975 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. வீட்டும் – அழிக்கும்.

## 45. வாழிய மனித நேயம்

(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)

தொழத்தகு சுந்தரன் தோழமைக் குரியன்
பழுத்த பாவலன் பாரோர் போற்றும்
வலிய தொண்டன் வஞ்சமில் நெஞ்சம்
மெலிபிறை சூடிய மேன்மைக் கொடைஞன்
கண்ணுதற் பெருமான் கருத்தும் பிணைந்தது
பண்ணுறத் தோய்ந்த பைந்தமிழ் ஒன்றால்;
அதுபோல்,
**குன்றக்** **குடி**யிற் குடியமர்ந் ததுமுதல்
என்றன் செந்தமிழ்ப் பாட்டால் இணைந்தவர்
ஈடுபட் டென்னைக் *‘**கவியர**’ **சென்**றனர்,
பீடுடை **அடிகள்** பெயருக் கேற்றவர்
நாடுயர் வழிகள் நல்கிய பெருமகன்,
மண்ணிற் புழுவென மடியாது மாந்தர்
மண்ணில் நிமிர்ந்து வாழச் சொன்னவர்,
எளியோர்க் கிரங்கும் இளகிய நெஞ்சர்,
எளிமையும் வறுமையும் இருப்பதை நாடார்,
உழைப்போன் வயிற்றில் உறுபசி வந்து
வளைத்து வாட்டி வருவது தாளார்,
ஆலயம்பதி னாயிரம் எழுப் புவதின்
மேலாம் கல்விச் சாலை எழுப்புதல்
எனப்பறை சாற்றும் இயல்பினர், தொழில்கள்
வனப்புறக் கண்டவர் வளர்த்தும் வந்தவர்,
பண்டித நேருடன் பழகிய பண்பினர்,
பண்டைய கொள்கை பகுத்துணர் பெரியார்,
தொடர்பும் பொதுமையும் மலரும் தோட்டம்,
அடரும் பகைமை அண்டாக் கோட்டை,
ஏற்றத் தாழ்வுகள் இல்லாப் புதுமை,
சாற்றத் துடிக்கும் சமநிலைப் பாசறை,
.கலகமில் உலகம் காணத் துடிக்கும்
உலக அமைதிக் குழைக்கும் வெண்புறா
இனைய நலன்கள் விளையும் நோக்குடன்
புனையும் துறவு பூண்டவர், அடிகள்
மண்ணும் மனிதரும் என்னுந் தலைப்பில்
எண்ணி யெழுதினர் விகடன் இதழில்;
நம்கயல் தினகரன் நாடித் தொகுத்து
என்மனம் களிக்க ஈந்தனர் நூலென;
வாழ்க வாழ்க மனித நேயம்,
வாழ்க தமிழகம் வாழிய உலகே!

---

**பாடற் குறிப்பு:–** 2.2.1996 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–***1966–ஆம் ஆண்டு, பறம்பு மலையில் நடைபெற்ற ‘பாரி விழா’வில் ‘கவியரசு’ என்ற பட்டத்தைக் குன்றக்குடி அடிகளார் வழங்கிச் சிறப்பித்தார்.

## 46. பழமை வேண்டான்!

(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)

பாண்டியனை நினைப்பூட்டும் பார்வையாளன்
　　பாழான பழமை வேண்டான்!
மாண்டநல்ல சங்கத்தார் தமைப்போல்வான்
　　மனத்தில்எழும் புதுக்க ருத்தை
வேண்டியமட் டுங்கொடுப்பான்! வீரத்தை
　　ஊட்டிடுவான்; ஊழிக் காலம்
தாண்டியநல் தமிழ்மொழியால்! மீசையின்மேல்
　　தணியாத காதல் கொண்டான்! 1

இனிஅஞ்சார் தமிழ்மக்கள்; தமிழுக்கோர்
　　இடுக்கண்இனி வருதல் இல்லை!
கனிமொழியில், காதலைத்தான் பகுத்தறிவுக்

கதிரைத்தான் காட்டி விட்டார்!
நனிமகிழ்ந்து தமிழரெலாம் போற்றுகிறார்
நம்மினத்தார் விளங்கப் பாண்டி
இனிதளித்த பரிசிலவன் எதிர்ப்பஞ்சா
இயற்கவிஞன் ஏறு போல்வான்! 2

கடவுளரைப் பாடிமகிழ்ந்த ததன்பிறகு
காலத்தை எதிர்த்து நின்று,
மடமையினை மாய்த்திட்டான் **பாரதி**யின்
**தாசனெ**ன மதிப்பும் பெற்றான்!
திடமுடனே அவன்கருத்தைச் செப்புகிறான்;
தீந்தமிழின் உரிமை காக்க
உடல்கொடுப்பேன் என்கின்றான்! அவனளிக்கும்
ஓவியங்கள் வாழ்க நன்றே! 3

## 47. தொடர்வோம் தொண்டு

**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

மூவாத் தமிழுணர் **மு.வ.** தமக்குச்
சாவா**?** அச்சொலைச் சற்றும் நம்பிலோம்;
விடிந்தது பொழுது தொடர்ந்தது செய்தி;
படர்ந்தது துயரம்; நடந்தது கொடுமை!
சரியா மனத்தர் சரிந்தனர் எனுஞ்சொல்
சரியா**?** பிழைபிழை; சாவே பிழைபல
புரியா நின்றனை புரியா மதியால்;
பெரியார் அறிஞர் பெரும்புல வோர்கள்
எவரே யாகினும் எழும்நின் பசிக்குத்
தவறார் கொல்லோ தடுப்பே இலையோ**?** 10
ஆம்ஆம் இயற்கையின் ஆற்றலை அறிவோம்;
அறிவோம் ஆகினும் ஆற்றாத் துயரால்
சிறிதே மறந்தனம் சிந்தையும் மயங்கினம்
உயிர்தான் பிரிந்தது; உடல்தான் மறைந்தது;
செயலும் செயலால் செழித்தநற் றமிழும்
உண்டிவன் அன்றோ**?** ஒண்மையர் அவர்தம்
தொண்டினை இன்னே தொடருதும் யாமே. 17

## 48. புதுக்கோட்டைக் காந்தி

**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

கற்றுணர்ந்த மேலவனே, கற்ற வற்றைக்
கடைப்பிடித்து வாழ்பவனே, கவிஞர் தம்மை
முற்றுணர்ந்த புலவர்தமைச் சாவா வண்ணம்
முன்னின்று காத்தவனே, எங்கள் தந்தாய்,
உற்றவரும் மற்றவரும் அண்ணா என்றே
உரிமையுடன் அழைக்கின்ற **அண்ணால்**, எங்கள்
சுற்றமெலாம் வாழ்விக்க வந்த கோவே
**சுப்ரமண்யப்** பெயரோய்நீ வாழ்க நன்றே. 1

பிறப்பெடுத்த மாந்தரிலே பலரும் தம்மைப்
பேணுதற்கே வாழ்கின்றார்; சிலர்தாம் என்றும்
மறப்பதற்கு முடியாத வண்ணம் வாழ்வை
மற்றவர்க்கும் பயன்படுத்தி வாழ்ந்து நிற்பார்
சிறப்புடுத்த இவ்வாழ்வை நின்பாற் கண்டோம்;
சீரியனே பயன்கருதாத் தொண்டுக் கென்றே
சுரப்பெடுக்கும் அருளுளத்தால் வாழ்ந்து நிற்கும்
தோன்றல்நினக் கெவ்வாறு நன்றி சொல்வோம்**?** 2

மழைபொழிந்து பார்புரக்கும் முகில்த னக்கு
மாநிலத்தார் எவ்வாறு நன்றி சொல்வர்**?**

விழைவெழுந்து பாலூட்டும் தாய்க்கு நன்றி
விளம்பிடஓர் சொல்லுண்டோ? எளியேம் எம்மை
விழிதிறந்து வாழ்வுக்கு வழிதி றந்து
வீறுபெற உய்வித்தோய் நினக்கு நன்றி
மொழிவதற்கும் மொழிகாணேம்; எங்கள் நெஞ்சால்
முப்பொழுதும் தொழுவதன்றி வழியுங் காணேம். 3

பொறியியலில் வல்லவரை, வானில் நீரில்
போர்புரியும் படைஞர்தமை, அறிவு நல்கி
நெறியியக்கும் பல்வகைய ஆசான் மாரை,
நெஞ்சிரங்கும் மருத்துவரைப் புலவர்தம்மைப்
பெரியவனே எம்மிடையில் தோற்று வித்தாய்!
பிள்ளையென எம்மையெலாம் வளர்த்து வந்தாய்!
வறுமையிருட் படுகுழியில் கிடந்த எம்மை
வாழ்விக்க வரும்தலைவா! வணங்கு கின்றோம். 4

காந்திநகர் மக்களுக்கு வாழ்வு நல்கக்
கல்விவளர் கழகமென ஒன்று கண்டாய்;
ஈந்துபொருள், ஒளிநல்கி, நூல்கள் நல்கி,
எமக்கெனஓர் ஆசானும் நல்கி, என்றும்
போந்திங்கு மேற்பார்வை இடையீ டின்றிப்
புரிந்துவரும் ஆசிரியப் பெரியோய்! நாங்கள்
காந்தியென நின்னைத்தான் காணு கின்றோம்
கருணைமனம் வாழ்கவென வாழ்த்து கின்றோம். 5

---

**பாடற் குறிப்பு:–** அண்ணல் சுப்பிரமணியனார்க்குப் புதுக்கோட்டைக் காந்தி நகர் மக்கள் 17.10.1970 இல் நடத்திய பாராட்டு விழாவில் அம்மக்கள் பாடுவதாக அமைக்கப்பட்ட பாடல்.

## 49. மணிவிழா வாழ்த்து

**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

சுவைபழுத்த செந்தமிழின் சோலை புக்குச்
சோர்வின்றி ஆர்வமுடன் வாழ்நாள் எல்லாம்
நவைதவிர்த்த ஆய்வுரைகள் நல்கி வாழும்
நலம்பழுத்த தமிழ்பழுத்த நல்லோய்! இந்த
அவையகத்தில் புலம்பழுத்தோர் பலரும் வாழ்த்த
அவர்குழுவில் எனையுமுடன் கூட்டு வித்தார்
கவிதொடுத்து வாழ்த்துகின்றேன் அறுபான் ஆண்டு
கண்டோய்!நின் புகழ்வாழ்க வாழ்க என்றே. 1

பொருள்கருதிப் புகழ்கருதி எழுத்து வேந்தர்
புல்லியமென் காகிதத்தால் வண்ணப் பூக்கள்
இருள்பெருகப் படைத்துவரல் காணு கின்றோம்;
இவைவிரும்பும் சுரும்பினமாய் மாந்தர் மொய்த்து
மருள்பெருகிச் சுழலுகின்றார் அந்தோ! இந்நாள்
வண்டமிழின் நலங்கருதி நுண்பு லத்தால்
தெருளறிவு மணமலர்கள் நீப டைத்தாய்!
திறங்கண்டு மனங்கொண்டு வாழ்த்து கின்றேன் 2

ஒருதுறையில் எவரேனும் வெற்றி காணின்
ஊரிலுளார் அனைவருமே அதனைச் செய்வர்
பிறதுறையை நினைவுகொளார்; ஆனால் நீயோ
பிறர்புகுதாத் தனித்துறையை வகுத்துக் கொண்டு
வருதுறையில் வெற்றியுடன் தமிழ்வ ளர்த்தாய்!
வாகைகொளும் நினைவாழ்த்த வாய்ப்புப் பெற்றேன்
பெருமைமிகக் கொண்டுன்னை வாழ்த்து கின்றேன்
பெரியோய்நின் திறம்வாழ்க வாழ்க என்றே. 3

பழகுதற்கு மிகஇனிய பண்பு கொண்டாய்!
பலநூல்கள் யாத்திருக்கும் அறிவு சான்றும்

அழகுதரும் உயர்வுதரும் அடக்கம் கொண்டாய்!
ஆய்ந்துணரும் ஆற்றலினை எடுத்துக் காட்டும்
விழியுடையாய்! எவரிடத்தும் வெறுப்புக் கொள்ளாய்!
வேறுபடு கருத்துக்கும் மதிப்ப ளிப்பாய்!
எழிலுடையாய்! தமிழ்வாழ நின்னை வாழ்த்தி
ஏத்துகிறேன் நலமுடன்நீ வாழ்க என்றே 4

ஆன்றமைந்த பண்பினிக்கும்; வஞ்சம் இன்றி
அன்பளைந்து செப்புகின்ற சொல்லி னிக்கும்;
ஈன்றளித்த ஆய்வுரைசேர் நூல்கள் எல்லாம்
இனித்திருக்கும்; துணையின்றித் தனித்தி ருந்து
சான்றாண்மை பெற்றோய்!நின் உழைப்பி னிக்கும்;
சார்ந்துள்ள புகழினிக்கும்; செயலி னிக்கும்
தோன்றலுன்பால் அத்துணையும் இனிக்கக் கண்டோர்
**சீனிவேங் கடசாமி** என்றார் போலும்! 5

மலர்தோறும் மலர்தோறும் சென்று வண்டு
மணம்சுவைத்துத் தேன்சுவைத்துச் சேர்த்து வைக்கும்;
பலவாகும் சமயமெலாம் நீபு குந்து
பைந்தமிழை நுழைபுலத்தாற் சேர்த்து வைத்தாய்;
புலர்காலை எழுகதிரோன் உலகுக் கெல்லாம்
பொதுவெனல்போல் வெவ்வேறு சமய மாந்தர்
பலர்சேர்ந்து வாழ்த்துகின்றார்; சமய மில்லேன்
பாமாலை கொண்டுன்னை வாழ்த்து கின்றேன். 6

பல்வேறு சமயத்தார், சமயம் இல்லார்,
பன்மொழிகள் கற்றுணர்ந்தார், ஒன்று கற்றார்,
பல்வேறு கட்சியினர், கட்சி சாரார்,
பலபிளவுச் சாதியினர், சாதி வேண்டார்,
எல்லாரும் ஒன்றாகிப் போற்று கின்றார்;
இன்றமிழால் ஒன்றுபடும் காட்சி கண்டேன்;
நல்லோர்தாம் பன்மையினாற் சிதறுண் ணாமல்
நலமிக்க ஒருமையினால் தமிழைக் காப்பர். 7

குடியரசு நின்போலும் சான்றோர் தம்மைக்
கொண்டாடி விருதளிக்க மறந்த தேனும்
முடியரசன் நின்பெருமை பாடு கின்றேன்
மூவேந்தர் மரபறிந்து வாழ்த்து கின்றேன்;
[1]மடியின்றிச் சுறுசுறுப்பால் தமிழைத் தேடும்
மாண்பால்அஞ் சிறைத்தும்பி என்று நின்னைப்
[2]படிஅழைக்க விருதளித்தேன்; என்பாற் செல்வம்
பாடலொன்றே அதையளித்தேன் பரிசி லாக. 8

---

**பாடற் குறிப்பு:–** சென்னையில் நடைபெற்ற மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்களின் அறுபதாண்டு நிறைவு விழாவில் பாடியது–17.3.1961.

**அருஞ்சொற் பொருள்:–** 1. மடி – சோம்பல். 2. படி – பூமி.

## 50. வாழும் அண்ணாமலை
**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

ஈட்டுவதும் கூட்டுவதும் ஈட்டியதை
வகுப்பதுவும் இயல்பாற் செய்து
காட்டிய**அண் ணாமலை**மன் கருணையொடு
வாழ்ந்திருந்த கால மெல்லாம்
வேட்டெழுந்து தமிழ்மொழிக்கும் விளைபயனாம்
கல்விக்கும் வேண்டும் மட்டும்
நீட்டியதை நாடறியும் நிறைபுலவோர்
ஏடறியும் நெஞ்சும் சொல்லும் 1

நெருஞ்சிபடர் வேட்களத்தை நிலமாக்கி,

நகராக்கி, நிலைத்து நிற்க
அருங்கலைகள் பலகெழுமும் கழகமென
ஒருகோவில் ஆக்கி வைத்து
வரும்பொருளை அதுவளர வகுத்தளித்த
கையானை வைய மெல்லாம்
தரும்புகழாற் பொலிவானை தனியண்ணா
மலையானைத் தலைக்கொள் வோமே. 2

கலைமலிந்த தில்லையிலே கற்கோவில்
தமிழரசன் கண்டான் அன்று;
கலைபலவும் திகழ்கின்ற கலைக்கோவில்
ஒன்றின்று கண்டான் அண்ணா
மலையரசன்; அதுகண்டு கூத்தரசன்
மனங்களித்து மன்றில் நின்று
கலையறிய ஆடுகிறான் என்றகவி
மணிமொழியைக் கருத்தில் வைப்பாம். 3

நிலையாத உலகத்தில் நிலைத்தசெயல்
செய்தமையால் நெஞ்சந் தோறும்
சிலையாக நிற்கின்றான் சித்திரமாத்
தோன்றுகின்றான் செழுமை கொண்ட
மலையாக வாழ்கின்றான் கலையாக
வளர்கின்றான் மனத்துள் எண்ண
அலையாக அசைகின்றான் அரியணையா
நம்முளத்தை ஆக்கிக் கொண்டான். 4

அரங்கிருக்கும் கடமிருக்கும் அருகிலிசைக்
கருவியெலாம் அமைந்தி ருக்கும்
சுரமிருக்கும் தோற்கருவி துணையிருக்கும்
குழுவொன்று சூழ்ந்தி ருக்கும்
நரம்பிழுக்க மூச்சடக்கி நடுவிருந்து
பாடுபவர் நாவ சைத்தால்
கரகரத்த குரலிருக்கும் தமிழ்மட்டும்
அங்கிருக்கக் கண்ட தில்லை. 5

தமிழ்நாட்டில் தமிழ்த்தெருவில் தமிழரிடை
இசையரங்கில் தமிழை நீக்கித்
திமிர்காட்டும் மனமுடையர் தேர்ந்தெடுத்துப்
பிறமொழியைத் திணிக்குங் காலை
சுமைதாங்கிக் கல்லாகச் சூடில்லாச்
சிலையாகச் சோர்ந்து நின்றோம்
அமிழ்தூட்டும் தமிழெங்கே? எனஅதட்ட
அறியாத ஆமை யானோம். 6

அன்றுநமக் குணர்வூட்டி, ஆர்ப்பரிக்க
வழிகாட்டி, அறிவா னாய்ந்து
நின்றுநமை நெறிப்படுத்தி, நிலைத்திருந்த
வசைநீக்கி, நிமிர்ந்து நிற்கக்
குன்றெனவே நின்றானைக் [1]குய்யமதை
வென்றானைக் கூடிப் பாடி
இன்றுமிவண் வாழ்வானை என்றுமுள
தென்றமிழால் ஏத்தி நிற்போம். 7

---

**பாடற் குறிப்பு:—** அண்ணாமலைப் பல்கலைக் கழக வைரவிழா மலரில் வெளிவந்தது.

**அருஞ்சொற் பொருள்:—** 1 .குய்யம் — வஞ்சனை.

## 51. தமிழ்க் கடல்

(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)

பச்சைமா மலைமுகட்டில் ஆழ்வார் பெய்த

பாடல்நா லாயிரமும் செந்தேன் ஆறு;
மச்சவுரு மாலவனும் அயனும் அண்ணா
மலைவாழும் சிவமலையில் மூவர் பெய்த
மெச்சுமிசைத் தேவாரம் தீம்பா லாறு;
மேலவர்வாழ் குன்றத்தூர்ப் பெருமான் பெய்த
இச்சைமிகும் திருதொண்டர் பெருமை பேசும்
எழில்மிகுந்த வரலாறும் ஒருபே ராறு. 1

அவனடியைத் தொழுதுருகும் வாச கந்தான்
அழுதழுது பொழிந்துவைத்த கண்ணீர் ஆறாம்;
எவனடியால் உலகளந்தான் அவன்றன் காதை
இயம்பும்நூல் உயிராறாம்; பயில்வார் நெஞ்சைக்
கவருமுலா தூதுபிள்ளைத் தமிழோ டின்னும்
கலம்பகங்கள் சிற்றாறாம்; இவ்வா றெல்லாம்
தவறாது மனம்புகுந்து பொங்கி யோங்கும்
தமிழ்க்கடலே நம்**இராய சொக்க லிங்கம்.** 2

---

**பாடற் குறிப்பு:–** 16.9.1973 ஆம் நாள் பாடியது.

## 52. மாணிக்கப் புலவன்

**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

யாதும் அவாவிலன் யாமையென் றடங்கினோன்
போதும் எனுமனம் பூத்த நெஞ்சினன்
பயனில சொல்லாப் பாவலன் என்றும்
நயனுள பொழியும் நாவலன் என்பால்
ஈடிலா அன்பன் எளியன் இனியன்
கேடிலா மனத்தன் கிளர்ச்சித் தலைவன்
எங்கள் கழகப் புலவன் இவனெனப்
பொங்கும் உணர்வாற் பொலிந்த பெற்றியன்
பெருக்கிய புகழ்நிலை பேணிவந் துறினும்
செருக்கே அறியாச் சீர்மை யாளன்
அருமை அருமைஎன் றான்றோர் போற்றும்
பெருமிதங் குன்றாப் பேரறி வாளன்
தொல்காப் பியத்தைத் துருவித் துருவிப்
பல்கால் ஓதிப் பாங்குற மொழிந்தவன்
உள்ளந் தெளிவுற உலகம் மகிழ்வுற
வள்ளுவந் தந்த மாமணி நாளும்
சிந்தனைப் புதுமையைச் செவ்விதிற் காட்டும்
செந்தமிழ் நடையிற் சீரியன் கூரியன்
ஆள்வோ ராகினும் அவர்க்கும் அறிவுரை
கேள்போல் நின்று கிளத்தும் துணிவன்
ஆசாற் றொழுதெழும் அரும்பெறல் மாணவன்
பேசான் பழிமொழி ஏசான் பிறரை
நண்பன் பண்பன் நயத்தகு தமிழைக்
கண்ணென் உயிரெனக் கருதும் இயல்பினன்
கல்வியைத் தமிழிற் கற்கத் தடையெனில்
அல்வினை யதுதான் அழிகவென் றெழுந்து
வல்வில் லம்பெனச் சொல்லமர் தொடுத்தவன்
அமர்க்களம் சென்றவன் ஆங்கே மாண்டனன்
எமக்கெலாம் துயரே தந்தனன் ஐயஓ !
யாவன் அவனென வினவின் தீவினை
செய்யாச் செம்மல் செந்தமிழ்ப் பெம்மான்
பொய்யா **மாணிக்கப் புலவன்** அவனே.

---

**பாடற் குறிப்பு:–** முனைவர் வ.சு.ப. மாணிக்கனார் மறைவு குறித்துப் பாடியது 20.5.1989.

## 53. குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா

(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)

வஞ்சனை அறிய மாட்டான்
    வாய்மையில் நழுவ மாட்டான்
பஞ்சினும் மென்மை நெஞ்சன்
    பழகிட இனிய நண்பன்
அஞ்சிடும் தீமை காணின்
    அவ்விடம் விலகி நிற்பான்
பிஞ்சிளங் குழந்தை காணின்
    பேணுவான் தெய்வ மென்றே 1

ஆர்ப்பரிப் பொன்று மில்லான்
    அடக்கமே என்றுங் கொள்வான்
சேர்த்திடும் நண்ப ரெல்லாம்
    சிறுவர்தம் வாழ்வில் அன்பு
வார்த்திட வழிகள் சொல்லி
    வளர்த்திடும் நாட்டங் கொண்டான்
கூர்ததநல் மதியில் நெஞ்சில்
    குழந்தைகள் நினைவே கொள்வான். 2

சென்றிடும் இடத்தில் எல்லாம்
    சிறுவர்க்குச் சங்கம் காண்பான்;
நன்றறி சிறுவர் சூழ
    நடுவினில் அமர்ந்து பேசி
மன்றினில் மகிழ்தல் ஒன்றே
    வாழ்க்கையின் பயனாக் கொண்டான்
வென்றிகள் பலவும் பெற்றான்
    விழையுமென் நட்பும் பெற்றான். 3

மழலையர் தெரிந்து கொண்டு
    மனத்தினிற் பதித்துப் பாடிப்
பழகிடப் பாடல் தந்தான்;
    பச்சிளங் குழந்தை நெஞ்சில்
அழகிய பாட்டு ணர்ச்சி
    அரும்பிட வேண்டும் என்ற
விழைவுடன் ஈடு பட்டான்
    வியத்தகு குறிக்கோள் கொண்டான். 4

குழந்தைகள் பாடல் பாடக்
    குழந்தையின் உள்ளம் வேண்டும்
பழந்தமிழ் உணர்வு வேண்டும்;
    பண்புறும் நெஞ்சும் வேண்டும்;
வழங்கிடும் பண்பு வேண்டும்
    வாய்மையோ டெளிமை வேண்டும்
மொழிந்திடும் அனைத்துங் கொண்டான்
    முனைப்பிலா **வள்ளி யப்பன்.** 5

---

**பாடற் குறிப்பு:—** 21.3.1981 ஆம் நாள் பாடியது.

## 54. பதிப்புச் செம்மல்

(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)

கற்கும் நாள்முதல் கனிவும் பணிவும்
பற்பல பண்பும் பதிந்த நெஞ்சினன்

மேலோர் தொடர்பு மேலெனக் கொண்டவன்
நூலோர் போற்றும் நுண்மதி பூண்டவன்

பல்கலைக் கழகத்தில் பயிலுங் காலை
நல்லவர் பலரொடு நட்புப் பூண்டோன்

அரும்பெறல் நூல்கள் அழகுறப் பதித்துப்
பெருந்திறல் காட்டிப் பெயர்சொல உழைத்தோன்

பதிப்புச் செம்மல் என்று பலரும்
மதித்துப் போற்றும் மாண்பமை நண்பன் 10

எழுத்தும் பேச்சும் இனிக்க, செயல்கள்
வழுத்தும் படியா வாய்க்கும் இயல்பன்

மெய்யப்பன் என்னும் மேலோன்
வையை மணலினும் வாழினும் இனிதே 14

---

**பாடற் குறிப்பு:–** 26.7.1998 ஆம் நாள் பாடியது.

## 55. உடன் பிறவாத் தமக்கை

**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

தனித்துப் பிறந்து தவிக்கும் என்னை
இனித்த மொழியால் இனிய முகத்தால்
உள்ளுறும் அன்பால் உடன்பிறப் பாக்கி
அள்ளி யுதவி அரவணைத் தளிக்கும்
***பார்வதி தேவி**யைப் பணியும் புகழும்
ஓர்தமிழ் உணர்ந்தஎன் உயர்சிறு நாவே.

---

**பாடற் குறிப்பு:–** *1927–இல் காந்தியாரைத் தம் இல்லத்தில் தங்க வைத்துத் தமிழகத் தென் மாவட்டங்களில் பேராயக் (காங்கிரசு) கட்சிப் பொதுக்கூட்டங்கள் நடத்தியவரும், நேதாசி சுபாசு சந்திர போசுடன் பழகி, அவரின் விடுதலைப் போராட்டத்திற்குத் தம் பெரும் பொருளைக் கொடுத்தவரும், பின்னாளில் தந்தை பெரியாரின் பேரன்பைப் பெற்றுச் சுயமரியாதை இயக்கத்தின் சென்னை மாநிலப் பொருளாளராக இருந்து சமுதாயச் சீர்திருத்தத்திற்குப் பெரும் தொண்டாற்றியவரும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., கவிமணி தேசிய விநாயகம், பாரதியார், பாரதிதாசன், கவியரசு முடியரசனார், பொது உடைமை இயக்கத் தலைவர் ப.சீவானந்தம் மற்றும் பல தலைவர்களைப் போற்றிப் புரந்த வள்ளலுமான சீர்திருத்தச் செம்மல் கானாடுகாத்தான் வை.சு.சண்முகனாரின் திருமகள் திருமதி ந. பார்வதி தேவியைப் பாடியது.

## 56. நட்பிற் பெரியன்

**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

தைக்கின்ற ஊசிதனில் கூர்மை யுண்டு
  **தமிழண்ணல்** நுழைபுலத்தும் அதனைக் கண்டேன்;
மொய்க்கின்ற அலைகடலில் ஆழம் உண்டு
  முன்னவன்றன் கல்வியிலும் அதனைக் கண்டேன்;
மெய்க்கின்ற முகில்வானில் அகலம் உண்டு
  மேலவன்றன் புலமையிலும் அதனைக் கண்டேன்;
மைக்குன்ற வரைத்தேனில் இனிமை யுண்டு
  மனத்துவளர் நட்பினிலும் அதனைக் கண்டேன். 1

உடனுறையுங் காலத்தே எனது நெஞ்சில்
  ஊறிவரும் பாடலுக்குச் செவிலி யானான்;
இடனறவே மனக்கவலை கவ்வும் வேளை
  இனியசொலித் தேற்றுகின்ற துணைவன் ஆனான்;
கடனறியும் உளப்பாங்கால் உண்மை யன்பு
  காட்டுகிற மனப்போக்கால் இளவல் ஆனான்;
அடவிரைவில் பேராசான் ஆகி என்னை
  அப்படியே விட்டுவிட்டு மதுரை போனான் 2

அவன்நெஞ்சை நானறிவேன் எனது நெஞ்சை
  அவனறிவான்; ஒருவருக்குள் ஒருவ ராகி
இவரிரட்டைப் புலவரென உரைக்கும் வண்ணம்

எஞ்ஞான்றும் எவ்விடத்தும் உலவி வந்தோம்;
அவன்தொழிலால் மதுரைக்குப் பிரிந்து சென்றான்
ஆயினும்எம் உள்ளங்கள் பிரிய வில்லை
அவனுறவை இரட்டித்த முப்பத் தாண்டின்
அகவையிலும் நினைந்துநினைந் திளைஞன் ஆனேன். 3

முதற்படியில் நின்றிருந்தான் அன்றி ருந்தே
முகம்மலர அகம்மலரப் பழகி வந்தான்;
முதற்படியில் நின்றபடி முயற்சி தன்னால்
முன்னேற்றப் படியேறி உயர்ந்து வந்தான்;
இதற்கிடையில் பலபடிகள் கடந்தும், முன்னர்
இருந்தபடி யிருக்கின்றான் நட்பில் இன்றும்;
[1]மதர்ப்படியில் உருப்படியும் செருக்கு மட்டும்
மனத்தடியில் சாகுபடி யாக வில்லை. 4

மனத்துக்குள் செருக்கில்லான் எனினும் சான்றோர்
மதிக்கின்ற பெருமிதத்திற் குன்ற மாட்டான்
முனைப்புற்ற எவரிடத்தும் பணிய மாட்டான்
முன்னேற்றம் தடைப்படினும் வளைய மாட்டான்;
எனக்குற்ற இளவலென விளங்கி நிற்பான்;
எனினுமவன் அடிப்பொடியன் நட்பில் மட்டும்;
புனத்துக்குள் உலவிவரும் கவரி மான்போல்
பூமனத்தன் வாழ்கின்றான் வாழ்க நன்றே. 5

உருவத்தாற் சிறியவன்றான் எனினும் நல்ல
உள்ளத்தால் உயர்மதியால் பெரியன் ஆவன்;
பருவத்தால் முதிர்ந்துவரும் புலமை கொண்டான்
பாதியிலே உதிர்ந்துவிழும் வெம்பல் இல்லை;
உருவத்தில் மெலியவன்றான் எனினும் கல்வி
ஊற்றத்தால் புலமையினால் வலிமை மிக்கான்;
எருவைத்தாற் பயிர்வளரும்; புலமை வைத்தான்
இவனிடத்தே தமிழ்வளரும் செழித்து நன்றே: 6

---

**பாடற் குறிப்பு:–** 30.1.1980 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–**
1. மதர்ப்படியில் உருப்படியும் – மதர்ப்பின் அடியில் உருவாகும்.

## 57. பொற்கிழி பெற்றவன்

**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

(''மானின் நேர்வழி மாதராய்வழு / திக்கு மாபெரும் தேவி கேள்'' என்ற திருஞான சம்பந்தரின் தேவாரப் பண்ணில் பாடவும்)

சேரன் நல்லிளங் கோவின் நூலினைச்
சிந்தை மேவிய ஆசையால்
ஒரும் நுண்புலம் கொண்டு தேர்ந்ததை
ஓதி உண்மகிழ் வுற்றவன்
யாரு மேமனம் சேரும் நட்பினை
ஆக்கும் புன்னகை கொள்முகன்
ஊரும் வாழ்த்திட நாடும் ஏத்திட
ஓங்கு பாமொழி வாயினன். 1

சோலை நாண்மலர்த் தூய தேனினைச்
சூழும் யாழிசைத் தும்பிபோல்
காலை யானதும் ஓய்வி லாதெழு
கடமை யாற்றிடும் வாழ்வினன்
ஆல வாயெனும் மதுரை மாநகர்
ஆல யத்தவர் சாற்றிய
சால வல்லவர் பாடும் போட்டியில்
சார்ந்து பொற்கிழி பெற்றவன் 2

நாம நீர்க்கடல் நாடு லாவியே
நாடி நல்லன கண்டவை
நாமும் கற்றிட ஆசை யுற்றவன்
நல்ல நூல்களைத் தந்தவன்
பூமி யாள்பவர் தேரும் நூலினால்
பொன்கள் ஆயிரம் பெற்றவன்
சோம சுந்தர நாமம் மேவிய
தோழ னாமவன் வாழ்கவே. 3

---

**பாடற் குறிப்பு:—** கவிஞர் அரு.சோ., காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியில் மூன்று நாள் ஆற்றில் ‘சிலப்பதிகாரம் ஒரு புதிய பார்வை’ தொடர் சொற்பொழிவினைக் கேட்டு 10.8.1981 அன்று வழங்கிய வாழ்த்து.

## 58. வணிக நோக்கறியான்

**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

பயிலும்நாள் தொடங்கி என்பாற்
பழகிடும் நண்பன்; அன்பு
செயலிலே குறைவு காணேன்;
அன்றுபோற் செழுமை கண்டேன்,
மயலுறும் செருக்கே யில்லா
மதிமிகு புலமை கண்டேன்;
அயலென எண்ணா தென்னை
அவனுடன் பிறப்பென் றெண்ணும். 1

உளத்திலே ஒன்றை வைத்தும்
உதட்டில்மற் றொன்றை வைத்தும்
கிளத்துதல் அறியா வாயன்;
கெடுதலை நினையா நெஞ்சன்
களைப்புறும் பொழுதில் மற்றோர்
கனிவுடன் செய்த நன்றி
உளத்தினிற் பதிய வைத்தே
உணர்ந்துணர்ந் துருகும் மேலோன். 2

பிணிபல சூழ்ந்த போதும்
பிறக்கிடல் அவனுக் கில்லை
துணிவுடன் எதிர்த்து நின்றே
துயர்களை மறந்து நிற்பான்
பணிவுடன் இன்சொற் பேசிப்
பழகிடும் பழநி வேலன்
அணிமிகும் தூய நெஞ்சில்
அன்புடன் பண்புங் கொண்டான். 3

கற்றவை நினைவிற் கொண்டான்
காட்டிய நெறியிற் செல்வான்
உற்றதை மறைத்தல் செய்யான்
உதவியே உவகை கொள்வான்
பெற்றதே போதும் என்பான்
பெருகிய ஆசை இல்லான்
நற்றவ முனிவன் போல
நாளெல்லாம் தனிமை கொண்டான். 4

பணிபுரி நாளில் வந்து
பழநிவே லவனை நாடி
அணுகிநல் லுதவி பெற்றோர்
அளவிலர்; பழகும் நட்பில்
வணிகநோக் கறியா தென்றும்
வாழ்க்கையின் பயனாக் கொண்டான்
அணிதிகழ் ஒழுக்கத் தானை
அன்புடன் வாழ்த்து கின்றேன். 5

---

**பாடற் குறிப்பு:—** உடன்பயின்ற நண்பர் மு.பழநிவேல் அவர்களைப் பற்றிப் பாடியது.

## 59. *கலைத்திறன் காட்டும் கணபதி

**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

கலைத்தொழில் தேர்ந்த நண்பன்
  **கணபதி** என்னும் பேரான்
மலைத்திடும் வண்ணம் கண்டான்
  வள்ளுவர் கோட்டம் ஒன்று
நிலைத்திடும் பேரும் பெற்றான்
  நெஞ்சினில் வஞ்சம் இல்லான்
கலைத்திறன் வாழ்க என்பேன்
  கனிதமிழ் நிறைந்த நெஞ்சால்

வைத்திய நாதச் சிற்பி
  மாதவம் செய்தான் என்று
மொய்த்துல குரைக்கும் வண்ணம்
  மொய்ம்புற முனைந்த மைந்தன்
வைத்துள உளியால் இந்த
  வையமே வியந்து போற்றக்
கைத்திறன் காட்டி நின்றான்
  கல்லையும் கனிய வைத்தே 2

கயல்விழிக் கண்ண கிக்குக்
  களங்கமில் அன்னம் வைத்து
மயல்விழி மாத விக்கு
  மாமயில் ஒன்று வைத்து
வியனுல கேத்தும் வண்ணம்
  வியப்புறும் சிற்பம் செய்தான்
பயன்கொள நினையா நெஞ்சன்
  படைத்தனன் புகாரில் அன்றே. 3

---

**பாடற் குறிப்பு:—***சென்னை வள்ளுவர் கோட்டம், கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை, பூம்புகார் சிற்பக்கலைக்கூடம், காரைக்குடி தமிழ்த்தாய் கோயில், ஆகியன யாத்த பெருஞ்சிற்பி கணபதியைப் பாடியது. இவர், கவிஞருடன் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிவரும் நண்பரும் ஆவார்.

## 60. பழனி தந்த பாட்டு

**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

பாட்டென்ற பேரால் பழுதுபட்ட சொற்றொடரைக்
கேட்டென்றன் நெஞ்சங் கிறுகிறுத்தேன் —வேட்டெழுந்து
நாடகமாம் நன்மருந்தை நண்பன் பழநியெனும்
பாடல்வலான் தந்தான் படைத்து. 1

தேன்கலந்து தந்தனனோ தெள்ளமுதந் தந்தனனோ
நான்கலந்தே இன்புற்றேன் நாடோறும்— வான்பறந்தேன்
வாட்டுந் துயர்துறந்தேன் வையந் தனைமறந்தேன்
பாட்டை அவன்படிக்கக் கேட்டு. 2

கூற்றமிலா வாழ்வு கொடுத்த தமிழ்த்தாயே
ஏற்றவரம் இம்மகற்கும் ஈந்தருள்வாய் —சாற்றுக்
கனிச்சுவையை விஞ்சுங் கவிமாலை நின்றன்
அனிச்சுவடிக் கீந்தான் அவன். 3

---

**பாடற் குறிப்பு:—** ‘அனிச்சஅடி’ நாடகக் காப்பியத்தைப் படிக்கக் கேட்டுக் கனவிற் பாடியது.

## 61. பாளைநகர்ப் பண்பாளன்
**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

சொல்லப் பழகியவன் சொல்லரிய நண்புளத்தால்
வெல்லப் பழகியவன் வீரனவன் – நல்லனவன்
என்னுளத்தைத் தொட்டுணர்ந்தே ஏற்ற துணைபுரியும்
பொன்னுளத்தன் [1]ஓர்வயிற்றோன் போல். 1

உண்ணென் றுரைத்துரைத்தே ஊட்டி எனதுளத்தைத்
தண்ணென் றியற்றுந் தகவுடையன் – பண்ணொன்றும்
பாட்டெனவே என்பாற் பழகும் இயல்புடையன்
கூட்டுணர்வால் விஞ்சுமனங் கொண்டு. 2

வந்தோர் குறையகல வாழப் பரிந்துரைகள்
தந்து புகலளித்துத் தாங்குமிடம் – வந்தஎனைக்
கேளாக எண்ணிக் கிளர்ந்தெழுந்த அன்புமணி
வேளாளன் வாழ்கின்ற வீடு. 3

கொஞ்சும் மொழியுடையன் கூடாரும் வந்திவன்பால்
தஞ்சம் எனஒருசொல் தந்துவிடின் – நெஞ்சுருகி
அஞ்சல் நிலையத் தலுவல் புரிவதனால்
[2]அஞ்சலெனச் சொல்வான் அவன். 4

கதிரடித்த நெல்லைக் களங்குவிக்கும் நெல்லைப்
பதியடுத்த பாளைநகர்ப் பண்பன் – மதிபடைத்த
வள்ளுவனார் சொற்றபடி வாழ்க்கைத் துணைநலந்தான்
கொள்ளுவதால் கொண்டான் குணம். 5

சீற்றத்தைக் கண்டதிலை சிங்கத்தைப் போல்வாழும்
ஏற்றத்தைக் கண்டேன் இனியவன்பால் – போற்றியதை
ஏட்டில் மகிழ்ந்தே எழுதிவைத்தேன் மாற்றுயர்ந்த
பாட்டுள் மணியைப் பதித்து. 6

பாளை விரிந்து பயனளிக்குந் தண்பதியாம்
பாளை, மணியால் பயன்கொடுக்கும் – வாளையொடு
நீர்பாயும் தண்பொருநை நீள்கரையில் வாழ்மணியன்
பேர்வாழ்க வாழ்கநலம் பெற்று. 7

---

**பாடற் குறிப்பு:—** பாளையங்கோட்டை நண்பர் சி.சு.மணி பி.ஏ.அவர்களை வாழ்த்திப் பாடியது—27.11.1974

**அருஞ்சொற் பொருள்:—**
1. ஓர் வயிற்றோன்—சகோதரன். 2. அஞ்சல்—அஞ்சாதீர்.

## 62. உயர்ந்தவன்
**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

உற்றஎன் தோழன் என்கோ
 உடன்பிறப் பாளன் என்கோ
பெற்றஎன் மகனே என்கோ
 பேணிநன் னூல்கள் என்பாற்
கற்றவன் நீயே என்கோ
 கண்ணினும் சிறந்தாய் எல்லாச்
சுற்றமும் ஆனாய் என்கோ
 தூயனே **சக்தி வேலே** 1

அன்புடன் பண்பு கல்வி
 ஆர்க்குமே பணியும் கொள்கை
முன்பெழுந் துதவும் உள்ளம்
 முனிவிலா தினிய பேசும்
பொன்மனம் அடக்க மெல்லாம்

பூண்டுளாய் என்ப தாலே
என்மனம் நினக்கே யாக்கி
இருக்கின்றேன் இனிய நண்பா 2

மனையென நினக்கு வாய்த்த
மங்கைநல் லாளும் நீயும்
இனியநன் மக்கள் தாமும்
என்விழிக் கறுவை செய்த
மனைதனில் உடனி ருந்து
மனமுவந் துதவி செய்த
தனிமனம் யார்க்கு வாய்க்கும்?
தமிழொடு வாழ்த்து கின்றேன். 3

தழைத்திடும் இடுக்கண் யாவும்
[1]தளைத்தன நின்னைச் சுற்றி
உழைத்தனை அவற்றைத் தள்ளி
உயர்ந்தனை; உயரும் போது
களைத்துறும் உறவுக் கெல்லாம்
கைகொடுத் துதவி செய்தாய்
செழித்தனை மேலும் மேலும்
செழித்துநீ வாழ்க தம்பி 4

முனைவர்நீ ஆன செய்தி
முதலில்யான் கேட்ட காலை
எனதுளம் மகிழ்ந்த பாங்கை
எவ்வணம் எடுத்து ரைப்பேன்
கனியொடு பாலுந் தேனும்
கலந்திடும் சுவையைக் கண்டேன்
மனையொடு மக்கள் சுற்றம்
வளமெலாம் பெற்று வாழ்க 5

உளத்தினால் உயர்ந்தாய், பெற்ற
உடலினால் உயர்ந்தாய், கற்ற
வளத்தினால் உயர்ந்தாய், செய்யுள்
நாடக வளங்கள் ஆயக்
களத்தினில் புகுந்து வென்றாய்,
கற்றவர் முனைவர் என்ன
அழைத்திட உயர்ந்தாய், செய்கை
அனைத்திலும் உயர்ந்தாய் வாழி 6

---

**பாடற் குறிப்பு:–** பேராசிரியர் ந.சத்திவேல், ‘முனைவர்’ பட்டம் பெற்றமைக்கு மகிழ்ந்தளித்த வாழ்த்து.

**அருஞ்சொற் பொருள்:–** 1. தளைத்தன – பிணித்தன.

## 63. அன்பு தரும் அழகன்
**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

நடையழகன் உடலழகன் நண்ணாரைச்
சொற்போரில் நடுங்க வைக்கும்
விடையழகன் விழியழகன் விழைவுகொளும்
பண்பழகன் வெண்மை பூண்ட
உடையழகன் உருவழகன் உளத்தெழுந்த
**அன்பழகன்** அறுபா னாண்டின்
மடைதிறந்து வருகின்றான் மனத்துணர்வு
பொங்கிவர வாழ்த்து கின்றேன் 1

ஆணழகன் இவனுக்கா ஆண்டறுப
தாயிற்று? நேரில் நின்று
காணுபவர் நம்புவரோ? கதையென்றே
கூறிடுவர்; கவர்ச்சி கொண்டு
பூணுமெழில் பூத்துவரப் பொலிகின்றான்

மணமகன்போல; போற்றிக் காக்கும்
மாணுடையான் கொண்டஎழில் மாறாமல்
வாழ்கவென வாழ்த்து வோம்நாம். 2

திருந்துமெழில் எவ்வண்ணம் சேர்த்தனனோ?
நமக்கொன்றும் தெரிய வில்லை
அருந்தியநன் மருந்தெதுவோ? அவனொருகால்
நலத்துறையின் அமைச்ச ராகி
இருந்தமையால் வந்ததுவோ? இனியதமிழ்
தந்ததுவோ? என்றும் நெஞ்சில்
பொருந்திவரும் தூய்மையினால் பூத்ததுவோ?
புரிந்துகொள முடிய வில்லை 3

இனியனிவன் மணநாளை என்தந்தை
பாவேந்தர் எழுதி வைத்தார்
கனிவுடையன் மணிநாளை அவர்மகனாம்
கவியரசன் பாடு கின்றேன்
எனிலஃதோர் பேறன்றோ! தலைமுறைகள்
இரண்டாலும் ஏத்தப் பெற்ற
தனியுரிமை கொள்கின்றான் தந்தைமகன்
தருகவிக்குப் பொருளாய் நின்றான். 4

பகுத்தறிவுக் கோட்டைக்குள் பயின்றுவரும்
வீரனவன், பழமை என்று
வகுத்தமைத்த ஆரியத்து வஞ்சனைகள்
அத்தனையும் மாய்ந்து போகச்
செகுத்தழித்த பெரியாரைச் சிங்கமெனும்
ஐயாவை எந்த நாளும்
அகத்தமைத்து வாழுமகன் அஞ்சாத
அன்பழகன் அவன்பேர் வாழ்க! 5

மண்ணாளும் ஆசையினால் மாற்றார்பின்
செலவிழையான் மடமை மிஞ்சிப்
புண்ணான தமிழினத்தைப் போற்றுவதே
தொழிலானான்; புதுமை கண்ட
தண்ணான தமிழ்மானம் தன்மானம்
தழைத்துவரக் காஞ்சி தந்த
அண்ணாவின் வழிநடப்பான் அருளுடையான்
அன்பழகன் அவன்பேர் வாழ்க! 6

நிலைபொறுக்க முடியாமல் நெருக்கடிகள்
வந்தாலும் நெஞ்சில் நிற்கும்
தலைவருக்குத் துணைநின்று தாங்குதல்தான்
தார்மறவன் கடமை யாகும்;
நிலைபொறுக்க இயலாதார் நேரார்பால்
ஏகிடினும் நிலைத்து நின்று
கலைஞருக்குத் தோள்தந்தான் கழகத்தைக்
காக்கின்ற கடமை கொண்டான். 7

கழகத்திற் புயலொன்று கடிதாக
வீசுங்கால் கனியைத் தேடிப்
பழமரத்து வௌவால்கள் பறந்தோடிப்
போனாலும் பற்றி நிற்க
விழுதுவிடும் ஆல்போல விலகாமல்
அசையாமல் நிலைத்தி ருந்த
அழகனவன் அன்பனவன் அவன்பேர்தான்
அன்பழகன் என்றும் வாழ்க! 8

கலைக்கழகம் பயின்றுவரும் காலத்தே
இணைந்திருவர் கழகம் சேர்ந்தார்
நிலைக்கின்ற பணிசெய்தார் நெடும்புகழும்

பலபெற்றார் ஆனால் தீயோர்
கலைக்கின்ற கூட்டத்தில் காணாமல்
ஒருமனிதர் கரந்து விட்டார்
மலைப்பின்றி அன்பழகன் மதியமைச்சாய்க்
கழகத்தில் வாழு கின்றான். 9

இதழ்விரித்த தாமரையில் இனியநறுந்
தேனூறும்; இவன்றன் வாயின்
இதழ்விரித்து நாவசைத்தால் இனியதமிழ்
தானூறும்; மக்கள் கூட்டம்
அதன்சுவையை நனிமாந்த அஞ்சிறைய
தும்பிகளாய் அணுகி வந்து
மதுவருந்தி, மனமகிழ்ந்து வாழ்த்திசையைப்
பாடிடுவர் தமது வாயால் 10

பல்கலையின் கழகத்தில் பயில்கின்ற
நாள்முதலே சொற்போர் செய்து
வெல்கலையில் வல்லனவன் பேசுங்கால்
வெட்டொன்று துண்டி ரண்டாச்
சொல்கலையில் சூரனவன் சொன்னதையே
சொல்லாமல் மேலும் மேலும்
பல்வகையிற் சிந்தித்துப் படைத்திடுவான்
நல்லமுது பருகும் வண்ணம் 11

வேர்த்தெழுந்தோர் அரங்கேறி வினாவிடுத்தால்
வினவியவர் வெட்கும் வண்ணம்
ஆர்த்தெழுந்து விடையிறுப்பான் அவன்தொடுக்கும்
மறுப்புரையில் அடுக்கும் சொற்கள்
கூர்த்தெழுந்த அம்பாகும் கூடாரைப்
புறங்காணச் செய்வ தற்குச்
சீர்த்தெழுந்த வேலாகும் சிந்தனைக்கு
விருந்தாகும் தேனும் ஆகும். 12

மிகத்துணிந்த பசும்பொன்னார் மேலொருநாள்
நமைத்தாக்க மேடை ஏறி
அகத்தெழுந்த பக்தியினால் ஆண்டவன்பால்
ஆசையினால் ஆர்த்தெ ழுந்து
பகுத்தறிவால் ஒருமுட்டை படைத்திடவும்
ஆமொஎன் றுருத்துக் கேட்க
நகைச்சுவையில் நம்மழகன் நறுக்கென்று
விடைதந்தான் நாணும் வண்ணம் 13

பத்தியுளார் முட்டையிட்ட பாடத்தைப்
படித்ததிலை பாரில் கோழி
கத்திவந்து முட்டையிடும் கண்டுள்ளோம்
கனன்றுரைத்த பசும்பொன் னார்தாம்
பத்தியினால் முட்டையொன்று படைப்பாரா?
படைக்கட்டும் பார்ப்போம் என்ற
அத்துணிவைக் கண்டவையோர் அடடாவோ
அடடாவென் றார்த்து நின்றார். 14

விளக்கெண்ணெய்ப் பேச்சறியான் விறுவிறுப்பும்
சுறுசுறுப்பும் விரைந்து நெஞ்சில்
கொளப்பண்ணும் பேச்சாளன் கொள்கைகளைத்
தெளிவாக கோத்தெ டுத்து
விளக்குவதில், இலக்கியத்து விரிவுரையில்,
நகைச்சுவைகள் விளைக்கும் பேச்சில்,
துளைக்கின்ற மறுப்புரையில் தோலாத
நாவுடைய தோழன் ஆவன். 15

அரங்கேறி முழங்குங்கால் அஞ்சாத
ஐயாவின் துணிவி ருக்கும்
அரங்கேறி மொழியுங்கால் அருளுடைய

அண்ணாவின் கனிவி ருக்கும்
அரங்கேறி இதழசைத்தால் அழகுநடை
ஆரூரார் நயமி ருக்கும்
அரங்கேறி நின்றாலே அரங்கிற்கே
அழகுதரும் அழகன் வாழ்க! 16

தில்லிநகர் ஆளுநர்கோ தென்னாட்டில்
உலாவரவோர் திட்ட மிட்டார்
குல்லுகரின் வருகைக்கு நம்வெறுப்பைக்
காட்டுதற்குக் கூடிப் பேசி
நல்லதொரு முடிவெடுக்க நம்பெரியார்
நம்மவர்க்கோர் அழைப்பு விட்டார்
ஒல்லையிலே தலைநகர்க்குப் பொதுக்குழுவின்
உறுப்பினர்கள் ஓடி வந்தார். 17

அன்றங்குப் பொதுக்குழுவில் ஐயாவை
அண்ணாவை மற்றும் அங்குச்
சென்றிருந்த அனைவரையும் ஆளவந்தார்
சிறைசெய்தார் அதனைக் கண்டு
தென்றலெனும் திரு.வி.க தலைமையிலே
திரண்டெழுந்தோம் அழகன் அன்று
நின்றிருந்த சிங்கமென நின்றதைநாம்
நினைத்தாலே புல்ல ரிக்கும். 18

அன்பழகன் இல்லத்தில் அடிக்கடிநான்
அண்ணாவைக் கண்ட காட்சி
அன்பொழுகும் மணிமொழியார் அலுவலகத்
தவனுடன்நான் அளாவும் காட்சி
இன்புபெற அந்நாளில் இளந்தாடி
முகத்தானோ டினிதி ருந்து
முன்பழகும் காட்சியெலாம் முன்வந்து
கண்ணெதிரில் முகிழ்த்தல் கண்டேன். 19

அவன்மனைக்கு நான்செல்வேன் அனைவரையும்
அருகழைப்பான் அவர்க்குக் காட்டி
இவன்நமது **முடியரசன்** என்றென்னை
இனிதுரைப்பான் அந்த அன்பை,
தவழ்கின்ற முறுவலுடன் எனக்குளத்தைத்
தந்துவக்கும் எளிய பண்பை
அவிழ்கின்ற உள்ளுணர்வால் தமிழ்தந்த
ஆர்வத்தால் வாழ்த்து கின்றேன். 20

நீண்டதொரு பயணத்தில் நெடுந்தொலைவும்
துயர்பலவும் நீந்தி வந்தோம்
தாண்டியகல் பலவெனினும் தாண்டுதற்கு
வேண்டியவை இன்னும் உண்டு
கூண்டிலுறு பறவைக்குப் பால்பழங்கள்
கொடுப்பதனாற் பயனே இல்லை
வேண்டியவான் வெளியிடத்தே பறந்துசெல
விடுதலைதான் வேண்டும் இங்கே. 21

கூண்டதனைத் திறந்துவிடக் குயிலினங்கள்
உளங்குளிரக், குளிர்ந்த நெஞ்சில்
ஈண்டிவரும் பெருமகிழ்வால் இனியதமிழ்
இசைபாட, இடையீ டின்றி
நீண்டவெளி உரிமைபெற நினைந்திங்கு
நெடிதுழைக்கும் கலைஞ ருக்கு
வேண்டியநற் றுணையாகி விடுதலைக்குப்
புணையாகி வெல்க நண்பா! 22

கழகத்தின் செங்கோலாய்க், கலைஞர்க்கு
வெண்குடையாய்க், கனிந்து நிற்கும்

அழகுக்கோர் அரியணையாய்த், தமிழகத்தின்
    அரணாகி யாரும் வந்து
பழகற்கு நல்லமுதாய்ப் பைந்தமிழின்
    போர்வாளாய்ப், பண்பு சொல்லும்
வழிகட்குத் திருக்குறளாய் வாழ்கின்ற
    அன்பழகன் வாழ்க நன்றே 23

மான்வாழும் மயில்வாழும் மாமலையில்
    மலர்க்குறிஞ்சி சேர்த்து வைத்த
தேன்வாழும் தமிழ்போலத் தித்திப்பான்
    பெயர்வாழ்க, திரியா தென்றும்
வான்வாழும் கதிரவன்போல் வையகத்தைச்
    சூழ்கடல்போல் வளங்கள் ஓங்கி
யான்வாழும் நாளுடனே யாண்டுபல
    வாழ்கவென வாழ்த்து கின்றேன். 24

---

**பாடற் குறிப்பு:—** பேராசிரியர் க.அன்பழகன் மணிவிழாவில் பாடியது—19.12.1982.

## 64. தோள் தந்தான்
**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

பகுத்தறிவுக் கோட்டைக்குள் பயின்றுவரும் வீரனவன்
வகுத்தமைத்த ஆரியத்து வஞ்சனைகள் அத்தனையும்
செகுத்தழித்த பெரியாரைச் சிங்கமெனும் ஐயாவை
அகத்தமைத்து வாழுமகன் அவன்போர்தான் **அன்பழகன்** 1

மண்ணாளும் ஆசையினால் மாற்றார்பின் செலவிழையான்
புண்ணான தமிழினத்தைப் போற்றுவதே தொழிலானான்
தண்ணான தமிழ்மானம் தன்மானம் தழைத்துவர
அண்ணாவின் வழிநடப்பான் அவன்போர்தான் அன்பழகன்! 2

நிலைபொறுக்க முடியாமல் நெருக்கடிகள் வந்தாலும்
தலைவருக்குத் துணைநிற்றல் தார்மறவன் தொழிலாகும்
இலைபொறுக்கும் இயல்புடையோர் ஏகிடினும் நெருக்கடியில்
கலைஞருக்குத் தோள்தந்தான் கழகத்தைக் காத்திருந்தான் 3

கழகத்திற் புயலொன்று கடிதாக வீசுங்கால்
பழமரத்து வௌவால்கள் பறந்தோடிப் போனாலும்
விழுதிருக்கும் ஆல்போல விலகாது நிலைத்திருந்த
அழகுளத்தன் அன்புளத்தன் அவன்போர்தான் அன்பழகன் 4

மான்வாழும் மயில்வாழும் மாமலையிற் சேர்த்துவைத்த
தேன்வாழும் தமிழ்போலத் தித்திப்பான் பெயர்வாழ்க!
வான்வாழும் கதிரவன்போல் வையத்தைச் சூழ்கடல்போல்
யான்வாழும் நாளுடனே யாண்டுபல வாழியவே! 5

---

**பாடற் குறிப்பு:—** பேராசிரியர் க.அன்பழகன் பிறந்தநாள் விழா மலரில் வெளிவந்தது.

## 65. அழகின் சிரிப்பில் கலைஞர்
**(நூல்:—மனிதரைக் கண்டு கொண்டேன்)**

அஞ்சுகத்தின் மடிவளர்ந்தாய், முத்து வேலர்
    அகம்மகிழ நடைபயின்றாய், ஆரூர்ப் பள்ளிப்

பிஞ்சுமனத் தோழருடன் கல்வி கற்றாய்,
பெரியாரின் ஈரோட்டுப் பள்ளி சென்று
நெஞ்சுரத்தைச் சிக்கனத்தைக் கற்றுக் கொண்டாய்,
நெகிழ்ந்துருகும் அண்ணாவின் கருணைமிக்க
நெஞ்சகத்தைக் காஞ்சியிலே பெற்றுக் கொண்டாய்
நெருக்கடியில் சிரிப்பதற்கு யாங்குக் கற்றாய்? 1

மேடையிலே வீசுகின்ற தென்றற் காற்றே
மெல்லியரின் இதழ்விரித்தால் மக்கள் நெஞ்ச
ஓடையிலே மலர்சிரிக்கும், மணம்சி ரிக்கும்,
உகந்தவர்தம் நெஞ்சமெலாம் களிசி றக்கும்;
கோடையிலே சிரித்தமலர் மணத்தை வாரிக்
கொண்டுசெலும் பொதிகைமலைத் தென்றல்; நீயோ
மேடையிலே சிரித்தவர்தம் பணத்தை வாரி
மெதுவாகக் கொண்டுசெலும் ஆரூர்த் தென்றல். 2

செங்கதிரோன் சிரித்துவிடின் புழுக்கந் தோன்றும்
சிறியபனை விசிறிகளின் துணையை நாடும்;
செங்கதிரின் வெயில்காயத் தானே வந்து
சிறியபுழு வீழ்ந்துடலம் சுருண்டு சாகும்;
பொங்கிவரும் நின்சிரிப்பால் பகைவர் நெஞ்சம்
புழுக்கமுறும் விசிறிகளின் துணையை நாடும்;
எங்களுளங் கவர்ந்தவனே பகைப்பு ழுக்கள்
இடந்தெரிய மாட்டாமல் வீழ்ந்து சாகும். 3

திகழ்ந்துவரும் வெண்ணிலவு சிரித்தால் ஒன்று
சேர்ந்திருக்கும் காதலர்க்குக் களிப்பை யூட்டும்;
மகிழ்ந்திருந்து பிரிந்தவர்க்கோ எரிச்சல் ஊட்டும்;
மதியினையே திட்டுகிற மருட்சி யூட்டும்;
முகிழ்த்துவரும் நின்சிரிப்போ நின்னைச் சேர்ந்த
முன்னேற்றக் கருத்தினர்க்கு மகிழ்ச்சி யூட்டும்;
இகழ்ந்துன்னைப் பிரிந்தவர்க்கோ எரிச்ச லூட்டும்;
ஏதேதோ திட்டுகிற மருட்சி யூட்டும். 4

உயர்வுக்கு வானத்தை உவமை சொல்வர்;
உழைத்துவரும் உயர்வுக்கு வானம் நீதான்;
மயிலுக்கு வான்சிரித்தால் தோகை ஆடும்
மாந்தருக்கு நீசிரித்தால் ஓகை கூடும்;
பயமுறுத்தி இடியிடிக்கும் மின்னல் வீசும்
பார்மகிழ மழைபொழியும் வான்சி ரித்தால்;
துயருறுத்த வருபகையை இடித்து மின்னிச்
சொல்மாரி நனிபொழியும் நீசி ரித்தால். 5

பாருக்குக் கடல்காவல்; பைந்த மிழ்ப்பண்
பாட்டுக்கு நீகாவல்; ஆழ்ந்த ஆணி
வேருக்கு மண்காவல்; தமிழர் நாட்டு
வேலிக்கு நீகாவல்; பெருகி ஓடும்
நீருக்குக் கரைகாவல்; கழகத் தோழர்
நெஞ்சுக்கு நீகாவல்; இந்த நாட்டில்
யாருக்கு யார்காவல் என்று மக்கள்
அஞ்சிவரும் இந்நாளில் நீதான் காவல். 6

மணிகொழிக்கும் பொன்கொழிக்கும் சந்த னத்தின்
மணங்கொழிக்கும் எழில்கொழிக்கும் அருவி என்பர்;
அணிகொழிக்கும் பொருள்கொழிக்கும் எழில்கொ ழிக்கும்
அரியதமிழ் மணங்கொழிக்கும் நினது பேச்சில்;

அணில்கொறிக்கும் தீங்கனிகள் தொங்கும் சாரல்
அருவியொரு ஆறாகி வளங் கொழிக்கும்;
அணில்கொறித்த கனிதொங்கும் தமிழர் நாட்டை
அழகாக்கி வளமாக்கும் ஆறும் நீதான். 7

எதிரிகட்கு வல்லினமாய், நின்னை அண்டி
இருப்பவர்க்கு மெல்லினமாய், இரண்டும் இல்லா
நொதுமலர்க்கோ இடையினமாய் மெய்யெ ழுத்து
நுவல்கின்ற மூவினமாய் விளங்கு கின்றாய்!
மதுரைநகர்ப் பாண்டியனார் சேரர் சோழர்
மன்னர்வழி மூவினத்தின் மெய்யும் ஆனாய்!
எதுவரினும் மெய்யாக விளங்கும் உன்னை
எவரெவரோ பொய்யாகப் பேசு கின்றார்! 8

பதியிலுளார் நின்பெயரை மு.க. என்று
பகர்வதற்குக் காரணமென்? முத்து வேலர்
புதல்வரென உணர்த்துதற்கா? இல்லை யில்லை
புலிநிகர்த்த நெஞ்சுடையான் எதிலும் என்றும்
முதல்வர்**கரு ணாநிதி**என் றுணர்த்து கின்ற
முத்திரைதான் அவ்வெழுத்து; மெய்யெ ழுத்தின்
முதலெழுத்தும் நீதானே; உயிராம் அண்ணா
முதலெழுத்தும் உன்னுடன்தான் இணைந்தி ருக்கும் 9

பிணியுற்ற தமிழினத்தைப் பிழைக்க வைக்கப்
பெரியாராம் மருத்துவரோ அறுவை செய்தார்;
தணியட்டும் பிணியென்று மருந்தை அண்ணா
தந்திரமாக் கூட்டுக்குள் அடைத்துத் தந்தார்;
துணிவுற்ற திருமணத்தோய்! நீயோ அந்தத்
தொழிலுடனே வலிக்காமல் ஊசி போடும்
பணிகற்றாய்; பெயர்பெற்றாய், சித்தர் சொன்ன
பச்சிலையும் மூலிகையும் கற்றுக் கொண்டாய். 10

மருத்துவனே பிணியகன்ற மாந்தர் நின்றன்
மருத்துவத்தின் திறங்கண்டு மகிழ்வு கொண்டு
வருத்தமற வாய்விட்டுச் சிரித்தார்; நீயும்
வளர்தமிழ்ச்சொல் வருவாயால் சிரித்து நின்றாய்;
சிறுத்தமதி படைத்தவரோ அதனைக் கண்டு
சிந்தைஎலாம் அழுக்காறு வளர்த்து நின்றார்;
திருத்தமுற மருத்துவத்தைக் கல்லார் இங்குத்
திரிகின்றார் மருத்துவர்போல் எனச்சி ரித்தாய்; 11

முடியரசன் எனும்பெயரைப் பூண்டி ருந்தும்
முடியிழந்து நிற்கின்றேன்; நீயும் இன்று
முடியிழந்து நிற்கின்றாய்; ஆனால் என்போல்
முடிஒன்றும் நரைக்கவில்லை; யாண்டுப் பெற்றாய்?
இடியனைய துயர்வந்து தாக்கும் போதும்
இடியாமல் சிரிப்பதனால் பெற்றாய் போலும்!
முடியிழந்து நின்றாலும் மன்னா நின்றன்
முகத்தழகு சிரித்துவிளை யாடக் கண்டேன். 12

‘சிரிப்பென்னும் மருந்துண்டேன் அம்மருந்தைச்
சித்தர்திரு வள்ளுவனார் தந்தா’ ரென்று
உரைக்கின்றாய் நெஞ்சுக்குள் என்செ விக்குள்
ஒருசிறிது விழக்கேட்டேன்; குறள்நூல் சொல்லி
விரிக்கின்ற பொருளனைத்தும் விரித்துச் சொல்லி
விளக்கிவரும் புலவன்நான்; எனினும் இன்னும்

வருத்திவரும் கவலைக்கு மருந்து கண்டு
வாழ்வதற்குக் கற்கவில்லை; கலைஞன் நீதான். 13

ஒருதுயரம் வந்தாலும் உள்ளம் வாடி
ஒடுங்குகின்றேன் சிரிப்பதற்கோ இயல வில்லை;
வருதுயரம் எதுவெனினும் நிமிர்ந்து நின்று
வாய்விட்டுச் சிரிக்கின்றாய் கலக்க மின்றி;
கருணைநிதி கலங்கிவிடின் கழகத் தோழர்
கலங்குவரே எனஎண்ணி மறைக்கின் றாயா?
வருபவைதாம் வரட்டுமெனை நாட்டுக்காக
வழங்கி விட்டேன் எனஎண்ணிச் சிரிக்கின்றாயா? 14

அறுசமயம் பிறசமயம் வெறுப்ப வன்தான்
ஆனாலும் அன்பழகற்(கு) அருகன் ஆனாய்;
பிரிவுதரும் சாதிக்குப் பகைவன் தான்நீ
பிழையறியாச் சாதிக்கு நண்பன் ஆனாய்;
'உறுதியுடன் விடுதலையைப் பெற்று விட்டோம்
உரிமையுள தென்னரசும் உடையோம்' என்று
முரசொலியை முழக்குகின்றாய் ஆனால் இந்த,
முடியரசன் பாட்டுக்குள் கைதி ஆனாய். 15

சிவபெருமான் குறைமதியைத் தலையில் வைத்தான்;
சிந்தனையால் நிறைமதியைத் தலையில் வைத்தாய்;
சிவபெருமான் தலைமதியன்; நீயோ என்றும்
சிரிக்கின்ற முகமதியன்; அற்றை நாளில்
அவன்சிரித்தான் முப்புரத்தைச் சுட்டெ ரித்தான்;
ஆற்றலுளாய்! நீசிரித்தாய் நம்மை யண்டித்
தவறுசெயும் முப்புரியைச் சுட்டெ ரித்தாய்;
தனிமதியாய்! எமதுதென்னா டுடையாய் போற்றி. 16

பொங்கிஎழும் அலைக்கைகள் எடுத்துச் சென்ற
புகார்கண்டு சிரித்தவன்நீ; படைத்த சிற்பி
பொங்கிவரும் மனக்களிப்பால் நின்னை நோக்கிப்
பூம்புகார்ப் பெருந்தச்சன் என்று சொன்னார்;
இங்கவர்தாம் உளியொன்றும் தந்தா ரல்லர்;
ஆதலினால் மற்றொருவர் உளியை நின்பால்
தங்குதடை யில்லாமல் வீசப் பெற்றுத்
தமிழகத்தை உருவாக்கும் சிற்பி யானாய். 17

'பேருலகில் நீசிரித்து வாழ வேண்டும்
பிறர்சிரிக்க வாழாதே' என்று சொல்லி,
ஆரொருவர் சிரித்தாலும் அவர்சி ரிப்பை
அழித்துவிட்டுத் தாம்மட்டும் சிரித்து நிற்பார்;
சீருடையாய்! நின்னுடனே பிறரும் சேர்ந்து
சிரிப்பதற்கே வாழ்வெடுத்தாய்; எளியர் தாமும்
சீரடைய வாழ்வுபெறச் சிரித்து வாழச்
சிரிக்கின்றாய் வாழ்கின்றாய் வாழ்த்து கின்றேன். 18

மெருகூட்டும் முகங்கொண்டார் மக்கள் மன்றில்
மெய்யேபோல் குண்டுவிடும் இயல்புங் கொண்டார்
திருநாட்டின் மேல்மன்றில் எம்டன் குண்டைத்
தெரியாமல் போட்டாலும் சிரிக்கின் றாய்நீ;
கருவாட்டுக் கடைதிறக்கச் சென்ற போதும்
கருவென்ப துன்பெயரை நினைவில் கூட்டத்
திருநாக்கில் நரம்பின்றி நின்னைத் திட்டிச்
'சிறைவைப்பேன்' என்றாலும் சிரிக்கின் றாய்நீ. 19

பாளைநகர்க் கொட்டிலுக்குள் போவென் றாலும்
பாராளக் கோட்டைக்குள் வாவென் றாலும்
பாளைநிகர் சிரிப்புடனே செல்கின் றாய்நீ
பக்குவஞ்சேர் ஞானிஎன ஆகிவிட்டாய்;
காளைகளுக் குன்பெருமை தெரிய வில்லை
கலைத்துறையின் திலகமுந்தான் அறிய வில்லை;
நாளைவர லாறுரைக்கும் நாய கன்நீ
நான்புகழ்ச்சி சொல்லவிலை உண்மை சொன்னேன். 20

தருக்கடனே அதிகார போதை ஏறித்
தனிக்குடையின் கீழிருந்தோர் கொண்டு வந்த
நெருக்கடியில் சிரித்தவன்நீ; நின்னைக் காண
நிமிர்ந்தெழுந்த கூட்டத்தில் இடித்துத் தள்ளும்
நெருக்கடியில் சிரிப்பவன்நீ; உறுதி யோடு
நிற்பவர்தம் திருமணங்கள் நடத்தி வைத்துப்
பொறுப்புடனே கழகத்தைக் காக்கப் பேச்சில்
பொடிவைத்துச் சிரித்தெமையும் சிரிக்க வைத்தாய். 21

திரையுலகில் பராசக்தி வந்த போதுன்
திறமையெலாம் கண்டவர்கள் புகழ்ந்து நின்றார்;
அரசியலில் பராசக்தி வந்த போதுன்
ஆற்றலெலாம் கண்டவர்கள் வியந்து நின்றார்;
இருபெரிய பராசக்தி வலிமை எல்லாம்
எழுத்தாலே வென்றவன்நீ; இனிமேல் யார்க்கும்
வருமுலகில் இராசக்தி உன்னை வெல்ல;
வருபகைகள் நண்புகொள ஏங்கி நிற்கும். 22

கம்பனொரு கதைசொன்னான்; இராமன் மேலே
கண்வைத்தாள் சூர்ப்பணகை, குறும்பு செய்தாள்;
வம்புபல இழைத்திருந்தாள், இளையோன் கண்டு,
வந்தவளை மூக்கறுத்தான்; அதனை நோக்கி
அம்புவிடும் வில்லாளன் இராமச் சந்த்ரன்
அரும்பிவரும் புன்முறுவல் பூத்து நின்றான்;
நம்பியவள் மூக்கறுத்தான் தம்பி; வாயில்
நகைதவழச் சிரித்திருந்தான் அண்ணன் என்றே; 23

தம்பிகரு ணாநிதியின் ஆட்சி கண்டு
தவறாகக் கண்வைத்தார் நேரு செல்வி;
வம்புகளை இழைத்திருந்தார்; குறும்பும் செய்தார்;
வஞ்சமனங் கொண்டவரைத் தஞ்சை மண்ணை
நம்பியிங்கு வந்தவரை மூக்க றுத்தார்
நாடாளும் முதலமைச்சர் இராமச் சந்த்ரன்
நம்பியவர் மூக்கறுத்தார் அண்ணன்; வாயில்
நகைதவழச் சிரித்தாய்நீ தம்பி இன்று. 24

சிரிக்கின்ற முகம்வாழ்க, தமிழை என்றும்
சிந்திக்கும் அகம்வாழ்க, பகைகள் காணின்
நெரிக்கின்ற புருவங்கள் இனிது வாழ்க,
நீள்நிலத்தைச் சுமக்கின்ற தோள்கள் வாழ்க,
குறிக்கின்ற குறிதவறாப் பார்வை கொண்ட
குளிர்விழிகள் வாழியநின் கொற்றம் வாழ்க,
இருக்கின்ற எமக்கெல்லாம் துணையே வாழ்க
எமதுயிரின் உடன்பிறப்பே என்றும் வாழ்க. 25

திருவிடத்தின் இனவுணர்வுக் காப்பி யத்தைத்

தெளிவுபெற எழுதியவர் பெரியார்; அந்தப்
பொருளெடுத்து விளக்கவுரை எழுதித் தந்து
புத்துணர்வை ஊட்டியவர் அறிஞர்; மக்கள்
மருளொழிய, அறிவொளிகள் பரவி நிற்க,
மானமிகு காப்பியத்தைக் கற்றுத் தந்து
வருபவர்தாம் நம்கலைஞர்; இந்த ஆசான்
வாழ்கவென வாழ்த்துவது கடமை யன்றோ? 26

பேருருவ மரங்களையும் தன்னுள் கொண்ட
பெருமைகொளும் வித்தானார் பெரியார்; எங்கள்
பேரறிஞர் அவ்விதையில் முளைத்தெ ழுந்த
பேரால மரமாக விளங்கி நின்றார்;
பாரறிய அதுபடர்ந்து நிற்கும் போது
பக்கத்து விழுதாக நின்று காக்கும்
வீறுடையார் நம்கலைஞர் அன்றோ? அந்த
விழுதுக்கு நன்றிசொலி வாழ்த்தி நிற்போம்; 27

இனவுணர்வுச் சிந்தனையாம் அருவி வெள்ளம்
ஈரோட்டுப் பெருமலையில் தோன்றிக் காஞ்சி
மனவுணர்வில் வற்றாத ஆறாய் ஓடி,
மாநிலத்தார் நெஞ்சகத்தை நன்செய் யாக்கிக்;
கனவுகளை நனவாக்கி வருதல் கண்டோம்;
கார்குலவி நீர்பொழியும் ஆரூர் நெஞ்சம்,
புனல்பெருகும் ஆற்றுக்குக் கரையாய் நிற்கும்;
பொழுதெல்லாம் காத்திருக்கும்; வாழ்க நெஞ்சம் 28

காப்பியத்தைக் கற்பிக்கும் ஆசா னாகிக்,
கருத்துநிழல் பரப்புகின்ற ஆலம ரத்தைக்
காப்புறுத்தத் தாங்குகிற விழுதும் ஆகிக்,
களமனைத்தும் வளப்படுத்தும் ஆற்றைக் காக்க
யாப்பமைந்த கரையாகிக், கழகம் காக்கும்
யாளிக்கு நிகராகும் கலைஞர் தம்மை
நாப்புலத்தால் மனப்புலத்தால் வாழ்த்தி நிற்போம்
நாம்வாழ எந்நாளும் போற்றி நிற்போம். 29

---

**பாடற் குறிப்பு:–** சென்னையில் 2.6.79 அன்று தி.மு.க. மாநிலத் தலைமை இலக்கிய அணி நடத்திய கலைஞர் பிறந்த நாள் விழாக் கவியரங்கில் தலைமையேற்றுப்பாடியது. தலைவர் கலைஞரும் பங்கேற்றார்.

## 66. முறுவலிக்கும் இளையவனே

**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

சுறுசுறுப்பின் வார்ப்படமே சூடுதரும்
அரசியலைச் சொல்லும் ஏடே
விறுவிறுப்புச் சொற்போரில் விளையாடும்
கூர்வாளே வேதப் போக்கால்
கிறுகிறுத்த தமிழினத்தின் கேடகற்றி
மேலுயர்த்துங் கிழவா என்றும்
முறுவலிக்கும் இளையவனே முத்தமிழ்தேர்
மு.க.வே உடன் பிறப்பே.... 1

அன்றொருநாள் ஆட்சிபெறும் ஆணவத்தார்
உனைச்சிறையில் அடைத்து வைத்தார்
என்றறிந்த நல்லிளைஞர் எரியூட்டித்

தமதுடலை எரித்துக் கொண்டார்;
ஒன்றிரண்டா? அம்மாவோ ஒன்பதின்மேல்
எண்ணுடையார் உலகில் எங்கும்
என்றுமொரு தலைவர்க்கும் இல்லாத
பெருமையைநீ ஏற்றாய் ஐயா! 2

புகழ்மொழியால் நண்பர்யார் புகுகின்ற
பகைவர்யார் புரிய வில்லை;
இகழ்மொழியும் புகழ்மொழியும் இரண்டுமொரு
நிகரெனவே எண்ணி நின்றால்,
பகைபுகஓர் வழியில்லை; பணிதொடர
இடரில்லை; பழகி என்னை
வகைதெரிந்து கொண்டவன்நீ வாய்மொழியை
மனங்கொள்க வாழ்க நன்றே. 3

எங்கெங்கே தமிழ்மாந்தர் இவ்வுலகில்
இருக்கின்றார் இருப்போர் யாரும்
இங்கேதான் பார்க்கின்றார்! உன்னைத்தான்
பார்க்கின்றார்! இனிமேல் நீதான்
பங்காளன் எனநம்பிப் பரிவோடு
பார்க்கின்றார்; பார்ப்போர் வெற்றிச்
சங்கோதி வாழ்த்தெடுக்கும் நன்நாளிற்
பல்லாண்டு சாற்று கின்றேன். 4

---

**பாடற் குறிப்பு:–** கலைஞருக்குப் பிறந்த நாள் வாழ்த்து.

## 67. தூற்றலுக்குத் துவளாதான்
**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

வென்றவனை வெங்களத்தில் நின்றவனை
வேதனைகள் பலவும் ஏற்று
நன்றெனவே சிரித்தவனை நாளெல்லாம்
உழைத்தவனை நாட்டுக் காக
என்றுளமே மகிழ்ந்தவனை என்மக்கள்
அரியணையில் ஏற்றி வைத்தார்
நன்றியினை அவர்க்குரைப்பேன் நற்றமிழால்
வாழ்த்துரைப்பேன் நாடு வாழ 1

எனதுதமிழ்த் திருநாடே எனையீன்ற
தாய்நாடே இதற்கு முன்னர்
நினதுமனம் புண்ணாக நின்றவர்கள்
இன்றில்லை நீங்கி விட்டார்;
முனமொருகால் ஆண்டவன்தான் முதலமைச்சாய்
மீண்டுமிங்கு முனைந்து வந்தான்
மனமகிழத் தலைநிமிர்வாய் மனப்புண்ணை
ஆற்றிடுவான் மாதே வாழி 2

சுடுகணைகள் எத்தனைதான் சொரிந்தாலும்
துவண்டுவிடான் துணிந்து நிற்பான்
விடுமுறைகள் அவற்கில்லை வேளைதொறும்
பணிபுரிவான் வெற்றி கொள்வான்
நடுவுநிலை பிறழாதான் நாட்டுநலங்
கருதிடுவான் நன்றே செய்வான்

தொடுவானச் செங்கதிராய்த் தோன்றிடுவான்
    சுடரொளியைத் தொழுவோம் வாரீர். 3

முன்னையெலாம் வடவருக்கு முன்னின்று
    கைகட்டி முடங்கி நிற்போம்
பின்னைஅது மாறியது; பேரன்பு
    கொண்டுநமைப் பேணி வந்து
கன்னல்மொழி பேசுகின்றார் கைகொடுக்க
    வருகின்றார் வடபு லத்தார்;
இன்னநிலை வந்ததுதான் எப்படியோ?
    இக்கலைஞன் ஆற்ற லன்றோ! 4

ஆற்றலுக்குத் தலைமகனை அஞ்சாத
    அரியேற்றை ஆண வத்தார்
தூற்றலுக்குத் துவளானைத் தொண்டர்க்குத்
    துணையானைத் தொடுத்த போரில்
மாற்றலரை அஞ்சானை மதிமிகுத்த
    திறலானை மானங் காக்க
ஆற்றிவரும் பணியானை அன்னைமனங்
    கொண்டவனை வாழ்த்த வாரீர். 5

---

**பாடற் குறிப்பு:–** மீண்டுங் கலைஞர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது பாடியது–24.1.1989.

## 68. என்றும் உயர்க எழில் முல்லை

**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

**முல்லைச் சரத்து**க்கு வெள்ளி விழாவென்னும்
சொல்லைச் செவிமடுத்தேன் சொக்கிநின்றேன் – புல்லிதழை
வேட்டலையும் கூட்டத்துள் வெள்ளிவிழா நாள்வரையில்
நாட்டியவன் யாரென்றேன் நான் 1.

முல்லைச் சரந்தொடுப்பான் முத்தமிழ்க்குத் தீங்குவரின்
சொல்லிற் சரந்தொடுப்பான் தூயனவன் – நல்லநல்ல
பாட்டுந் தொடுத்திருப்பான் பாவேந்தின் **பொன்னடியான்**
நாட்டினன்காண் என்றார் நயந்து. 2

பொன்னடியான் வாழ்கஎனப் பூரிப்பால் நான்மொழிந்தேன்
பின்னடையான் ஆள்வினையைப் பேணிநின்றேன் – நன்னடையான்
என்றும்உயர்க எழில்முல்லைச் சரமென்றேன்
ஒன்றும் உணர்வால் உவந்து. 3

---

**பாடற் குறிப்பு:–** முல்லைச்சரம்' இதழுக்கு வெள்ளி விழாக்கண்ட வாழ்த்து.

## 69. வாழிய கவிதை

**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

பாழியல் வகுக்கும் ஏடு
    படித்திட விழையும் நாட்டில்
ஏழிரண் டாண்டு காலம்
    இடையறாக் '**கவிதை**' என்னும்
தாளிகை கண்ட தென்றார்;
    சற்றுநான் திகைத்துப் போனேன்;
வாழிய என்று சொன்னேன்
    வளர்த்தவர் துணிவைக் கண்டு. 1

கவிதையை வளர்க்கும் பாங்கு
கற்றிலா வணிக மாக்கள்
செவியினிற் புகுந்து பாய்ந்து
சிந்தையைத் திருத்தும் வண்ணம்
குவியிடர் உற்ற போதும்
குலைவுறாக் 'கவிதை' என்னும்
சுவடியை நல்கி நிற்கும்
தோழர்நம் **தெசிணி** வாழ்க 2

அரைகுறை யாக வெந்த
அரிசியைச் சோறென் றோதிப்
புரைபடும் அறிவைக் காட்டும்
போலியர் சிலராற் பாட்டின்,
நெறிமுறை பிறழ்தல் கண்டேன்;
நிலைதடு மாறும் அந்த
உரைநடைக் கூட்ட மெல்லாம்
உணர்ந்திடக் 'கவிதை' வாழ்க. 3

---

**பாடற் குறிப்பு:–** 'கவிதை' இதழுக்கு வாழ்த்து.

## 70. உலகத் தமிழ்க் கழக வாழ்த்து
**(நூல்:–மனிதரைக் கண்டு கொண்டேன்)**

கரும்பூறும் சாறுநிகர் தமிழைக் காக்கும்
கருத்துடன்முத் **தமிழ்க்கழகம்** இங்குக் கண்டீர்;
நரம்பேற உணர்வூட்டி, அறிவும் ஊட்டி,
நன்மானம், பகுத்தறிவுச் சுடருங் காட்டிச்
சுரும்பாக உழைக்கின்றீர் வாழ்த்து கின்றேன்;
சொல்வேந்தன் எங்குலத்துத் தலைவன் பேரால்
அரங்கேறி விழாவெடுக்க முயல்வீர்! உம்மை
அன்பூறும் செந்தமிழால் வாழ்த்து கின்றேன்.

---

**பாடற் குறிப்பு:–** பெங்களூர் உலகத் தமிழ்க் கழகத்தில் நடைபெற்ற பாவேந்தர் விழாக் கவியரங்கத் தலைமைக் கவிதையில் உலகத் தமிழ்க் கழகத்தை வாழ்த்திப் பாடியது – 25.08.1979.